299

ஓம்.

சேந்திலாண்டவன் துணை.

வீரபத்னி

— அல்லது —

வினையின் விளைவு

ஓர் காவியத் தமிழ் நாடகம்.

நாடக நூலாசிரியரும் அமெச்சூர் நடருமாகிய,

தஞ்சை

N. விசுவநாத ஐயர்

இயற்றியது.

இந்நூலாசிரியர் இயற்றிய இதர தமிழ் நாடகங்கள்:—

ராஜசேகரன், வீரஸிம்ஹன், ஸ்ரீ ராமதாஸ்,
அப்பூதி அடிகள், மாத்ரு பக்தி,
ஸ்ரீ கண்ணப்பன், முதலியன.

பதிப்பகம்.

தஞ்சை " ஸ்ரீ ஷண்முக அச்சுக்கூடம் "

1936

காபிரைட் ரெஜிஸ்டர்டு]

[விலை அணா 12

ஸ்ரீ :

தேவி மீனாட்சியின் திருவடி நிழல் எய்திய

என் தாய்

R. நாகசுப்பு அம்மைக்கும்,

சிவகதியடைந்த

என் தந்தை

இராவ் சாஹிப்

R. நாராயணஸ்வாமி அய்யர்

(பீ. ஏ., ரிட்டையர்டு டெப்டி கலெக்டர்) அவர்களுக்கும்,

இச்சிறிய நூலை

பக்தியுடனும் பணிவுடனும் சமர்ப்பிக்கின்றேன்.

ஓம் தத் ஸத்.

FOREWORD.

No popular dramatic story has suffered at the hands of the producers so badly as that of **Kovalan** which emanates from the gem of Dravidian Classic, the **Silappathikaram**. It cannot be disputed that such a sublime plot is distorted and mangled on the modern stage. Despite the fact that Kovalan, the oft-enacted drama, is the craze of all theatre lovers, none has so far cried halt to this deplorable presentation; nor has any one essayed to rewrite or reshape the marvellous piece in a brilliant and fascinating form with powerful and poignant situations and striking dramatic effect worthy of the remarkable original poem.

Sad to note that a woeful neglect of a close and careful study of the ancient classic has resulted in such an unhappy and deformed version. Even the amateur organisations wedded to the lofty ideals of reforming the stage has been sinners in this respect. Sadder still do we feel to find the enlightened and enthusiastic Film Producers falling a prey to such a temptation as evidenced by their own versions which are worse than those adapted by the-stage managers, in that they too have not cared to bestow thought and attention to the moral aspect of the plot and its fidelity to the original source.

Inspired by the glorious picture painted so beautifully by the Poet Royal **Elango Adigal** in his immortal Silappathikaram, Mr. N. Viswanathan, the young actor playwright, has ventured a faithful rendering of the original plot in his **Veerapathni** or **The force of fate**.

My hearty congratulations to my friend for his noble and laudable endeavour to present plays adhering faithfully to the original sources. With these few words I commend this play to all lovers of Art.

D. MAHALINGAM.

உ

சேந்திலாண்டவன் துணே.

முன்னுரை.

குலமகளாகிய கண்ணகியின் கற்பின் திறத்தையும், தலைமகனுகிய கோவலன் தகைமையையும், மலர் மகள் வனப்பு வாய்ந்த மாதவியின் மாண்பினையும், அக்காலத்திய மூவேந்தரின் தன்மையையும், தமிழ்க் கலைக்கே ஓர் தனிச் சிறப்பு அமையுமாறு. சேரமன்னனின் சகோதரராகிய **இளங்கோ அடிகள்** நன்கு விளக்கி எழுதிய **சிலப்பதிகாரம்** என்னும் பெருங்காப்பிய நூலை, புகழும் அனுபவமும் பெற்ற **தொழில் நடர்களும்**, நாடகக் கலையின் வளர்ச்சியே தமது நன்னோக்கமாகக் கொண்ட **அமெச்சூர் நடர்களும்**, "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்ற கொள்கையைப் பெரும் பாலும் தழுவி சினிமாப்படம் எடுக்கும் செல்வந்தர்களும் தூய்மையும், பெருமையும், உண்மையும், கெடமாற்றி இக் **கோவலன்** கொலைச் சரிதையைக் **கோவலன் சரிதைக் கொலையாகச்** செய்து விட்டதைக்கண்டும்; கோவலன் கதைக்கே முதல் நூலாகிய சிலப்பதிகாரம் எளிதில் அறிய முடியாத தமிழ்ச் செய்யுளாக இயற்றப் பெற்றிருப்பதால் யாவரும் எளிதில் அதன் உண்மை வரலாற்றை அறியுமாறும்; தற்கால நாகரீகத்தின் நன்மை தீமைகளை விளக்கும் சீர்திருத்த நாடகங்களே இக்காலத்திற்கு மிகவும் தேவை என்பதை அறிந்திருந்தும்; மிகப்பழங் கதையாகிய இச்சரிதையை **வீரபத்னி** அல்லது **வினையின் விளைவு** என்னும் பெயருடன் வெளியிடலாயினேன். எனது இம்முயற்சி எத்துணைப்பயன் அளிக்கும் என்பதை இதனைக்கண்ணுறும் அல்லது நடிக்கும் நண்பர்களே அறியவல்லார்.

இந்நூலை வெளியிடுதற்குப் பலவிதத்தும் ஊக்கமும் உதவியும் யளித்த எனது நண்பர் ஸ்ரீமான் V. **சேஷாத்ரி சர்மா** அவர்களுக்கும், முகவுரை அளித்த, தஞ்சை (Y. M. L. A.) ஸ்ரீ குமரகான சபையின் காரியதரிசி ஸ்ரீமான் D. **மஹாலிங்கம் பிள்ளை** B. A., B. L., அவர்களுக்கும், எனது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இந்நாடகத்தையாவது அல்லது எனது ஏனைய நாடகங்களையாவது நடிக்க விரும்புவோர், ஒவ்வொரு முறையும் **என் முன் அனுமதிபெற்று, நான் விரும்பும் ஆசிரியர் கட்டணத்தைச் செலுத்தி உத்திரவு பெற்ற பின்னரே நடித்தல் வேண்டும்** என்பதை அறியுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஸ்ரீ ஸ்கந்த பவனம், தெற்கு அலங்கம், தஞ்சாவூர்.

N. விசுவநாதன்.
11—7—36

நாடக பாத்திரங்கள்.

கரிகால் வளவன்	...	சோழ அரசன்
நெடுஞ்செழியன்	...	பாண்டிய அரசன்
கோவலன்	...	ஓர் பெரும் வணிகன்
மாடலன்	...	ஓர் அந்தணன். கோவலனின் நண்பன்
கௌசிகன்	...	ஓர் அந்தணன்
மாதவர்	...	ஓர் எளிய வயோதிக அந்தணர்
சங்கரர்	...	ஷை ஷை
சோழ	...	பொற்கொல்லனின் பணியாளன்
துடிலன்	...	பாண்டியனின் காவலர்கள்
பிரதாபன்	...	
மாதவசீலர்	...	சோழ அரசனின் அமைச்சன்
குந்தலசெட்டி	...	ஒரு வணிகன்
கிட்டு	...	கௌசிகரின் புதல்வன்
பொற்கொல்லன்	...	பாண்டியனின் பொற்கொல்லன்
இரங்கன்	...	ஓர் துன்மார்க்கன்
கண்ணகி-வீரபத்னி	...	கோவலனின் மனைவி
மாதவி	...	கோவலனின் காதல் கணிகை
கவுந்தி அடிகள்	...	ஓர் தவமூதாட்டி
மதுராபதி	...	மதுரையைக்காக்கும் தெய்வம்
வசந்தமாலை	...	மாதவியின் பிரியதோழி
கோப்பெருந்தேவி	...	பாண்டியனின் மனைவி
சித்திராபதி	...	மாதவியின் தாய்
மாதரி	...	இடைச்சியர் தலைவி
நீலி	...	ஓர் துன்மார்க்கி
தேவந்தி	...	கண்ணகியின் பார்ப்பனத் தோழி
ஐயை	...	மாதரியின் மகள்
இராதை	...	ஓர் யாதவப்பெண்

இன்னும், கட்டியக்காரன், காவலர்கள், ஆயர்ப்பெண்கள், வாத்தியக்காரர்கள், சபையோர்கள், நகரமாந்தர்கள், குறவர்கள், முதலானோர்.

உ

சேந்திலாண்டவன் துணை.

வீ ர ப த் னி

அல்லது

வினையின் விளைவு.

களம் 1.

இடம் :- கோவலன் வீட்டில் ஓர் அறை.

காலம் :- மாலை.

நடர் :- கண்ணகி, தேவந்தி, கோவலன், மாதவர், காவலன்.

கண். (அம்பிகையை வணங்கி எழுந்து) தாயே! ஜகதீஸ்வரி! என் பிராண நாதருக்கு நீண்ட ஆயுளையும் குறையாத செல்வத்தையும் அளித்து ஆட்கொள்ள வேண்டும்.

(மீளவும் வணங்க, தேவந்தி பிரவேசித்தல்.)

தேவ. ஆ! இந்த இளம் வயதில், நம் தோழி கண்ணகி அம்பிகையிடத்தில் என்ன பக்தி வைத்திருக்கின்றாள்! இத்தகைய உத்தமிகளுக்காகவன்றோ நாட்டில் மழை பொழிகின்றது. கண்ணகி! உன் செய்கைகள் எனக்கு எப்பொழுதும் இன்பத்தைத் தருகின்றன. நீயும் உன்

கணவனும், பூவும் மணமும் போல் ஒன்றுபட்டு அன்புடையவர்களாய் நெடுங்காலம் வாழ்வீர்களாக.

கண். தேவந்தி! உள்ளன்புடன் வெளியிடும் உன் ஆசி எனக்குப் பயனை அளிக்கும் என நான் நம்புகின்றேன். ஏன் இன்றைக்கு இவ்வளவு நேரம்? உன்னுடன் தினம் சிறிது கோமாவது பொழுது போக்கா விட்டால் என் மனம் சமாதானப் படுவதில்லை.

தேவ. எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. பால்ய ஸ்நேகமல்லவா, நம்முள் இவ்வித உணர்ச்சியை உண்டாக்குகின்றது. கண்ணகி! நான் முன்பே ஒருமுறை வந்தேன். உன் மாமனும், மாமியும் இங்கு வந்திருந்ததை அறிந்து, போய் விட்டேன்.

கண். அவர்கள் இருந்தால் என்ன. ஐயோ பாவம். என் மாமியார் உன்னைப் பார்க்க எவ்வளவு ஆவல் கொண்டிருந்தார்கள் தெரியுமா. மற்றொரு சமயம் அவர்கள் இங்கு வந்தவுடன் உனக்குத் தெரிவிக்கின்றேன். அப்பொழுதாவது நீ அவசியம் வரவேண்டும்.

தேவ. நிச்சயம் வருகின்றேன்! ஆமாம்! அவர்கள் வந்தார்களே. என்ன விசேஷம்?

கண். விசேஷம் ஒன்றும் இல்லை. நாங்கள் எப்படி இல்லற வாழ்க்கையை நடத்துகின்றோம், என்பதைக் கண்டு களிக்க வந்தனர். வேறொன்றுமில்லை.

தேவ. கண்ணகி! மெத்த சந்தோஷம், நேரமாகின்றது. யான் சென்று நாளைக் காலை வருகின்றேன். உன் கணவர் வரும் நேரமாயிற்று.

கண். சரி உன் இஷ்டம். நாளைக்குச் சற்று சீக்கிரமாகவே வந்து விடு. (குங்குமம் தாம்பூலம் அளித்தல்.)

தேவ. அப்படியே ஆகட்டும், போய் வருகின்றேன். (செல்லல்)

கண். பால்யத்திலிருந்து, இப்பிராமணப் பெண், நம்மிடம் எவ்வளவு அன்புடன், தன் சீலம் தவறாது பழகி வருகிறாள். ஆ! நட்பின் பெருமையே பெருமை. (கோவலன் பிரவேசம்) காதலா! அமருங்கள். (வணங்கி) இன்றைக்கு ஏன் இவ்வளவு நேரம்?

கோவ. கண்ணகி! நாளைக் காலையில் நம் கப்பல் துறைமுகம் விட்டு நீங்குவதால், அருகில் நின்று வேண்டிய வியாபார சாமான்களை ஏற்றிவரச் சற்று நேரமாயிற்று. வரும் வழியில், நண்பன் மாடலனோடு சிறிது நேரம் சம்பாஷித்து வந்தேன்.

கண். நாதா! இனி இப்படி நேரங்கழித்து வருவீர்களேயாயின், நான் மிகவும் துயர் அடைவேன். இனி விளக்கு வைப்பதற்கு முன் இங்கு வந்துவிட வேண்டும்.

கோவ. கண்ணே, அப்படியே ஆகட்டும். ஆ! இவளன்றோ தர்ம பத்தினி. என் கண்ணகி! உனக்கு உவமையாக எதனைச் சொல்வேன். நினது சிறந்த குணங்களை எவ்விதம் புகழ்வேன்! உனது இன்பம் நிறைந்த அன்பினை எவ்வாறு மகிழ்வேன். சுருங்கக் கூறுமிடத்து, உன்னைப் புகழ்ந்துரைக்கப் போதிய கல்விச் செல்வம் என்னிடம் இல்லை யென்றே நினைக்கின்றேன்.

கண். காதலா! கலைகளை நன்கு அறிந்த தாங்கள் இவ்வளவு சிறப்பித்துக் கூறும்படியான பெரும் வாழ்வைப் பெற்ற நாயேன், தங்களைக் கணவனாகப்பெற முற்பிறப்பில் எவ்வளவு புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

(ஓர் காவலன் பிரவேசம்.)

காவ. என் ஐயனே! ஓர் வயோதிகப் பிராமணர் தங்களைக் காண விரும்புகிறார்.

கோவ. என்னையா! இதோ வந்தேன். (எழுந்து சென்று மாதவரை அழைத்து வருதல்) அந்தணரே! அமருங்கள். அடிபணிகின்றேன்.

(கோவலனும் கண்ணகியும் வணங்கல்)

மாத. தீர்க்க சுமங்கலீ பவ! தீர்க்காயுஷ்மான் பவ!

கோவ. பெரியீர்! தாங்கள் எங்களை ஓர் பொருட்டாக எண்ணி, இங்கு வந்தது எங்கள் பாக்கியம். அடியேனால் தங்களுக்கு எவ்விதமான உதவி வேண்டுமென்று தெரிவிப்பீர்களேயாயின், அதனைச் செய்து முடிக்கக் காத்திருக்கின்றேன். தயை செய்ய வேண்டும்.

மாத. ஆஹா! இவன் அன்றோ தர்மிஷ்டன். நம் குறிப்பறிந்து பேசுகின்றான். அன்பு, அருள், ஈகை முதலியவைகளிற் சிறந்த கோவல! நீயே புத்திமான். அப்பா! நான் காசியிலிருந்து வருகின்றேன். இவ்வுயிர் இவ்வுடலை விட்டு நீங்குவதற்குள்ளாக, ஸேதுவிற்கு செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் பிரயாணம் செய்து வருகின்றேன். கையிலோ பணம் இல்லை. உடலிலோ வலு இல்லை. ஆதலின் என்னை ஸேதுவரைக் கொண்டுபோய் விட ஏற்பாடு செய்வாயாகில், என் ஆத்மா கடைத்தேறும். உனக்கும் புண்ணியமுண்டு.

கண். ஐயோ பாவம்! நாதா! இவருக்கு நாம் அகத்தியம் உதவிபுரிய வேண்டும். அப்பொழுதுதான் என் மனம் சந்தோஷமடையும்.

கோவ. கண்ணே! அவ்விதமே செய்வேன். கவலைப்படாதிரு. அந்தணர் பெரும! தாங்கள் விரும்பியபடியே, தங்களை ஸேதுவரையில் ஸௌகரியமாய்க் கொண்டுவிட அடியேன் ஏற்பாடு செய்கின்றேன். அதுவரை என் முன்னோர்கள் கட்டிய அந்தணர் விடுதியில், என் விருந்தினாக இருக்க வேண்டுகின்றேன்.

மாத. அப்பா! மெத்த சந்தோஷம். நீ க்ஷேமமாக இருக்க வேண்டும்.

கோவ. காவலா! இப்பெரியாரை அந்தணர்கள் தங்கும், நம் விடுதிக்கு அழைத்துச் சென்று வேண்டிய உபசரணைகள் செய்யுமாறு, யான் கட்டளையிட்டதாக மணியக்காரரிடம் தெரிவி.

மாத. அப்பா! நான் வருகின்றேன். உங்களுக்கு ஸர்வ மங்கள முண்டாவதாக.

(காவலனுடன் செல்லல்)

கோவ. கண்ணகி! நான் உடனே நம் சத்திரம் சென்று, அங்கு வந்து தங்கியிருக்கும், யாத்திரீகர்களை உபசரித்து வெகு சீக்கிரம் வருகின்றேன். அதுவரை, நீ உன் சேடியர்களுடன் உல்லாசமாகக் காலம் கழிப்பாய்.

கண். அன்பரே! சீக்கிரமே சென்று வாருங்கள். காலம் போக்கி வருவீராயின், உம்மைப் பிரிந்து தனிமையாகத் தவிக்கும் யான் மிகவும் வருந்த நேரிடும்.

கோவ. பிரியே! காலம் கடவாமல் எவ்வளவு சீக்கிரம் வர இயலுமோ, அந்நேரத்திற்குள் வந்து சேருகின்றேன். வருந்த வேண்டாம்.

(செல்லல்)

கண். ஆ! இவரை விட்டுப் பிரிவதென்றால் முடியவில்லையே! என் செய்வேன். ஸரி. சேடிகளுடன் பேசிக் கொண்டிருப்போம்.

(உட் செல்லல்)

[முதற்களம் முடிகின்றது.]

களம் 2.

இடம் :- காவிரிப்பூம்பட்டினத்தில் ஓர் தெரு.

காலம் :- மாலை.

நடர் :- மாடலன், கோவலன், குந்தல செட்டி.

(மாடலன் ஓர் புறம் செல்ல, குந்தலசெட்டி எதிர் புறமாய்ச் செல்லல்)

குந்த. (மாடலன் தன்னைக் கவனியாது செல்வதை அறிந்து) மாடலரே! மாடலரே! என்ன. உங்கள் தரிசனம் கிடைப்பதே அரிதாகி விட்டதே. பார்த்தும், பார்க்காதது போலச் செல்லுகின்றீர்களே.

மாட. குந்தலரே! உண்மையில் நான் உம்மைப் பார்க்கவில்லை. இதுவரை என் ஆப்த நண்பன் கோவலன் துறைமுகத்திற்கு வரவில்லையே! என்ன காரணமாயிருக்கலாம் என யோசித்துக் கொண்டே சென்றேன். அதனால் உம்மைக் கவனிக்கமுடிய வில்லை. தாங்கள் எங்கே செல்லுகிறீர்கள்?

குந்த. நம் நகர் தாஸி சித்ராபதி, தன் அழகிய புதல்வி, மாதவியை, நாளைக் காலையில், நம் அரசர் ஸபையில், நாட்டியமாடும்படி செய்வதற்கு அனுமதி பெற்றிருக்கிறாள். இன்றைய தினம், அவள் வீட்டில் ஒத்திகை நடக்கிறது. எனக்கு இந்த நாட்டிய சாஸ்திரத்தில் கொஞ்சம் பைத்தியம் உண்டு என்பதை அறிந்த சித்திராபதி என்னை எப்படியும் இன்று வரும்படி பல தடவை கூறினாள் அதனால் அங்கு செல்லுகின்றேன். ஏன், உங்களுக்கும், கோவலனுக்கும், அவள் அழைப்பு ஓலை அனுப்பியிருப்பாளே.

மாட. ஆம். அனுப்பியிருக்கின்றாள்.

குந்த. அப்படியாயின், தாங்கள், கோவலனுடன், அவசியம் அங்கு வருவீர்களென்று நம்புகின்றேன்.

மாட. எனக்கு இவ்விஷயங்களில் அவ்வளவு பிரியமில்லை. எனினும் கோவலன் விருப்பப்படி நடந்து கொள்ளுகின்றேன்.

[கோவலன் பிரவேசம்)

கோவ. ஆ நண்பா. மாடலா! ஏன் இங்கு நிற்கின்றாய்?

மாட. உன்னைத் தேடியே வந்தேன். வழியில் இவர் பிடித்துக் கொண்டார்.

கோவ. என்ன குந்தலரே. க்ஷேமந்தானே.

குந்த. க்ஷேமந்தான்.

கோவ. ஏதாவது விசேஷமுண்டா?

குந்த. விசேஷமென்ன! நாளைய தினம் அரசர் ஸபைக்கு வருவீர்களல்லவா?

கோவ. ஏன், என்ன விசேஷம்?

குந்த. ஆடல் பாடல்களிற் சிறந்த, மாதவியின் நாட்டியக் கச்சேரியல்லவா நாளைக்கு. ஏன், உங்களுக்கு அழைப்பு ஓலை வரவில்லையோ?

கோவ. ஆம். வந்தது. நான் அவசியம் ஸபைக்கு வருவேன் அதிருக்கட்டும். உமது வியாபாரம் இப்பொழுது எப்படி நடக்கிறது?

குந்த. மிகவும் நஷ்ட மடைந்து விட்டேன். தயை செய்து இப்பொழுது முன்போல், ஒரு 500 பொன் கழஞ்சுகள் கொடுத்து உதவினால் உங்களுக்கு மிகவும் புண்ணியமுண்டு.

கோவ. ஏனையா, முன்பு கொடுத்த கடனையே நீர் இன்னும் கொடுத்த பாடில்லையே. அதற்குள்ளாகப் புதிய கடன் கேட்கின்றீர்களே. வெகு நன்று! சீக்கிரமே பழைய கடனைத் தீர்க்க ஏற்பாடு செய்யுங்கள். மாடலா! நேரமாகின்றது. வா, நாம் கடற் கரைக்குச் செல்வோம்.

(மாடலனும் கோவலனும் செல்லல்)

குந்த. இதென்ன கஷ்டம். கொடுத்த கடனைக் கேட்கின்றான். அப்படியா ஸமாசாரம். இனி இவனிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பது எனக்குத் தெரியும். நேரமாகின்றது. சித்திராபதி நமக்காக காத்துக் கொண்டிருப்பாள்.

(செல்லல்)

[இரண்டாங் களம் முடிகின்றது.]

களம் 3.

இடம் :- *கரிகால் வளவன் ஸபா மண்டபம்.*

காலம் :- *காலை.*

நடர் :- கோவலன், மாடலன், குந்தல செட்டி, மாதவசீலர், மாதவி, சித்திராபதி, வஸந்த மாலை, கரிகால் வளவன், கட்டியக் காரன், ஆடல் பாடல் ஆசிரியர்கள், ஸபையோர்கள் முதலானோர்கள்.

(**கோவலன், மாடலன், குந்தலசெட்டி, மந்திரிகள், பிரதானிகள், பிரபுக்கள், காவலர்கள்** *முதலானோர் வீற்றிருத்தல்*)

(**கட்டியக்காரன்** *பிரவேசித்தல்*)

கட்டி. *பராக்! பராக்!! இராஜாதி இராஜன், இராஜ மார்த்தாண்டன், இராஜ கோலாகல கம்பீரன், இராஜஸிம்ஹன், கரிகால் வளவ மஹாராஜன் ஸபைக்கு வருகிறார்.*

(*ஸபையோர் யாவரும் எழுந்து வணங்க, மெய்க் காவலர்கள் முன்வர, பிரதம மந்திரி* **மாதவசீலர்** *பின்தொடர,* **கரிகால் வளவன்,** *பிரவேசித்து, சிங்காதனத்தை வணங்கி, அமருகின்றான்*)

கரி. வ. *ஸபையோர்களே! அமருங்கள். (தானும் அமருதல்) மந்திரி மாதவ சீலரே! நம் நாட்டின் பிரஜைகள் யாவரும், யாதொரு குறையுமின்றி, ஸுகமாக வாழ்கின்றார்களா?*

மா. சீ. *திங்களையும், கங்கையையும் தம் திருச் சடையில் தாங்கி நிற்கும், செஞ்சடை ஈசன் அருளினால், எந் நாட்டினும் நன்றாக விளங்கும் இச் சோழநாட்டில் வாழும்*

யாவரும், ஸர்வ மங்களத்துடன் வாழ்கின்றூர்கள். பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, ஸூத்திரர், என்ற நான்கு வருணத்தார்களும், தங்களுடைய கருமங்களைக் கண்ணும் கருத்துமாகச் செய்து வருவதால், நாட்டில் நேர்மை, அறிவு, கல்வி, கடவுளிடம் நம்பிக்கை, வீர்யம், உறுதி, சாமர்த்தியம், போரில் புறங்காட்டாமை, தானம், விவஸாயம், கோ ரக்ஷணம், வியாபாரம், பொதுநலச் சேவை முதலியன மிகுந்து விளங்குகின்றன என்று கூறுவது மிகையாகாது என நினைக்கின்றேன்.

கரி. வ. நன்று! அன்பர்களே! நம் முன்னேர்கள் இயற்றிய பெருந் தவத்தினுற் பெற்ற இவ்விராஜ்யத்தை, எல்லாம் வல்ல இறைவன் அருளினுலும், தங்களுடைய ஒற்றுமையினுலும், நாம் ஆட்சி செய்து வருகின்றேம். ஆதலின், நாம் எச்சமயமாவது, எவ்விஷயத்திலாவது நீதியினின்றும் தவறுவதாகத் தோன்றின், அதை எமக்கு எடுத்துக் காட்டி, நீதியை நிலைபெறச் செய்வது உங்களது கடமை என்பதை மீண்டும் ஞாபகப் படுத்துகின்றேம். நிற்க, இன்று இச் சபைக் கூட்டியதின் நோக்கம் நாம் உங்களுக்குத் தெரிவிக்காமலே விளங்கு மென்று நினைக்கின்றேம். நம் நகரின்கண் ஆடல் பாடல்களில் சிறந்து விளங்கும், சித்திராபதி என்னும் நாடகக் கணிகையின் மகள் மாதவியின் முதல் நடனத்தை, இன்று நமது ஸபையின் முன்னர் அரங்கேற்ற வேண்டுமென்று பலர் விரும்பினர். எந்தக் கலையையும் ஆதரிக்க வேண்டியது நமது கடமை ஆதலின் நாம் அதற்கு உடன்பட்டு இன்று இச் சபையைக் கூட்டலானேம். மந்திரீ! இனி ஆரம்பிக்கலாம்.

(ஆடலாசிரியரும், பக்க வாத்தியக்காரர்களும், சித்திராபதியும் பின்வர, அழகிய மாதவி பிரவேசித்து அரசனை வணங்கிப் பின் ஸபையை வணங்கி நிற்கிருள். பின்னர் வாத்தியங்கள்

ஒலிக்க, மாதவி நடனஞ் செய்கையில் அடிக்கடி கோவலன் கண்களும் மாதவியின் கண்களும் ஒன்றுபட்டு கூடுகின்றன. மாதவி ஆடியபின் அரசனை வணங்கி நிற்கிருள்)

கரி. வ. வெகு நன்று! மிகவும் ஸந்தோஷம்! ஸபையோர்களே! இவ்வழகிய நங்கை, இந்த இளம் வயதில் இவ்வளவு நன்ருக ஆடிப் பாடியது மிகவும் ஆச்சர்யம். சித்ராபதி! உன் மகள் உன்னையே மிஞ்சி விட்டாள் என்று கூறுவது மிகை ஆகாது என நினைக்கின்றேன். இன்னும் இவளுக்கு என்னென்ன பயிற்றுவித்திருக்கின்ருய்?

சித்தி. இறைவ! இதுவும் அடியாள் செய்த பாக்கியமே. ஆடல், பாடல்களைத் தவிர, சோதிடம், மாறுவேடமணிதல், நூதனமான மாலைகள், செண்டுகள் தொடுத்தல் முதலிய வைகளையும் இவளுக்குக் கற்பித்துக் கொடுத்திருக் கின்றேன்.

கரி. வ. சந்தோஷம்! திருமகளையும் மயங்கச் செய்யும் வனப்பு வாய்ந்த மாதவீ! நின் அழகும், ஆடலும், பாடலும், நம் மதியை மயக்கிக் களிப்பென்னும் கடலில் ஆழ்த்தியதால், நாம் உனக்கு தலைக்கோல் என்னும் பட்டத்தை அளிக்கின்ருேம். இதோ அதற்கு அறிகுறியாக இப்பொன் மாலையைப் பெற்றுக்கொள். (தன் கழுத்திலிருந்த ஓர் பொன்மாலையை எடுத்துத் தர, மாதவி பணிவுடன் பெறுகிருள்) மந்திரீ! இன்னும் இவளுக்கு இப்பொழுதே 1008 கழஞ்சு செம்பொன்னைப் பரிசாகக் கொடுத்தனுப்பும். மாதவீ! நீ அதனையும் பெற்று, நல் வாழ்வு அடைவாய்.

மாத. இராஜ ஸிம்மமே! இதுவும் என் பாக்கியம்.

(அரசர் ஸபையைவிட்டு நீங்க மற்றவர்களும் நீங்குதல் கோவலனும் மாதவியும் காதல் நோயுடன் பிரிதல்)

கோவ. ஆ! மையிட்ட அத்தையலின் கண்கள் என்னைத் தம் அடிமையாக்கி விட்டனவே. என் செய்வேன்! ஆ! மாதவி!

மாட. நண்பா! புறப்படு.

கோவ. நேரம் சென்றதே தெரியவில்லையே! நண்பா! உண்மையில் மாதவி இவ்வளவு அழகுள்ளவளாக இருப்பாள் என நான் சிறிதும் எண்ணவில்லை.

(மாடலனும் கோவலனும் செல்லல்)

[மூன்றாங் களம் முடிகின்றது.]

களம் 4.

இடம் :- மாதவியின் வீட்டில் ஓர் அறை.

காலம் :- காலை.

நடர் :- சித்திராபதி, மாதவி, வஸந்தமாலை.

சித்தி. (தாம்பூலம் தரித்துக்கொண்டு யோசனை செய்தல்) ஆ! எவ்வளவு காலந்தான் இவ்விதம் கழிப்பது. எவ்வளவோ முயற்சி செய்தும் அரசர் பெருமானால் நன்கு மதிக்கப் பெற்ற நம் குழந்தை மாதவிக்குத் தக்க ஓர் இளம் பிரபு கிடைக்க வில்லையே. கிடைத்து விட்டால், மாதவி பாக்கியசாலிதான். மாதவி! மாதவி! (மாதவி பிரவேசம்) என்ன செய்து கொண்டிருந்தாய் இந்நேரம்?

மாத. நம் தோட்டத்தில் வஸந்தமாலையுடன் புஷ்பம் கொய்து கொண்டிருந்தேன்

சித்தி. ஸரி! நீ போய் இங்கு வஸந்தமாலையை அனுப்பு. (மாதவி செல்லல்) ஆ! இச் செல்வக் கட்டழகியை அடைய எந்த உத்தமன் கொடுத்து வைத்திருக்கின்றனோ தெரியவில்லை! எதற்கும் நல்ல காலம் வேண்டாமா?

(வஸந்தமாலை பிரவேசம்)

வஸந். அம்மா! என்ன தங்களுக்குள்ளாகவே பேசிக்கொள்ளு கிறீர்கள்?

சித்தி. வஸந்தா! வா! இப்படி உட்கார். எல்லாம் மாதவியைக் குறித்துத் தான். அவளோ தன் பருவத்தைக் அடைந்து விட்டாள். ஊரில் எவ்வளவோ பிரபுக்கள் இருந்தும், அவளை அடைய ஒருவராவது இன்னும் முன் வரவில்லை. ஏண்டி! ஒருக்கால் அரசரால் நன்கு மதிக்கப்பட்டவளா யிற்றே. நாம் அவளை அடைய முயற்சி செய்வது ஸரியல்ல என நம் ஊர் பிரபுக்கள் எண்ணிக் கொண்டு, பேசாமல் இருப்பார்களோ?

வஸந். அம்மா! நீங்கள் ஏன் கவலைப்படுகிறீர்கள். கூடிய சீக்கி ரம் நம் மாதவி தக்க பிரபுவை அடைவாள், பாருங்கள். நீங்கள் மாத்திரம் இன்னும் சில நாள் கோவிலுக்கும் கடற் கரைக்கும் மாதவியை என்னுடன் அனுப்புங்கள் பிறகு ....

சித்தி. ஏன், என்ன விசேஷம்?

வஸந். அம்மா! நீங்கள் இன்னும் கர்நாடகமாகவே இருக்கின் றீர்கள். நேற்று மாலை நான் மாதவியுடன் சிறிது நேரம் கடற்கரையில் உட்கார்ந்திருந்தேன். ஆஹா! சிறிது பொழுதில் தேனீக்கள் போல, எவ்வளவு பிரபுக்கள் அங்கு கூடினர் தெரியுமா! ஒரு காலத்தில், தன்மீது

நூற்றுக்கணக்கான, கண்கள் வீழ்வதைப் பார்த்த மாதவி பெரிதும் வெட்கமும் பயமும் அடைந்ததால், உடனே திரும்பி விட்டோம்.

சித்தி. வஸந்தா! கடற்கரைக்கு வந்த பிரபுக்களில் யார் மாதவியை அடைவார் என நினைக்கின்றாய்?

வஸந். நான் அதை எப்படிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். அம்மா! ஒரு விஷயம். நேற்று வெகு நேரம் வரை, மாசாத்துவான் குமாரர் கோவலர், மாதவியின் எழிலைக் கண்டு மயங்கினர் என்பதை நான் நன்கு அறிந்தேன். நம் மாதவியை மெல்ல விசாரித்ததில், அவளுக்கும் வெகு நாளாக அவர்மீது பிரியம் இருப்பதாக அறிந்தேன். அம்மா! இவர்கள் இருவரையும் எப்படியாவது ஒன்று சேர்த்து விட்டால் ....

சித்தி. கோவலரா .... நல்லது தான் .... ஆயினும் அவர் தன் அழகிய மனைவியை விட்டு, நம் மாதவியிடமே இருக்க மாட்டாரே. சீ! சீ! இது வீண் எண்ணம். ஒரு நாளும் முடியக் கூடிய காரியமல்ல.

வஸந். பின்னர் என்னதான் செய்வது! ஐயோ! பாவம்! கோவலரை, அன்றொரு நாள் அரச ஸபையில் கண்டது முதல், மாதவியும் அவர் வசமாய் விட்டாள்.

சித்தி. அவள் சிறுமி தானே. அவளுக்கு என்ன தெரியும்? ஸரி! இருக்கட்டும். வஸந்தா! அன்று நம் மாதவிக்கு அரசர் அளித்த செம்பொன் மாலையை இங்கு எடுத்து வா சீக்கிரம். (வஸந்தா உள்ளே செல்ல மாதவி புஷ்பங்களுடன் பிரவேசித்தல்) ஆ! இதுவும் ஓர் நல்ல சகுனம் .... மாதவி! நேற்று கடற்கரையில், கோவலனை நீ ஸந்தித்தனையா?

மாத. அம்மா! இதென்ன கேள்வி. கடற்கரையில் நான் அநேகரைச் சந்தித்திருக்கலாம். அவர்களிற் கோவலரைச் சந்தித்தேனு, இல்லையா, என்பதை யான் எங்ஙனம் அறிவேன் .... ஆ! வஸந்தமாலையின் வம்பு இது. இனி அவளிடம் ஒன்றுமே கூறலாகாது. (வஸந்தமாலை பொன் மாலையுடன் பிரவேசிக்க மாதவி உட்செல்லல்) ... ஆ! நாம் ஏன் இப் பாழும் குலத்தில் உதித்தோம்!

சித்தி. (மாலையைப் பெற்று) வஸந்தா! நான் கூறுவதை நன்கு கவனிப்பாய் என் மகளை அடையக் கூடியவர்கள், உண்மையில் ஓர் பிரபுவாக இருத்தல் வேண்டும். ஆதலின் நீ இம் மாலையுடன் நம் நகரில் பெரும் வணிகர்கள் வசிக்கும் தெருவிற்குச் சென்று, 'இம் மாலை 1008 கழஞ்சு செம் பொன் விலைபெறுவதாகும். இதனை அவ்விலைக்கு வாங்கி மாதவிக்குச் சூட்டுகின்றவரே, அவளுக்கு உரிய காதலர் ஆவர்', எனக் கூறுவாயாக. பின்னர், மாதவியை உண்மையில் விரும்பும் பிரபு யாவர், என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

வஸந். நல்ல விந்தையான வியாபாரம் இது.

சித்தி. அதைப்பற்றி யார் உன்னைக் கேட்டார்கள். இதோ! எடுத்துச் செல் உடனே இம்மாலையை.

வஸந். (மாலையை எடுத்துக்கொண்டு) — ஸரி, நான் தங்கள் விருப்பப்படியே நடக்கின்றேன்.

சித்தி. ஸந்தோஷம். பொறு! யான் ஓர் மை இடுகின்றேன். அதனை நெற்றியில் அணிந்து செல்வாய்.

(உட்செல்லல்)

வஸந். ஆ! கோவலர் இம்மாலையை வாங்கினுல், மாதவியின் மனம் எவ்வளவு ஸந்தோஷமடையும்!

(மாதவி பிரவேசம்)

மாத. வஸந்தா! நீ அப்படிச் செய்வாயாகில், நான் என் உயிரையே உனக்குத் தருவேன்.

வஸந். மாதவி! என்னால் ஆன முயற்சியைச் செய்தே தீருவேன். கவலைப்படாதே.

(சித்திராபதி பிரவேசித்து, வஸந்தமாலையின் நெற்றியில் ஓர் திலகம் இடுகின்றாள்)

சித்தி. ஸரி! மாலையை ஜாக்கிரதையாக எடுத்துச் சீக்கிரமே செல். (வஸந்தமாலை செல்லல்) ஆ! மாலையை வாங்கி மாதவிக்கு அணியும் பிரபு யாவரோ .... மாதவீ! என் கண்ணே! இனி உன்னால் தான் என் குலம் பிரபலமடைய வேண்டும் ஆதலின் இனி உன்னிடம் வரும் பிரபுக்களிடம், அவ்வப் போது வேண்டிய பொருள்பறித்து, நம் குலத்தொழிலை விருத்தி செய்வாய்.

மாத. வெகு மேன்மையான தொழில்! அம்மா! தீயநெறிகளை நன்னெறியாகக் கொண்டு வாழும் தாஸிகளின் வாழ்க்கையை நான் முற்றிலும் வெறுக்கின்றேன். கொண்டால் ஒரு கண் நிறைந்த காதலன், இல்லையேல், ஆறு, குளம் அல்லது கிணறு இவைகளில் ஒன்றே எனக்குரிய இடமாகும்.

சித்தி. சீ! சீ! பேதைப் பெண்ணே! உளறாதே. போ உள்ளே. உன் யௌவன மன்றோ உன்னை அவ்விதம் பேசச் செய்கின்றது. (மாதவி வருத்தத்துடன் உட்செல்லல்) இவள் இப்பொழுது இப்படித் தான் பேசுவாள். பின்னர், நாலு பொன்னைக் கண்டவுடன் தலைகீழாகப் பிறழ்ந்து பேசுவாள் நம் பெண் தானே!

(செல்லல்)

[நான்காங் களம் முடிகின்றது]

களம் 5.

இடம் :- வணிகர் பெருந்தெரு.

காலம்:- மாலை.

நடர் :- வஸந்தமாலை, குந்தலசெட்டி, கோவலன்.

(வஸந்தமாலை, பொன் மாலையுடன் பிரவேசித்தல்)

வஸந். இந்தக் கஷ்டத்திற்கு என்ன செய்வேன்! இப்பொன் மாலையை இதுவரை விலை கூறியும், ஒருவராவது வாங்க முன்வர வில்லையே! விலை கேட்கின்றவர்களும், நம் தலைவி யின் நிபந்தனைகளைக் கேட்டவுடன், அப்பால் செல்வது மன்றி நம்மை ஏளனமும் செய்ய ஆரம்பிக்கின்றார்களே! கோவலரிடம் செல்லலா மென்றால், அவரைக்காண முடிய வில்லையே! ஒருக்கால் அவர் வீட்டிற்குள்ளேயே சென்று விசாரிக்கலாமா.

(குந்தலசெட்டியார் பிரவேசம்)

குந்த. என்ன! ஏன் இங்கு நின்று கொண்டிருக்கின்றாய்?

வஸந். ஒன்றுமில்லை. என் தலைவி இப்பொன் மாலையை விற்று வரச் சொன்னாள். கோவலரிடம் இதை விற்கலாமென்று வந்தேன்.

குந்த. எங்கே! மாலையைக் கொடு, பார்க்கலாம். நல்ல மாற்றுப் பொன்னாக இருந்தால் நானே ஒரு விலை வைத்து எடுத்துக் கொள்கின்றேன்.

வஸந். ஐயா! உம்மால் இம்மாலையை வாங்கி அதன் பலனை அனுபவிக்க முடியாது. வந்த வழியே செல்லும்.

குந்த. பெண் புத்தியைக் காட்டி விட்டனையே! எடு, அதற்கு நான் ஒரு வழி சொல்லுகின்றேன். (மாலையை வாங்கி, உரை கல்லில் தேய்த்துக் கொண்டே) மாலை மிகவும் நன்றாகத் தான் இருக்கின்றது. பத்தரை மாற்றுத் தங்கந் தானே! ஏது இம்மாலை? சமீபத்தில் யாராவது மாதவிக்குக் கொடுத்தார்களோ! அப்படிக் கொடுத்திருந்தாலும் சித்திராபதி நமக்குச் சொல்லாமல் இருக்க ஞாயம்? என்ன வஸந்தமாலை! ஏது இந்த மாலை?

வஸந். நம் அரசர் மாதவிக்குக் கொடுத்த மாலை இது.

குந்த. அப்பொழுதே சொல்லியிருந்தால், இதை இவ்வளவு உரைத்துப் பார்த்திருக்க மாட்டேனே! அது கிடக்கட்டும். என்ன விலை வந்தால் இதைக் கொடுப்பதாக உத்தேசம்?

வஸந். ஐயா! இம்மாலையின் விலை 1008 பொன் கழஞ்சுகள் ஆகும். இதனை அவ்விலை கொடுத்து வாங்குபவர்கள், மாலையை உடனே மாதவியின் அழகிய கழுத்திலிட்டு, அவளுடனேயே என்றும் இருக்க வேண்டும். இந்த நிபந்தனைக் குட்பட்டவர்களே இதனை வாங்க வேண்டும்.

குந்த. மிகவும் ஒழுங்காக இருக்கிறது. இப்புகார் நகரில் இருப்பவர்கள் எல்லாம், ஏமாந்தவர்கள் என நினைத்து விட்டாளோ அத் தாய்க் கிழவி? சுத்தப் பைத்தியமே! என்னிடம் விலை கூறிய மாதிரி, வேறு ஒருவரிடம் நீ கூறுவாயாகில், உன்மீது கல்லெறிய ஆரம்பித்து விடுவார்கள். மரியாதையாக வீடு போய்ச் சேர். அப்படி இஷ்டமில்லை யென்றால், போகிறதென்று மாலையை ஒருபத்து நாள் என்னிடம் கொடு. நல்ல இனம் பார்த்து விற்றுத் தருகின்றேன்.

வஸந். என்ன இரக்கம்! ஐயோ! போதும்! போதும்! போய் வாரும். உம்மை நம்பி இம் மாலையைக் கொடுத்து விட்டு, நான் எந்தக் குளத்தில் போய் விழுவது!

குந்த. என்னை, மோசம் செய்பவன் என்று கருதி விட்டாய்? உனக்கு என்ன தெரியும் என்னைப் பற்றி? (கோவலன் பிரவேசம்) .... ஆ! கோவலரா! ஐயையோ! அகப் பட்டுக் கொண்டோமே .... கடனைக் கேட்பாரே!

கோவ. என்ன, குந்தலரே!

குந்த. எல்லாம் உங்களுக்காகத் தான் ஏற்பாடு செய்கின்றேன். சாயுங்காலம் கட்டாயம் தங்களைப் பணத்துடன் வீட்டில் ஸந்திக்கின்றேன். வீட்டை விட்டு மாத்திரம் போய் விடாதீர்கள்.

கோவ. ஐயோ! பாவம். கடன் வாங்கினவர்களின் தன்மை எப்படி யெல்லாம் மாறுகின்றது! ஸரி, வீட்டில் இருக்கின்றேன், வந்து சேருங்கள்.

(குந்தலசெட்டி செல்ல எத்தனித்தல்)

வஸந். ஐயா! மாலையைக் கொடுத்துச் செல்லுங்கள்.

குந்த. வஸந்தமாலே! போகிற அவசரத்தில் கொடுக்க மறந்து விட்டேன். (மாலையைக் கொடுத்துவிட்டு) மாலை நல்ல பத்தரை மாற்றுத் தங்கந்தான். வேண்டு மென்றால் கோவலர் வாங்கிக் கொள்ளலாம்.

கோவ. மாலையா!

குந்த. ஆம்! இது விற்பனைக்கு வந்திருக்கிறது. ஆயினும் இதை வாங்குபவர்கள், இதனை உடனே மாதவிக்கு அளித்து, அவளுடனேயே இருக்க வேண்டுமாம்.

கோவ. ஸரி! நான் இவளிடம் பேசிக்கொள்ளுகின்றேன்.

(தனித்து)

குந்த. ஆஹா! நான் வருகின்றேன். ஸத்தியமாக ஒரு வருஷம் இவ்வூரில் தலைகாட்டுவதில்லை.

(குந்தலசெட்டி செல்லல்)

கோவ. பெண்ணே! நீ மாதவியினுடைய தோழி அல்லவா!

வஸந். ஆம் ஐயனே! மாதவீ, உன் அதிர்ஷ்டம் எப்படியோ!

கோவ. ஐயோ பாவம்! நீ யேன் இங்கு தனித்து நின்றுகொண் டிருக்கின்றாய்? உனக்கு என்ன வேண்டும்?

வஸந். ஐயனே! என் தலைவி, இப்பொன் மாலையை இத்தெரு வில் விற்று வரும்படி கூறினாள். இதுவரை விலை கூறியும் ஒருவரும் வாங்க முன்வரவில்லை. இது விற்பனை ஆகா விட்டால், என் தலைவி என்னைக் கோபிப்பதுமின்றி, அழகிய மாதவியையும் அல்லல் படுத்துவாள்.

கோவ. பெண்ணே! வருந்தாதே. இம்மாலையின் விலை என்ன?

வஸந். பிரபோ! இம்மாலை 1008 செம்பொன் கழஞ்சுகளாகும். இதனை அவ்விலைக்கு வாங்குபவர்கள், மாலையை உடனே மாதவியின் கழுத்திலிட்டு, அவளுடனேயே இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகளுக்கு உட்பட்டவர்களே, இதனைப் பெறலாம்.

கோவ. இதென்ன விந்தை! மாலையை வாங்கி, மாதவிக்கு இட வேண்டுமாம்! ஆ! அவள் அழகிற்கும், குணத்திற்கும், 1008 செம்பொன் கழஞ்சுகளா போதும்! ..... மனமே பொறு! நீ எண்ணிய எண்ணம் நிறைவேறும் வேளை வந்து விட்டது. அன்னத்தைப்போன்ற நடையும், கிள்ளை யைப்போன்ற மொழியும், மயிலைப்போன்ற எழிலும், குயிலைப்போன்ற குரலும் உடைய அப்பெண் மாதவி எனக்கே தகுந்தவள். ஏ பெண்மணியே! இப்பொன் மாலை என்ன விலையாயினும் ஸரி, நான் தருகின்றேன். தயை செய்து சீக்கிரமே என்னுடன் வந்து வேண்டிய பொன்னைப் பெற்று என்னை அப்பெண்மணியிடம் சேர்ப் பித்து விடு. உனக்கு வேண்டிய வெகுமதிகள் தருகின் றேன். புறப்படு என்னுடன்.

வஸந். பிரபோ! மிகவும் சந்தோஷம்! இதோ வருகின்றேன்! மாதவீ! உன் பாக்கியமே பாக்கியம். (இருவரும் செல்லல்)

[ஐந்தாங் களம் முடிகின்றது]

களம் 6.

இடம் :- மாதவியின் வீட்டில் ஓர் அறை.

காலம் :- மாலை.

நடர் :- மாதவி, வஸந்தமாலை, கோவலன், ஓர் பணியாளன்.

(மாதவி ஓர் ஊஞ்சலில் வருத்தத்துடன் படுத்திருக்கிறாள்)

மாத. சீ! ஏனோ நாம் இந்த இழி குலத்தில் பிறந்தோம். பிறந்ததால் என்ன! கருத்திற்கிசைந்த காதலரை மணந்து அவரிடம் உண்மையுடன் வாழும் அரும் பாக்கியத்தைப் பெற்றால், எவ்வளவு சந்தோஷமாக இவ் வாழ்க்கையை நடத்தலாம்! அத்தகைய பாக்கியம் நமக்குக் கிட்டினால் .... தெய்வமே! நான் விரும்பும் கணவனை எனக்கு அளித்து, என் மனக் கவலையைத் தீர்ப்பாய் .... வஸந்தமாலை இன்னும் வரவில்லையே!

(சித்திராபதி பிரவேசம்)

சித்தி. இது என்ன! இன்னும் வஸந்தமாலையைக் காணோம். வெகு நாழிகையாகி விட்டது .... மாதவீ! நான் வேண்டுமாயின் அவளைத் தேடி வரவா? .... (வஸந்தமாலை பிரவேசம்) ஆ வஸந்தா! போன காரியம் என்ன? ஏன் இவ்வளவு நாழிகை?

வஸந். ஸ் .... அவசரப் படாதீர்கள். அப்பா! அத் தட்டை இங்கு கொண்டுவா. (1008 செம்பொன் கழஞ்சுகள் கொண்ட ஓர் தட்டை ஓர் ஏவலாளன் கொண்டுவந்து வைத்தல் - வஸந்தமாலை அவனிடம், ஓர் பொன்னைக் கொடுத்து) அப்பா! சீக்கிரமாக உன் தலைவரை வாச் சொல்.

(காவலன் செல்லல்)

சித்தி. வஸந்தா! மாலையை யார் வாங்கினார்கள்? அவர்கள் என்ன சொன்னார்கள்?

வஸந். மாதவீ! நீ நினைத்த காரியம் இனிதே முடிந்தது. இன்னும் சிறிது பொழுதில் கோவலர் அப் பொன்மாலை யுடன் இங்கு வருவர்.

சித்தி. என்ன! என்ன! கோவலரா?

மாத. வஸந்தா! நீ யென்னைப் பரிகாசம் செய்ய வில்லையே!

சித்தி. இது உண்மையாக இருக்குமா? வஸந்தா!

வஸந். வீணே கால தாமதம் செய்யாதீர்கள். இந்நேரம் அவர் பாதிவழி வந்திருப்பார். அவரை வரவேற்க வேண்டிய ஏற்பாட்டைச் செய்யுங்கள்.

சித்தி. ஆ! இன்றே என் மனம் குளிர்ந்தது. மாதவி அதிர்ஷ்ட சாலிதான். வஸந்தா! என் அஞ்சனம் என்ன வேலை செய்தது கவனித்தனையா?

வஸந். அம்மா! வெற்றிக்குக் காரணம் மாதவியின் கண் அஞ்சனமே யாகும். ஆ! கோவலர் சற்று முன்னர் மாதவியின் அழகை எவ்வளவு புகழ்ந்துரைத்தார்!

சித்தி. அப்படியா! கண்ணே மாதவி! இங்குவா, (முத்தமிட்டு) நீ தான் பாக்கியவதி. (புஷ்பத்தைத் தலையில் சூட்டி) ஆ! வஸந்தா, என்னே இவள் களிப்பு! கோவலர் வருகையைக் கேட்டு முகம் மலர்ந்தாள். என்றும் இல்லாத எழிலும் இன்று இவள் முகத்தில் காண்கின்றது. இவளே என் குலத்தை ஈடேற்ற வந்த கோதை.

(ஓர் பணியாளன் பிரவேசம்)

பணி. அம்மா! எமது தலைவர் கோவலர் வருகிறார்.

சித்தி. ஆ! எங்கே அவர் .... (கோவலன் பிரவேசம்) ஆ! பிரபோ! வரவேண்டும். வரவேண்டும். அமருங்கள் (ஊஞ்சலில் அமரச் செய்து) தங்கள் திருப்பாதம்பட்ட என் கிரகம் இன்றே புனிதமடைந்தது. மாதவீ! சீக்கிரமாகத் தாம்பூலம் அளித்து இவரை வணங்கு. அந்த ஆனந்தக் காக்ஷியை, நான் என் கண்ணால் காணும் பெரும் பாக்கியத்தைப் பெறுகின்றேன்.

(மாதவி நாணத்துடன் உட்செல்லல்)

கோவ. சித்திராபதி! அன்று அரச ஸபையில், மாதவியைக் கண்டது முதல், நான் அவள்மீது பரிசுத்தமான காதல் கொண்டேன். அதேபோல் உன் புதல்வியும் என்மீது உண்மையான காதல் கொண்டிருப்பதாக வஸந்தமாலையின் மூலம் நன்கு தெரிந்து கொண்டேன். இது உண்மையாக இருக்குமாயின், மாதவியை என் கண்ணகியே போல் நடத்தி வருவேன்.

சித்தி. பிரபோ! அவள் தங்கள்மீது கொண்டிருக்கும் மெய்க் காதல், மிக்கப் பரிசுத்தமுள்ளது என, நான் என் குல தெய்வமறியக் கூறுவேன். (மாதவி தாம்பூலம் முதலியவைகளுடன் பிரவேசம்).... மாதவீ! இவரை வணங்கித் தாம்பூலம் கொடு.

(மாதவி அவ்விதமே செய்தல்)

கோவ. தெய்வப் பெண்களின் எழிலையும் பழிக்கும், ஏ மாதவீ! நீ இக்குலத்தில் பிறந்ததினால் அன்றோ, நான் உன்னை நினைத்தபடி அடைந்தேன். இனி நீயே என் உடல் பொருள் ஆவியும் ஆவாய்.

(பொன்மாலையை அவள் கழுத்தில் அணிதல்)

சித்தி. பிரபோ! இனி பூவும் மணமும் போல், நீங்கள் இருவரும் ஒன்றுபட்டு, எக்காலத்தும் பிரியாது வாழ்வீர்களாக!

(வஸந்தமாலையுடன் சித்திராபதி உட்செல்லல்)

கோவ. கண்ணே! மாதவீ! ஏன் தனித்து நின்றுகொண்டிருக்கின்றனை! என்னை அடைவதில் உனக்குப் பூரண சந்தோஷம் எனக் கூறிய வஸந்தமாலையின் வாக்கு உண்மையாயின், உடனே நீ என் அருகில் அமரும் இன்பத்தைத் தருவாய்.

மாத. எனதரசே! தங்கள் அருகில் அமர இவ்விழிகுலத்தாளுக்கு என்ன யோக்கியதை யிருக்கிறது என்றே அஞ்சுகின்றேன்.

கோவ. பேதாய்! மெய்க்காதலின் வலிமையை நீ இன்னும் அறிந்தாய் இல்லை. உண்மைக் காதலுக்கு, ஜாதி ஏது? சமயம் ஏது? உயர்வு ஏது? தாழ்வு ஏது? கடவுள் முன்னிலையில் நாம் யாவரும் ஒன்றே யாவோம். அந்த உண்மையை நான் பின்பற்றுபவன் என்பதை மெய்ப்பிக்கவே, உன்னை நான் காதல் மணம் கொள்ள உறுதி கொண்டேன். என்னை அவ்விதம் மணந்து கொள்வதில் உனக்கு ஏதேனும் ஐயம் இருக்குமே யாயின்.... சீக்கிரமே வெளியிடுவாய்.

மாத. ஐயனே! தீய நெறிகளைப் பின்பற்றும் ஓர் குலத்தில் பிறந்த அடியேனைத் தாங்கள் காதலிக்க, முற்பிறப்பில் நான் என்ன தவம் இயற்றினேனே! தெரியவில்லை. பிரபோ! திரிகாண சுத்தியாய் நான் உம்மைக் காதலிக்கின்றேன். நான் வழிபட்டு வணங்கும் தெய்வம் நீரே. உம்மையன்றி ஒருவரையும் நான் நம்புகிலேன். ஆதலின்! நாதா! தாம் எக்காலத்தும் அடியாளைக் கைவிடுவதில்லையென்று உறுதிமொழி கொடுத்தால்.... ஆ! அத்தகைய உறுதிமொழியைக் கேட்க, எனக்கு என்ன உரிமையிருக்கின்றது! பிரபோ! அடியாள் பிழையை மன்னித்தருள வேண்டும்.

கோவ. கண்ணே! உன்னை இந்நோம் சோதித்ததற்கு நீயன்றே என்னை மன்னித்தல் வேண்டும். உண்மையில், நீ உன்னைத் தாழ்மையாக எண்ணுவது எனக்கு மிகவும் வருத்தத்தைத் தருகின்றது. நீ இன்னும் உன்னுடைய பெருமையை அறிந்தாய் இல்லை. காதலீ! நான் இது காறும் உன்னை அடைவேனோ என ஏங்கியிருந்தேன். இன்று நீ எனக்குக் கிட்டியதால், நீ வேறு, நான் வேறு என நான் சிந்திக்கவில்லை. ஆதலின் கரிய விழிகளை யுடைய என் ஆசை மாதவியே! என் அருகினில் அமர்ந்து என்னை இன்புறச் செய்வாய் .... ஆ! மாதவீ! உன் நாணமன்றோ உன்னைக் கெடுக்கின்றது .... சிற்றிடைப் பெண்மானே! நீ மிகவும் கொடியவள். காம்பைக் களையாமல் சூடியிருக்கும் புஷ்பங்களின் பாரம் உன் சிறிய இடையை முறித்துவிடுமே. சீ! இனி நான் தாள மாட்டேன். (கையைப் பிடித்து இழுத்து அருகில் அமரச்செய்து) ஆஹா! வசீகரமான உன் பொன் போன்ற தோட்களை எங்ஙனம் புகழ்வேன்! அவை என்மேற்பட்ட மாத்திரத்தில் இன்பம் செய்கின்றனவே. என்ன இன்பம்! என்ன இன்பம்! கண்ணே! உன் மெல்லிய தோட்கள் - - -

மாத. என் ஐயனே! தாம் என்னை இவ்விதம் மேன்மைப் படுத்த முற்பிறப்பில் அடியேன் எவ்வளவோ நற்றவம் இயற்றி யிருக்கவேண்டும். அந் நற்றவமே நம்மிருவரையும் எக்காலத்தும் பிரியாமற் செய்தல் வேண்டும். அதனையே நான் முக்காலும் விரும்புகின்றேன்.

கோவ. கண்ணே! நான் உன்மீது கொண்டிருக்கும் காதல், எக் காலத்தும் பிரிக்கப்படாதது ஆகும். இதிற் ஸந்தேக மேனோ?

மாத. தமது பத்தினி கண்ணகி தேவியை நினைந்து, என் காதலை மறந்து எங்கு என்னைப் பிரிந்து விடுகிறீர்களோ, என்கின்ற ஒரு பெரும் ஸந்தேகந்தான் - - - -

கோவ. மாதவீ! அவ்விதம் நினையாதே. நான் உன்மீது கொண்ட காதல் உன்னால் ஒருக்கால் மறக்கப்பட்ட தானாலும், என்னால் எக்காலும் மறக்கப் படாததாகும். இதில் ஸந்தேகம் ஏனோ!

மாத. மிகவும் ஸந்தோஷம்! நாதா! இனி நாம் உயிரும் உடலும் போல் வாழ்தல் வேண்டும். உயிர் இன்றி உடலுக்கு வாழ்வில்லை. ஆதலின் அடியாளின் வாழ்வும், தாழ்வும் தம்மைப் பொறுத்ததே யாகும்.

கோவ. இனி என் வாழ்க்கையும் உன்னைப் பொறுத்ததே யாகும். மாதவீ! உன் அழகிய ரூபமும், இம்மாலை நேரமும், இனிய தென்றலும், என் ஐம்புலன்களையும் கவர்ந்து நிற்கின்றன. ஆ! இதென்ன புதிய வாஸனை வீசுகின்றது. ஜாதி மல்லிகையின் மணமன்றோ இது! எங்கிருந்து வீசுகின்றது?

மாத. காதலா! அருகினில் உள்ள ஓர் சிறு பொழிலில், ஜாதி மல்லிகை, குடமல்லிகை, குண்டுமல்லிகை, அடுக்கு மல்லிகை முதலிய அரும் மல்லிகை ஜாதிகளைப் பயிர் செய்திருக்கின்றேன். நாம் அங்குற்றால் நல்ல மணம் பெறலாம்.

கோவ. ஆம்! காதலீ! அவ்விதமாயின் நாம் விரைவில் அவ்விடம் சேர்ந்து மணத்தின் இன்பத்தை அனுபவிப்போம்.

(மாதவியை அன்புடன் அழைத்தேகுதல்)

[ஆறுங் களம் முடிகின்றது]

களம் 7.

இடம் :- காவிரிப்பூம்பட்டினத்தில் ஓர் தெரு.

காலம் :- மாலை.

நடர் :- கௌசிகர், சங்கரர்.

(**கௌசிகர்** சுமக்க முடியாத தானப் பொருள்களைப் பெற்று வருகிறார். இரண்டொரு பொருள்கள் கீழே வீழ்கின்றன)

கௌ. அட கஷ்டமே! நாம் வாய்க் கொழுப்பினால் கெட்டோம். சுமக்க முடியாத இத் தானங்களைத் தந்த அக் கோவலர் அப்பொழுதே, கூட ஒரு சுமை தூக்கும் ஆளையும் அனுப்புகிறேன் என்றாரே. ஏன் வேண்டா மென்றோம் ....

(எதிரில் கோலூன்றி சங்கரர் வருதல்)

சங்க. ஸ்வாமி! பட்டினப்பாக்கத்திற்கு எப்படிப் போகலாம்?

கௌ. நமஸ்காரம். தாங்கள் யார்? எவ்விடமிருந்து வருகிறீர்கள்?

சங்க. நானும் தங்களைப் போல் ஒருவர்தான். சீர்காழியிலிருந்து வருகின்றேன். தங்களுடைய நாமதேயம்?

கௌ. கௌசிகர்.

சங்க. அப்படியா! கௌசிகரே! ஏதோ இவ்வூரில் கோவலர் என்னும் ஓர் பெருவணிகர் தனக்குப் பிறந்திருக்கும் குழந்தையின் பொருட்டு வரும் யாசகர்களுக்கெல்லாம், தக்க தான தருமங்களைச் செய்கின்றதாகக் கேள்விப் பட்டேனே! அது உண்மை தானே?

கேள. அடடா! தாங்கள் சற்று முன்பே வந்திருக்கக் கூடாதோ! நான் அவாது வீட்டுப் புரோகிதர் தான். இப் பொழுது தான் அங்கிருந்து வருகின்றேன். பாதகமில்லை! இத்தெருவின் வழியே சென்று, தெற்கே திரும்பினால், பட்டினப்பாக்கத்தை யடைவீர்கள். அங்கு, நாடகக் கணிகைகள் வசிக்கும் தெருவில் சென்று, "மாதவியின் வீடு எது"? எனக் கேட்டால், யாவரும் சொல்லு வார்கள். ஆயினும் இருட்டிவிட்டதே. நீங்கள் இப் பொழுது செல்வதைவிட, அருகிலிருக்கும் சத்திரத்தில் தங்கிவிட்டுக் காலையில் அங்குச் சென்றால், கோவலனைக் கண்டு, வேண்டிய தானங்களைப் பெறலாம்.

சங்க. ஆம்! தாங்கள் கூறுவதும் உண்மைதான். சத்திரம் எங்கே இருக்கிறது?

கேள. என்னுடன் வாருங்கள். நான் காண்பிக்கின்றேன்.

சங்க. மிகவும் ஸந்தோஷம்.

(இருவரும் செல்லல்)

[ஏழாங் களம் முடிகின்றது]

களம் 8.

இடம் :- மாதவியின் மாளிகை.

காலம்:- காலை.

நடர் :- மாதவி, கோவலன், வஸந்தமாலை, மாடலன், சங்கரர்.

(தன் குழந்தையைத் தொட்டிலிலிட்டு, பாடி ஆட்டுகிருள்.)

மாத. ஆஹா ! என்னைப் போன்ற பாக்கியசாலிகள் இவ்வுலகில் யார் இருக்கின்றனர். மனதிற்கிசைந்த மணவாளராம் கோவலரைக் காதலாக அடைந்த என் வாழ்வே வாழ்வு. இத்தகைய சிரேஷ்டரை யடைய யான் முற்பிறப்பில், அம்பிகையை அனுதினமும், அழகிய மலர்களால் அருச் சித்திருக்கவேண்டும். (குழந்தையின் முகத்தைப் பார்த்து) ஆ ! என் குழந்தை அதற்குள்ளாக என் முகம் பார்க் கின்றது .... தந்தையின் முகத்தைப் போலவே இருக் கின்றது. (தொட்டில் அசைய) — என்ன ! இன்னும் நீ தூங்க மாட்டாயா ! கண்ணல்லவா ! தூங்கு .... (மறு படியும் பாடுகிருள் — கோவலன் பின் புறமாக வந்து நின்று மகிழ்வுறுகின்ருன் — மாதவி பிரமித்து) நாதா ! ஏன் இவ்வளவு நேரம் ?

கோவ. வரும் யாசகர்களுக்குத் தக்கபடி மரியாதை செய்து வர இவ்வளவு நேரமாயிற்று.

மாத. ஆமாம் ! நாதா ! இன்றையதினம் நம் குழந்தைக்குப் பெயரிடும் நாளாயிற்றே. அவளுக்கு என்ன பெய ரிடலாம் ?

கோவ. உன்னுடைய எண்ண மென்ன ?

மாத. ஏன், இக்குழந்தைக்கு, கற்பிற் சிறந்த கண்ணகியும் ஓர் தாய்தானே. ஆதலின் அவர்களின் எண்ணத்தையும் தெரிந்து கொண்டு செய்தால் மிகவும் நலமாக இருக்கும்.

கோவ. மெச்சினேன் உன்னுடைய பரிசுத்தமான மனதை! மாதவி! இவள் உலகில் மிக்க பெருமையை அடைவாள் என, அநேக ஜோதிடர்கள் கூறியிருக்கின்றனர். ஆதலின் எங்கள் குலத்தோன் ஒருவனைக் கடலினின்றும் காப்பாற்றிய எங்கள் குலதெய்வமாகிய மணிமேகலா தெய்வத்தின் திருப்பெயரையே இக்குழந்தைக்கு இட நினைக்கின்றேன்.

மாத. உங்கள் கருத்திற்கு யானோ மாறி நடப்பவள்! தங்கள் குலதெய்வமே அடியேன் குலதெய்வமும் ஆகும். நம் குழந்தைக்கு மணிமேகலை எனப்பெயர் வைப்பதில் எனக்குப் பூரணஸந்தோஷம். (வஸந்தமாலை அலறி அடித்துக் கொண்டு, அலங்கோலமாய் ஓடி வருகிறாள்)

வஸந். ஐயோ! யானை! யானை! (கீழே விழுந்து) நல்லவேளை, நான் தப்பித்தேன். ஆயினும் ஐயோ! பரிதாபம்! பரிதாபம்! அந்தக் கிழபிராமணனை யார் காப்பாற்றுவார்கள்!

கோவ. (திடுக்கிட்டெழுந்து) வஸந்தா! யாது ஸமாசாரம்?

வஸந். மதயானை ஒன்று, ஓர் வயோதிகனைத் தூக்திச் செல்கின்றது. ஆ! அவனை இந்நேரம் ....

கோவ. ஹா! அப்படியா! (ஓட எத்தனிக்க மாதவி தடுத்து)

மாத. நாதா! தாங்கள் இப்பொழுது வெளியே சென்றால், தங்கள் உயிருக்கே ஆபத்து நேரிடும்.

கோவ. மாதவி! எட்ட நில் (தள்ளிக்கொண்டே ஓடுகிறான். மாடலன் எதிரில் வந்து தடுத்து)

மாட. நில்! நில்! கோவல! வெளியே செல்லாதே. அபாயம். (வெளியில் சப்தம் — "ஐயோ! என்னைக் காக்க ஒருவரு மில்லையா")

கோவ. இதோ வந்தேன். (யாவரையும் தள்ளிக்கொண்டே ஓடு கின்றான்.)

மாத. ஆ! நாதா! (வீறிட்டுக் கீழேசாய, வஸந்தமாலை தேற்றுகிறாள்)

வஸந். ஐயா! எங்கள் கோவலரைக் காப்பாற்றுங்கள்!

மாட. இதென்ன! இவன் பெரும் பைத்தியக்காரனாக இருக்கின் றான். இக்கஷ்டத்திற்கு நாம் என்ன செய்யலாம்? (வெளியே செல்லல்.)

மாத. (மெல்ல எழுந்து) அடி! வஸந்தா! எங்கே என் பிராணநாதர்? இன்னுமா வரவில்லை? ஐயோ! இவர் ஏன் வெளியே சென்றனர்.... சீ! நாம் அவரைத் தனியே விட்டது பெருந்தவறாகும். (எழுந்து வெளியே செல்ல வஸந்தமாலை தடுத்து)

வஸந். நீ வெளியே போகக்கூடாது. பொறு! கோவலர் வருவார்.

மாத நீ யார் என்னைத் தடை செய்ய? விடு என்னை.

வஸந். மாதவி! என்ன குழந்தை போல் பேசுகிறாய்! நீ வெளியே சென்றால் உன் உயிருக்கும் ஆபத்து நேரிடும்.

மாத. அவர் உயிரை விட, என் உயிர் பெரிதோ! சீ! விடு என்னை. (திமிற, கோவலன், சங்காரைத் தூக்கிக்கொண்டு வந்து, களைப்புடன் அமருகிறான்.)

மாத. ஆ நாதா! நான் உயிருடன் தாங்களைக் காணப் பெற்றேன்!

கோவ. மாதவி ! எனக்கு ஒன்றும் ஆபத்தில்லை. நண்பா ! மாடலா ! சீக்கிரமே. இந்த அந்தணரைக் கவனி. மாடலன் சங்கரரின் களைப்பை நீக்குதல்)

சங். (எழுந்து அமர்ந்து) என் உயிரைக் காத்த உத்தம வீரனே ! நீ நீண்டகாலம் வாழ்வாய். அப்பா ! உனக்குத் தகுந்த் பிரதியுபகாரம் செய்ய இந்த ஏழைப் பிராமணனிடம், என்ன இருக்கின்றது. இதோ ! என் பூரண ஆசீர் வாதத்தைப் பெறுவாய் தன் உயிரையும் மதியாது பிற உயிரைக் காப்பாற்றிய கருணை வீரனே ! உனக்கு ஈசன் நற்கதி யளித்திடுவாராக. நீயும் உன் குடும்பத்தோரும், இறைவரின் திருவருள் பெற்று, எக்காலத்தும் உலகோ ரால் போற்றப்படுவீர்களாக !

மாட. (வாயிற் பக்கத்தை நோக்கி) ஐயா ! ஏன் கூட்டம் போடு கிறீர்கள் ? ஒருவருக்கும் ஒன்றும் ஆபத்தில்லை. விலகி வழி விடுங்கள்.

சங். ஐயா ! என்னால் தங்களுக்கு மிகவும் சிரமம். நான் அவ சரமாக ஓரிடத்திற்கு செல்ல வேண்டும். உத்திரவு பெற்றுக்கொள்ளுகிறேன்.

கோவ. அந்தணரே ! தாங்கள் எங்குச் செல்லவேண்டும் என்பதை தெரிவித்தால், அங்கு உங்களைச் சௌகரியமாகக் கொண்டு சேர்க்க ஏற்பாடு செய்கிறேன்.

சங். மிகவும் ஸந்தோஷம். அப்பா ! இத்தெருவில் கோவலர் என்னும் ஒரு பெரு வணிகர் தனக்குக் குழந்தை பிறந்த ஸந்தோஷத்தைக் கொண்டாடும் பொருட்டு, வரும் யாசகர்களுக்குத் தக்கபடி ஸன்மானங்களைச் செய்கி றூராம். ஆதலின் அத்தகைய பெரும் வள்ளலை....

கோவ. பெரியீர்! அக்கோவலனை இனித் தாங்கள் எங்கும் தேடிச் செல்லவேண்டாம் தாங்கள் விரும்பும் கோவலன் என் பான் யானே. மாதவீ! இப்பெரியார் மனம் மகிழுமாறு வேண்டிய பொருளைச் சீக்கிரமே கொண்டு வா.

மாத. சித்தம், பிராணபதி. (ஸந்தோஷத்துடன் உட்செல்லல்)

சங். வணங்கும் தெய்வம் வழியே வந்ததுபோல், நான் காண விரும்பிய சீமானைக் குணத்துடன் எதிரில் கண்டேனே. ஆஹா! எல்லாம் ஈசன் செயல்!

(மாதவி சிலபொன்களை ஓர் தட்டில், கொண்டு வந்து கோவலனிடம் அளித்தல்)

கோவ. அந்தணர் பெரும! அடியேன் அளிக்கும், இச்சிறு கொடையை அன்புடன் அங்கீகரிக்க வேண்டும்.

சங். (ஸந்தோஷத்துடன் அதைப்பெற்று) அப்பா! உலகமழிந்தாலும், உன் கீர்த்தி அழியாமல் நிற்குமாக! நன்று. அன்பனே! என் மனம் குளிர்ந்தது. யான் வருகின்றேன். (அந்தணர் செல்ல, மாதவியும், வஸந்தமாலையும் உட்செல்லல்)

மாட. நண்பா! உன்னிடம், எல்லா நற்குணங்களும் நிறைந்து நிற்கின்றன! எனினும், நீ யாவரும் அறிய மணந்த, உத்தமி கண்ணகியை, இதுகாறும் பாராமல் இருப்பதை நினைக்கும் பொழுது, நீ மிகவும் கொடியவன் எனத் தோற்றுகின்றது. ஆகலின், ஸதா அழுது, அழுது, மனம் வாடி, வதங்கும், கற்புக்காசியாகிய கண்ணகியுடன், இனியாவது இல்லற வாழ்க்கையை நடத்திப், பின், பேரின்பத்தை அடையும் வழியினைப் பார்! அதுவே உனக்கு நற்கதியை யளிக்கும்.

கோவ. மாடலா! பேரின்பமா! இப் பருவத்திலா! ஐம்புலன்க ளாலும் இன்பமனுபவிக்கும், இக்காளைப் பருவத்திலோ, பேரின்பம் பெறத் தூண்டுகின்ருய். என்னே! உன் புத்தி இப்படி மாறியது.

மாட. நண்பா! நீ கூறுவதை நான் ஒப்புக் கொள்ளுகின்றேன் நான் கூறியதை நீ ஸரிவர உணராது பேசுகின்ருய். நீ மணந்த தரும பத்தினியுடன், ஸுகமே வாழ்ந்து, உன் இளம் பருவத்தைக் கடந்த பின்பே, நான் உன்னை பேரின்ப மார்க்கத்தில் புகத் தெரிவித்தேன். இதன்படி செய்ய விரும்பினுல், இப்பொழுதே உன்னை ஆவலுடன் எதிர்பார்த்து நிற்கும், உன் மனைவியை நாடுவாய் ....

கோவ. ஆ! கண்ணகி! .... (மாதவி பிரவேசம்)

மாத. நாதா! பத்தர் வந்து வெகு நேரமாகக் காத்திருக் கின்ருரே. நம் குழந்தைக்கு நகைகள் செய்யப் பொன்கள் கொடுக்க வேண்டாமா!

கோவ. கண்ணே! இதோ வந்தேன். மாடலா! இப்பொழுது மன்னிப்பாய். நான் வருகின்றேன்.

(மாதவியுடன் செல்லல்)

மாட. ஆ! என்னே பெண்களின் ஸாகஸம்! கோவலன் மதி இப்படியும் மாறவேண்டுமா! ஸரி! இவனுக்கு இனிப் புத்தி சொல்லுவதில் பயனில்லை. க்ஷேத்திர யாத்திரைக்குச் சென்று திரும்பியவுடன் பேசிக் கொள்ளுகின்றேன்

(செல்லல்)

[எட்டாங் களம் முடிகின்றது]

களம் 9.

இடம் :- கண்ணகியின் அந்தப்புரம்.

காலம் :- மாலை.

நடர் :- கண்ணகி, தேவந்தி.

(நல்ல அணிகள் இன்றி மாசடைந்த உடைகளை அணிந்த கண்ணகி வருந்துகிருள்)

கண். ஆ தெய்வமே! நான் இந்நிலையை அடைய என்ன பாபம் செய்தேனே! கை நிறைந்த பொன்னைவிடக் கண்ணிறைந்த கணவனே மேல் எனப் பெருமை கொண்டாடினேனே. தெய்வம் அதற்குள்ளாக என்னைச் சோதித்து விட்டதே. நன் மகளை யீன்ற ஏ மாதவி! நீயன்றே கொடுத்து வைத்தவள். நீ இன்பக் கடலில் மூழ்கியிருக்கின்ருய். பாவி நானே துன்பக் கடலில் மூழ்கி வருந்துகின்றேன். ஆம்! யாவும் அவரவர் விதியின்படியே நடக்கும். விதியை வெல்ல யாரால் முடியும்!

(வருந்திக் கண்ணீர் சொரிய, தேவந்தி பிரவேசம்)

தேவ. ஆ! இதென்ன கஷ்டம்! எப்பொழுது பார்த்தாலும் வருத்தத்துடன் காண்கின்ருள். இதற்குக் காரணம் அந்த மாதவியல்லவா!.... கண்ணகீ! கண்ணகீ!

கண். யாரது!.... ஆ! தேவந்தியா! வா. உட்கார்.

(வருந்துதல்)

தேவ. கண்ணகி! நான் எப்பொழுது வந்தாலும் உன் வருந்தும் முகத்தையே காண்கின்றேனே. இதற்கு விடிவுகால மில்லையா .... யாவருக்கும் ஆறுதலையும் தைரியத்தையும் கூறும் நீயே, இவ்விதம் வருந்தி மெலிவது அழகல்ல .... அழுது அழுது உன் உடல் வாடியது. முகம் அழகை இழந்தது. கண்கள் ஒளி இழந்தன.

கண். ஒளி இழந்தால் எனக்கு மிகவும் நலம். என் மனம் மாத்திரம் என் காதலரிடம் எப்பொழுதும் நிற்க, இப் பாழும் கண்கள் மாத்திரம், அவரிடம் செல்ல முடியாமலும், காண முடியாமலும் இருக்கின்றனவே! ஆதலின் அவைகளின் அழகையும், ஒளியையும் என் கண்ணீரால் மறைத்துத் தண்டிப்பதனால் என்ன குற்றம்!

தேவ. கணவனைப் பிரிந்த வருத்தத்தினால் மனம் தோன்றியவாறு பேசுகின்றாய். மதிகலங்கி நிற்கின்றாய். ஆதலின் அவ் வெண்ணத்தைச் சிறிது காலம் மறந்து, ஸந்தோஷமாக இருப்பாய். இல்லையேல் நீ இறப்பாய்.

கண். தேவந்தி! என்ன உளறுகிறாய்! என் மதியா கலங்கிற்று! இல்லை. இல்லை. என் மன நோயை நீ இன்னும் ஸரிவர அறியவில்லை. இன்று வருவார், நாளை வருவார், என எண்ணி எண்ணி, என் மனம் புண்ணாகி நான் இறப்பேன் ஆயின், மறு ஜன்மத்திலாவது, அவரை அடையலாம், அவருக்குத் தொண்டு செய்யும் நற்பாக்கியத்தையும் பெறலாம் என நன்கு யோசித்தே, அவரை நான் எப்பொழுதும், என் மனத்தில் நினைந்து, நினைந்து உருகுகின்றேன். ஆதலின் அவரை நினைப்பதனால் இறப்பேன் ஆயின், எனக்கு அதைவிட வேறுபாக்கியம் என்ன இருக்கிறது.

தேவ. ஆ! இவ்வுத்தமிக்கு நான் என்ன பதில் கூறுவது. கண்ணகி! நீ வீண் ஸமாதானங்கள் சொல்லுவதில் பயனில்லை. ஒன்றுமட்டும் நிச்சயம். நீ நினைத்தால் உன் காதலனை இந்தக்ஷணமே உன்னிடம் அழைப்பித்துக் கொள்ளலாம். இல்லையேல் இவ்விதமாகவே, இன்னும் பல வருஷங்களை நீ கழிக்க நேரிடும்.

கண். என்ன வழி செய்யலாம்?

தேவ. தக்க மனிதர்களை அனுப்பி என் அவரை உன்னிடம் வரும்படி செய்யலாகாது?

கண். நல்ல வார்த்தை தெரிவித்தாய்! என் கணவர் என்ன சிறு குழந்தையா! மகா புத்திமான் அல்லவா அவர். தேவந்தி! மாதவியினிடம் இன்பம் பெறும் என் காதலரை, அவளிடமிருந்து பிரிக்க ஏற்பாடுகள் செய்வேன் ஆயின், என் காதலர் மனம் என்ன பாடுபடும் என்பதனை யோசித்தனையா! சீ! அவர் மனம் நோகும்படி, நான் ஒரு பொழுதும், ஒரு காரியத்தைச் செய்யேன். ஏதோ கால வித்தியாசத்தால் என்னைப் பிரிந்தார். நற்காலம் கிட்டினால், தானே வருவார்.

தேவ. பின், கால வித்தியாசத்தால் பிரிந்த கணவரைக் குறித்து நீ வருந்தி, வருந்தி, இறக்க எணணுவது நியாயமாகுமா? ஸுகத்தையும் துக்கத்தையும் ஸமமாக எண்ணியன்றோ காலம் கழிக்க வேண்டும்.

கண். தேவந்தி! கற்புள்ள நங்கையருக்குக் கணவரே தெய்வம், என்பதை ஸத்திய வாக்காக எண்ணி, என் காதலரை நினைந்து நினைந்து நான் வணங்குகின்றேனே யன்றி, வேறல்ல

தேவ. நான் எதைச் சொன்னாலும் நீ உடனே ஸமாதானம் செய்து விடுகிறாய் முற்றுமுணர்ந்த உன்னைத் தேற்ற என்னால் முடியாது தெய்வமே உன்னைக் காக்க வேண்டும்! ஆ! இரவு வந்து விட்டது. நான் வருகின்றேன்.

கண். பொறு. (விளக்கேற்றி, வணங்கி, தேவந்திக்கு, குங்குமம், தாம்பூலம் முதலியன அளித்து)... நாளைக் காலையில் சற்று வருகின்றனையா?

தேவ. காலையிலா! நான் கடற் கரைக்குச் செல்லப் போகின்றேன்.

கண். நாளை இந்திர விழாவின் 28-ஆம் திருநாளன்றோ!

தேவ. ஆம் .... நகர மாந்தர்கள் யாவரும் கடற் கரையில் கூடு வார்கள்! அதனால் நான் நாளை மாலையில் வருகின்றேன்.

கண். ஸரி. (தேவந்தி செல்லல்)... நாளைய தினம், ஒவ்வொரு பெண்களும் தங்கள் தங்கள் காதலருடன் கடற்கரையில் இன்பமுடன் விளையாடுவார்கள் .... பாவி நான் .... சீ! அத்தகைய ஸந்தோஷத்தையடைய நான் என்ன புண்ணி யம் செய்தேன். மாதவி! நீயே பாக்கியவதி.

(வருந்தி உள்ளே செல்லல்)

[ஒன்பதாங் களம் முடிகின்றது]

களம் 10.

இடம் :- கடற்கரையை அடுத்ததோர் தெரு.

காலம் :- பிற்பகல்.

நடர் :- கௌசிகர், கிட்டு, வஸந்தமாலை.

(கௌசிகர், கிட்டுவுடன் பிரவேசித்தல்)

கௌ. அடே கிட்டு! சீக்கிரமாக வா. இந்தக் கஷ்டத்திற்குத் தான் உன்னை எங்கும் அழைத்துப் போவதில்லை. நட சீக்கிரம்.

கிட்டு. (அழுதுகொண்டே) பொம்மை! எனக்குப் பொம்மை!

கௌ. அடே! பொம்மை வாங்கக் கையில் காசு கிடையாது. ஸமுத்திரக் கரைக்கு வா. யாரிடமாவது காசு வாங்கி, பொம்மை வாங்கித் தொலைக்கிறேன்.

கிட்டு. நான் மாட்டேன். பொம்மை இப்போ வாங்கிக் கொடுத்தால் தான் வருவேன்.

கௌ. சீ மூதேவி! என்ன பிடிவாதம் செய்கின்றாய். (அடிக்க, கிட்டு அழுதல்) இனி ஒன்றும் கேட்காதே. கேட்காதே.
(வஸந்தமாலை பிரவேசம்)

வஸந். ஸ்வாமி! பாவம்! ஏன் உங்கள் குழந்தையை அடிக்கின்றீர்கள்?

கௌ. வஸந்தமாலை! இந்த வயதில் இவ்வளவு பிடிவாதமா இவனுக்கு — எழுந்திருடா — கையில் காசு இல்லையென்று சொல்வதைக் கேட்காமல், பொம்மை வாங்கிக் கொடு, பொம்மை வாங்கிக் கொடு என்றால் நான் என்ன செய்வேன் — சனியன் பிடித்த மூதேவி!

வஸந். அதற்காகக் குழந்தையை இப்படியா திட்டுவது! இதோ நான் தருகின்றேன் பொம்மை. (தன் மடியிலிருந்து ஓர் பொம்மையை எடுத்துக் கிட்டுவிடம் அளித்து) குழந்தை மணிமேகலைக்காக, இதைத் திருநாள் கடையில் வாங்கினேன்.

கௌ. அப்பா! பிழைத்தேன். கோவலனும் மாதவியும் கடற் கரையில் தானே இருக்கிறார்கள்.

வஸந். ஆம்! அங்கு தான் ஸந்தோஷமாக இருக்கின்றனர். நேரமாகின்றது நான் சீக்கிரமே அங்குச் செல்லாவிட்டால் மாதவி வருந்துவாள்.

கௌ. இந்நேரம் எங்கு இருந்தாய்?

வஸந். கடைகளைச் சுற்றிப் பார்த்து வந்தேன். ஆஹா ! ஸ்வாமி ! இந்திரன் திருநாள் இவ்வருஷம் மிகவும் அழகாக நடக்கின்றது. கடற்கரைக் காக்ஷியின் மாக்ஷியை நான் என்னவென்பேன் ! அயல்தேசத்து வியாபாரிகள் தங்கள் தங்கள் வியாபாரச் சரக்குகளைக் கடற்கரையின் மண்மேட்டில் பல பல விதமாகப் பரப்பி வைத்திருப்பது பார்ப்பவர்களின் உள்ளத்தையும், கண்களையும் கவர்கின்றது. உண்மையில் நம் கடற்கரை ஓர் பெரிய பட்டினம் போலவே தோற்றுகிறது. ஆஹா எங்கு பார்த்தாலும் ஜனக்கூட்டம். இராஜ குமாரர்களின் அழகும், வீரர்களின் கம்பீரமான தோற்றமும், நர்த்தன நங்கையர்களின் எழிலும், இசை பாடும் இளநங்கையர்களின் குயில் போன்ற குரலும், ... ஆ ! இவைகளையெல்லாம் நினைக்கும் பொழுது, என் மனம் ஆனந்த ஸாகரத்தில் அன்றோ மூழ்குகின்றது. ஸ்வாமி ! ஒரு ஸந்தேகம். நம் நகரத்தார் ஆண்டு தோறும் இவ்விந்திர விழாவைக் கொண்டாடுவதின் காரணம் என்ன ? இது எக்காலத்தில், யாரால், எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ?

கௌ. வஸந்தா ! முன் ஒரு காலத்தில் 'தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்' என்னும் சோழ அரசனை அகஸ்தியர் ஸந்தித்து "வேந்தே ! புகார் எனப் பெயர் கொண்ட இக்காவிரிப்பூம்பட்டினத்தை வளம்படுத்துக" என ஆக்ஞையிட்டனராம். அதனை ஏற்ற சோழன், நகர் செழுமையடைவதற்கு முக்கியமானது மழை; அம் மழைக்குத் தலைவன் தேவர்களின் அரசனான இந்திரன்; ஆதலின், அவனை வணங்குவதே அதனை அடைவதற்கு வழியாகும் என எண்ணி, இந்திரனைக் கண்டு "தந்தையே ! எனது நகரில் தங்கள் பொருட்டுத் திருநாள் கொண்டாட நினைந்துள்ளேன். ஆதலின் அந்நாட்களில், தாங்கள் அங்கு எழுந்தருளி எம்மைக் கடாக்ஷிக்க வேண்டும்" என வேண்டினனாம். தேவர்கோனும் அதற்குட்பட,

அன்று தொட்டு ஆண்டு தோறும் இந்திர விழாக் கொண்டாடுதலைச் சோழ மன்னர்கள் மேற்கொண்டனர். இது தான் இந்திர விழாவின் வரலாறு

வஸந். ஸ்வாமி! மிகவும் ஸந்தோஷம். இத்தனை நாளாக இதையறியாமல் போனேனே! ஸரி. நேரமாகின்றது, நான் சென்று வருகின்றேன். மாதவி கோபிப்பாள்.

கேள. வீட்டில் சித்திராபதி, குழந்தை மணிமேகலை யாவரும் க்ஷேமந்தானே?

வஸந். யாவரும் க்ஷேமம் நான் போய் வருகிறேன்.

கேள. ஸரி. நானும் நாளைய தினம் குழந்தையைப் பார்க்க வருகின்றேன் .... எனக்கு எப்பொழுதும் மணிமேகலை ஞாபகந்தான். வாடா கிட்டு.

(வஸந்தமாலை செல்லல்)

கிட்டு. அண்ணு! என் கால்கள் வலிக்கின்றன. தூக்கிக்கொள்.

கேள. அடே பீடையே! இந்தக் கஷ்டத்திற்குத் தான் உன்னை ஓரிடத்திற்கும் அழைத்துப் போவதில்லை. அவளுக்கு என்ன தெரியும் இந்தக் கஷ்டங்களெல்லாம். அழைத்துப் போக மாட்டேன் என்ருல், வந்து விடுகிறது கோபம். நம் தலைவிதி. வாடா அப்பா. வா. (தலையில் ஒரு குட்டுக் குட்டி, அழச்செய்து, கிட்டுவைத் தூக்கிச் செல்லல்)

[பத்தாங் களம் முடிகின்றது]

களம் 11.

இடம் :- கடற்கரை.

காலம் :- மாலை.

நடர் :- மாதவி, கோவலன், வஸந்தமாலை.

(கோவலனும் மாதவியும் கடற்கரையின் அருகிலுள்ள ஓர் புன்னைமரத்தின் அடியில் அமர்ந்திருக்கிறார்கள். வஸந்தமாலை சற்று தூரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறாள்.)

மாத. காதலா ! இம்மாலைப் பொழுதில் இப்பெருங் கடல் நமக்கு எவ்வளவு அழகிய காட்சியைத் தருகின்றது.

கோவ. இப்பெரும் ஸமுத்திர ராஜனையும் அவன்மேல் சூரியனது மெல்லிய கதிர்கள் பொன்போன்ற ஒளி வீசுவதையும் உற்று நோக்குமிடத்து எல்லாம் வல்ல ஈசனின் அரும் பெரும் திறம் நமக்கு நன்கு தெரிகின்றது. என்னே இறைவனின் அமைப்பு !

மாத. ஆம் நாதா ! இதோ பாருங்கள். நம் காவிரி கடலுடன் கலக்கும் காட்சியை கவனிக்கும்பொழுது அது என் மனதிற்கு இதுசமயம் மிகவும் இன்பத்தை ஊட்டுகின்றது. ஆகவே வஸந்தா ! தயைசெய்து என் வீணையை எடு.

(வஸந்தமாலை வீணையை எடுத்து வந்து அளித்தல்)

கோவ. என் மனங்கவர்ந்த இளமங்கையே ! இதோ பார். இந்த ஸமுத்திர ராஜன் தன் நீண்ட அலைகளாகிய கையால், தன் காதலியாகிய காவிரிதேவியை எவ்வளவு எதிர்த்துத் தள்ளிய போதிலும் பத்னியாகிய நம் காவிரி மனதில் சிறிதும் வருந்காது பணிந்து அவனை மெல்ல மெல்லச் சேருங் காட்சி மனதிற்கோர் இன்பம் தருவதுமன்றி மாதற்கோர் படிப்பினையையும் கற்பிக்கின்றதல்லவா ?

மாத. ஆம் நாதா! இருந்தாலும் இந்தக் கடலுக்கு இவ்வளவு மமதைக் கூடாது. அது போகட்டும்! இதோ இசை மீட்டிவிட்டேன். பாடலாமா?

கோவ. பாடலாம்.

மாத. பாடலாம் என்றால் யார் பாடுவது முதலில்?

கோவ. நீதான் பாடவேண்டும்.

மாத. நீங்கள் தான் முதலில் பாடவேண்டும்.

கோவ. மாதவீ! இதென்ன பிடிவாதம் எங்கே பாடு கேட்போம்.

மாத. காதலா! தாங்கள் பாடிய பின்புதான் நான் பாடுவேன். எங்கே பாடுங்கள்.

கோவ. சீ! என்னவென்றாலும் பெண்களுக்குப் பிடிவாதம் அதிகம். (வீணையைப் அவளிடமிருந்து பெற்று பாடுகிறான்.)

திங்கள் மாலை வெண்குடையான் சென்னி செங்கோ லதுவோச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவா தொழிதல் கயற்கண்ணாய்!
மங்கை மாதர் பெருங்கற்பென் றறிந்தேன் வாழி காவேரி!

* * *

திரைவிரி தருதுறையே திருமணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
யிருகய லிணைவிழியே யெனையிடர் செய்தவையே.

(சிலப்பதிகாரம்)

மாத. ஆ! இதென்ன இவ்விதம் பாடினார். 'கங்கையை நம் அரசர் சேர்ந்தாலும் உத்தமியாகிய காவிரியே! நீ அவர் மீது வருத்தம் கொள்ளாதிருப்பாய். அதுவே மாதரின் பெருங்கற்பாம் எனப் பாடினரே! கற்பென்பது ஆண் பெண் இருவருக்கும் பொதுவாயிருக்க, கணவன் மட்டும் மற்றொரு மங்கையைச் சேரலாமாம். ஆனால் மனைவியானவள் அதில் சிறிதும் மனவருத்தம் கொள்ளக்கூடாதாம்.

இதென்ன நியாயம். இத்துடன் நிற்காமல் மற்ருெரு பாட்டையுமன்ருே பாடினர் .... தெய்வமே! அதன் கருத்தை நினைக்கும்பொழுது எனது இன்பமெல்லாம் பறந்துபோய் துன்பமெல்லாம் அன்ருே மிகுந்து நிற்கின்றது. ஆ! இக்கொடும் வினைக்கு என் செய்வேன் — அலைவீசுகின்ற ஒரு கரையாம். அழகிய ஓர் மணல் மேடாம், வாஸனை மிகுந்த நல்ல புஷ்பங்களையுடைய ஓர் சோலையாம், மணங்கமழும் நீண்ட கூந்தலாம், சந்திரனைப் போன்ற முகமாம், கெண்டை மீன் போன்ற இரண்டு கண்களாம், இவரை இடர் செய்தனவாம் — ஆஹா நான் மோசம் போனேன். என் பிரிய காதலர் என்னை விடுத்து வேறு ஒருத்தியின்மீது தீராக் காதல் கொண்டிருக்கிருர் என்பதைத் தாம் பாடிய பாட்டால் நன்கு வெளிப்படுத்தி விட்டார். என்ன கூற்று! என்ன ஸாகஸம்! சீ! ஆடவர்களையே நம்பலாகாது — இருக்கட்டும் நாதா! நன்ருகப் பாடினீர்கள்! எனக்கும் அப்படிப் பாடத் தெரியாது என நினைத்து விட்டீர்களோ.

கோவ. பெண்ணே! நாடகக் கலையிலும், சங்கீதக் கலையிலும் நம் அரசரால் நீ நன்கு மதிக்கப் பெற்றதையும் "தலைக்கோல்" என்னும் பட்டத்தை நீ பெற்றதையும் அறியாமலா நான் உன்னை நாடினேன். எங்கே, பாடு கேட்போம்.

மாத. மயக்கிப் பசப்பிப் பேசுவதில் ஆடவர்களே மிக வல்லவர்கள். இருக்கட்டும் கொடுங்கள் அந்த வீணையை.

(கோவலனிடமிருந்த வீணையைப் பெற்றுப் பாடுகிருள்.)

மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ வாடை யதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி!
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்த வெல்லா நின்கணவன்
றிருந்து செங்கோல் வளையாமை யறிந்தேன் வாழி காவேரி!

* * *

கானல் வேலிக் கழிவாய் வந்து
நீனல் கென்றே நின்ருே ரொருவர்
நீனல் கென்றே நின்ரு ரவர்நம்
மானேர் நோக்க மறப்பா ரல்லர். (சிலப்பதிகாரம்)

கோவ. ஆ! இவளா இப்படிப் பாடினள்! காதலியாகிய நம் 'காவிரி யின் மாக்ஷிக்குக் காரணம், காதலனாகிய நம் அரசனின் நேர்மையான ஆக்ஷியியே' என்றல்லவோ பாடினள். உற்று நோக்குங்கால், 'ஒரு நாயகன் நேர்மையுடன் நடப்பானே யாகில் நாயகியும் அவ்வாறே நடப்பாள்' என்ற கருத்தை யன்றோ நமக்கு இவள் அறிவுறுத்துகின்றாள். அது தான் போகட்டு மென்றால் மற்றொரு பாட்டன்றோ மனதைப் பிளக்கின்றது. என்ன தைரியத்துடன் இவள் இதைப் பாடியிருக்க வேண்டும். கடற்கரையின் வேலிக்கு அருகில் ஒருவர் வந்து கொடு என்று கேட்டு நின்றாராம். அப்படிக் கேட்ட அவரை மான் விழி போன்ற தன் அழகிய கண் களால் பார்த்தனளாம். அந்தப் பார்வையை அவர் என்றும் மறக்க மாட்டாராம். ஆ! இதுவரை இவளை நம்பி மோசம் போனேன். இதுவோ என் தலைவிதி.

மாத. (தனக்குள்) என் பாட்டு இவரை நன்கு வருத்தியது! வேண்டும். வேண்டும். என்னை வருந்தச் செய்த இவரை இப்படித்தான் வருந்தச் செய்யவேண்டும்.

கோவ. சீ! இவள் பெருந்துரோகி. வஞ்சகமே நிறைந்த இவள், தான் வேறு ஒருவன்மீது கொண்ட காதலைக் குறிப்பிட்டுப் பாடினள். இப்பொழுது தான் இவ்வஞ்சியின் மன நிலையை அறிந்தேன்.

மாத. வாருங்கள்! நாம் அச்சோலையின் உள்ளே செல்லலாம்.
(கையைப் பிடித்திழுத்தல்)

கோவ. சீ! விடு என் கையை. போதும் உன் ஸாகஸம். பொய்யை மெய்யாகக் காட்டி நடக்கும் பாத்தையாகிய உன்னுடன் இதுகாலம் வாழ்ந்த என் அறிவீனத்திற்காக மிகவும் வருந்துகின்றேன். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் உன் இயற்கைக் குணத்தை இன்றே கண்டேன். இனி என் உயிர் உள்ள அளவும் உன்னை வேண்டேன். இது திண்ணம்.

மாத. இதென்ன! ஒரு நாளுமில்லாதபடி வார்த்தையாடுகின்றீர்களே! அடியேன் இப்பொழுது என்ன குற்றம் புரிந்தேன்?

கோவ. போதும், போதும் உன் உறவு! என்னையா ஏமாற்றப் பார்த்தனை! உன் ஸாகஸம் இனி என்னிடம் நடவாது. கண் காட்டி ஆசை யூட்டி அனுப்பிய அந்த ஆடவனுடன் இனிக் கூடி வாழ்.

மாத. ஹா! என்ன! என்ன தெரிவித்தீர்! காதலா! தாங்களோ இவ்விதம் பேசுவது! இதுவோ தமக்கழகு .... ஆ! நாதா! பரமன் அறிய ஒரு பாபமும் அறியேனே!

(கையைப் பிடித்தல்)

கோவ. (உதறித் தள்ளி) சீ! என்னைத் தொடுவதற்கு உனக்கு என்ன யோக்கியதை இருக்கின்றது. விடு என்னை! தெய்வமறிய உன் முகத்தில் இனி விழியேன்.

(உதறி ஓடுகிறான்)

மாத. ஐயோ தெய்வமே! (கீழே வீழ்ந்து மூர்ச்சையாகிறாள் - வஸந்தமாலை ஓடிவந்து மூர்ச்சை தெளிவிக்கிறாள்)

வஸந். ஆ! மாதவி! மாதவி! உன் உடம்பிற்கு என்ன! எங்கே கோவலர்?

மாத. அடி வஸந்தா! இனி நான் என்ன செய்வேன். என்னைக் கடிந்து பேசியதுமின்றி, என் முகத்தை இனி எப்பொழுதும் பார்ப்பதுமில்லை எனக் கோபத்துடன் கூறி என்னைப் பிரிந்து ஓடினர். ஐயோ!

வஸந். மாதவி! என்ன வேடிக்கை யிது உன்னையாவது, பிரியவாவது. இவ்விஷயம் நம்பத் தக்கதாயில்லையே. காரணம்?

மாத. காரணம் கேட்டதற்கு மறுத்ததுமின்றி மற்றொரு வார்த்தையுமன்றே கூறினர். ஐயோ! அந்த வார்த்தையை நினைக்கும்பொழுதே என் உயிர் சோர்கின்றதே.

வஸந். உன் மனம் வருந்தும்படி என்ன கூறினர்?

மாத. ஹா! அதை நான் எவ்வாறு சொல்வேன்! வஸந்தா! 'கண் காட்டி, ஆசைஊட்டி அனுப்பிய அந்த ஆடவனுடன் இனிக் கூடி வாழ்' எனக் கூறி மறைந்தாரடி.

(அழுகிருள்)

வஸந். ஆடவனு! அவன் யார்? கோவலரா இவ்விதம் கூறினர்! மாசற்ற அவர் உன்னை அவ்விதம் கூறுவதற்கு நீ என்ன குற்றம் செய்தாயோ!

மாத. என் குலதெய்வமாக விளங்கும் அவருக்கோ குறை செய்வேன்! என் குணத்தை நன்கறிந்த நீயே இவ்விதம் தெரிவிக்கின்றனையே! ஆம்! இதுவும் என் வினையின் விளைவு போலும்.

வஸந். பின் எதற்காக அவர் உன்னைக் கோபித்துப் பிரிந்து செல்ல வேண்டும்?

மாத. அதுதான் விளங்கவில்லை. முதலில் அவர் சில வரிப்பாடல்களைப் பாடினர். அவ்விதம் பாடிய பாடல்களின் பொருளை ஆழ்ந்து நோக்கிய பொழுது அவர் வேறு ஒரு பெண்மீது தாம் கொண்ட காதலைக் குறிப்பிட்டுப் பாடியதாக தோன்றியது. அதுபோது என் மனம் எவ்வாறிருக்கும் நீயே சொல்? உடனே நானும் அவர் மனம் வருந்தும்படி சில வரிப்பாடல்களைப் பாடினேன். அப்பொழுதே என்னைக் கோபித்துப் பிரிந்தார்.

வஸந். அடி பைத்தியமே! அவர் ஒரு பெண்ணை இச்சித்தது போல் பாடினுலுங்கூட, நீயும் அவ்வாறு வேறு ஒரு ஆடவனைக் காதலித்தது போல் பாடலாமா? வீணுக அவர் மனம் நோகும்படி செய்தனையே.

மாத. வேண்டுமென்று பாடினேன். ஏதோ விளையாட்டாகப் பாடினேன். அது வினையாகவன்றோ முடிந்தது. இவ்வளவு காலமில்லாமல், இன்று எனக்கு ஏன் இந்த புத்தி வந்ததோ தெரியவில்லை — வஸந்தா! உயிர் போன்ற அவரைப் பிரிந்து, இனி எப்படி உயிர் வாழ்வேன்!

வஸந். பெண் புத்தி பின் புத்தி என்பதை நீயே நிரூபித்தனை.... இருக்கட்டும், மாதவி! கவலைப்படாதே. காலையில் அவரை உன்னிடம் எப்படியும் சேர்ப்பிக்கின்றேன்.

மாத. என்ன! காலையிலா! அதுவரை யான் அவரை விட்டுப் பிரிந்து எப்படி இருக்க முடியும். ஹா! இதுகாறும் ஒற்றுமையுடன் இருந்தோம். இன்று பிரிந்தோம். ஐயோ! இதனை நினைக்கும்பொழுது என் மனம் மிகவும் சஞ்சலமடைகின்றதே! இது வினையின் விளைவோ என அஞ்சுகின்றேன்.

வஸந். மாதவி! கதிரவனும் மறைந்து விட்டான். சீக்கிரமே வீட்டிற்கு வந்து ஒரு கடிதம் எழுதிக் கொடு, அதை அவரிடம் சேர்ப்பித்து அவரை உன்னிடம் கொண்டு வந்து சேர்ப்பிக்கின்றேன்.

மாத. வஸந்தா! நீ விரும்பியபடியே கடிதம் எழுதித் தருகின்றேன். எந்தவித மாயினும் ஸரி. அவரை என்னிடம் கொண்டு வந்து சேர்த்து விடு உனக்கு எதை வேண்டுமானாலும் தருகின்றேன்.

வஸந். மாதவி! எனக்கு ஒன்றும் வேண்டாம். பரிபூரணமான உன்னுடைய அன்பு என்றும் இருந்தால் போதுமானது. சீக்கிரமாக வா! (இருவரும் செல்லல்)

[பதினொன்றாங் களம் முடிகின்றது.]

களம் 12.

இடம் :- ஓர் தெரு.

காலம் :- அந்திவேளை.

நடர் :- கோவலன்.

கோவ. ஆ தெய்வமே! தாஸி குலத்தில் பிறந்த, ஒரு குறையைத் தவிர மற்ற விஷயங்களிலெல்லாம் வேத விதிப்படி மணம் செய்து கொண்ட மனைவி போல் இதுகாறும் நடந்து வந்த மாதவி, கல்வியில் சிறந்த என் காதலி, திடீரென வேறு ஒருவனைக் காதலித்துப் பாடியதை நினைக்க நினைக்க அது மனத்தைப் புண்படுத்துகின்றதே. நான் காவிரி நதியை ஓர் நங்கையாகச் சிறப்பித்துப் பாட, பொய்யை மெய்யாகக் காட்டி நடக்கும் குலத்தில் தோன்றிய அவள் என் பாட்டின் உட்கருத்தை உணராது தான் வேறு ஒருவன்மீது கொண்ட காதலை உடனே குறிப்பிட்டன்றோ பாடினள் கலைகளை நன்கு கற்ற இவளே இத்தகைய மாறுபாடான எண்ணம் கொள்வாளேயாகில் சிறிது கற்ற பெண்மணிகளின் தன்மை யாதோ அறியேன். பெண்களிடம் எவ்வளவு ஸாதாரணமாகப் பேசினும், அதனில் குற்றம் கொள்வார்கள். எண்ணறக் கற்றும் எழுத்தற வோதினும் பெண் புத்தி பேதைமைத்தே என்பதை மாதவி நிரூபித்தனள். குலத்தளவே யாகுமாம் குணம். அன்பால் விரும்பாது பொருளுக்காக விரும்பும் வேசையர்களின் இன்சொல், பின்னர் துன்பம் தரும் என ஆன்றோர் அறியாமலா கூறினர். நெஞ்சில் வஞ்சக முடைய மாதவியே! உன்னை இதுகாறும் அறிவீனமாய்ச் சார்ந்ததாலன்றோ, என் கற்புள்ள மனைவியை துறந்தேன், பொருளை இழந்தேன், குலமுறையையும் அறநெறியையும்

மறந்தேன். ஆ! இனி என் செய்வேன். கண்ணே கண்ணகி! உன்னை இதுகாலம் மறந்ததினால் விளைந்த வினையல்லவா இது. ஆம். ஆம்! ஸந்தேகமில்லை கண்ணகி! எப்படி உன் தூயமுகத்தைப் பார்த்து உன் மன்னிப்பைப் பெறுவேன். ஆ தெய்வமே! இப்பாபியைக் கைவிடாதீர்.

(செல்லல்)

[பன்னிரண்டாங் களம் முடிகின்றது.]

களம் 13.

இடம் :- கண்ணகியின் வீடு.

காலம் :- மாலை.

நடர் :- தேவந்தி, கண்ணகி, பணியாளன், கோவலன், வஸந்தமாலை.

(கண்ணகியும், தேவந்தியும் பேசிக்கொண்டிருத்தல்)

தேவ. கண்ணகி! நீ படும் துயரத்தை இன்னமும் கடவுள் பார்த்துக் கொண்டிருப்பது தான் ஆச்சரியம். உலகில் ஒவ்வொருவருக்கும் இன்பமும் துன்பமும் மாறி மாறி வருவதுதான் இயற்கை. ஆனால் உன் பக்கலில் துன்பமே தொடர்ந்து நிற்கின்றதே. என்ன வஞ்சகம்! என்ன தைரியம்! கண்ணகீ, கேட்டனையா ஸமாசாரம்! இன்று கடலாட, உன் கணவர் மாதவியுடன் சென்றனராம். வெகு அழகு! கோவலர் கொடுமை ஒரு குன்றினும் பெரிது. ஆனால் வஞ்சக நெஞ்சினள் மாதவியின் கொடுமையோ, மலையினும் பெரிது.

கண். தேவந்தி! என் கணவரை நீ இவ்விதம் சொல்லவும் நா இடந் தந்ததோ? அந்தோ! நான் இதனைப் பொறுக்க மாட்டேன். இனித் தயை செய்து என் கணவனுடைய செய்கைகளைக் கண்டித்துக் கூருமலிருக்கும்படி நான் உன்னை மிகவும் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தேவ. ஏதோ! சிறு வயது முதல் உன்னுடன் பழகிய வாஞ்சை யாலும், மாதவியின் மேலுள்ள கோபத்தினாலும் உன் காதலரின் செய்கைகளைக் கண்டித்தேன். அது குற்ற மாயின் மன்னிப்பாய். எனினும் மாதவியை நினைக்குந் தோறும் என் மனம் பதைக்கின்றது! மகா வஞ்சகி அவள்!

கண். அவள் வஞ்சகி அல்லள். அவள் இழி குலத்தில் உதித்தாலும், மகா உத்தமியாம். என் காதலரின் மனம் கோணுது நடக்கும், பெருமையுடையவளாம். என் னிடத்தும் அதிக அன்பு உடையவளாம். தனக்குப் பிறந்த மணிமேகலையை "இது கண்ணகியின் செல்வக் குழந்தை" என அடிக்கடி உரைப்பாளாம். தேவந்தி .... ஆ! அக் குழந்தையாவது என்னிடமிருந்தால் என் மனம் எவ்வளவு ஸந்தோஷமடையும்! பாவி நான், அப்பாக்கி யத்தைக்கூடப் பெருமற் போனேனே ....

தேவ. ஆ! உன் உள்ளத் தூய்மையை யான் எங்ஙனம் புகழ் வேன்! கணவனின் மனம் கோணுது நிற்கும், உன் குணத்தை நான் எவ்விதம் போற்றுவேன்! ஐயோ! உண்மையில் மாதவி நல்ல எண்ணமுடையவள் ஆயின் உன் கணவனை அவள் ஏன் இங்கு அனுப்பலாகாது?

கண். என் கணவனை என்னிடமிருந்து பிரித்த என் வினையை எண்ணி எண்ணி நான் இன்னமும் உயிர் வாழ்ந் திருப்பதைப் போல், மாதவி இருக்க மாட்டாள். அவள் மகா கற்புடையவள் ஆதலின் தன் உயிர் பிரிந்தாலல்லாது

தன் காதலனைப் பிரியவிட மாட்டாள். இந்த உண்மையை நன்கறிந்தே என் காதலர், அவளைப் பிரியப் பயப்படுகிறாராம் .... மாதவி முற்பிறப்பில், நல்ல தருமத்தைச் செய்திருக்கிறாள். அதன் பலனை இப்பொழுது அனுபவிக்கிறாள். இதற்கு நாம் என்ன செய்யக்கூடும்.

தேவ. உண்மை! கண்ணகி! உன் குணத்திற்குத் தக்கபடி, ஈசன் வழி விடுவார். நேரமாகின்றது. அந்திப்பொழுது வந்தது .... அதோ பார்! எதிர் வீட்டில் தீபம் ஏற்றி வைக்கின்றனர்.

கண். ஆம். பொறு! இதோ விளக்கேற்றுகின்றேன்.

(விளக்கேற்றி, தேவந்திக்குக் குங்குமமும் தாம்பூலமும் அளிக்க, ஓர் பணியாளன் ஓடி வருகிறான்)

காவ. தாயே! உமது கணவர் வருகிறார்.

கண். என்ன! என் கணவரா! ஆ தெய்வமே! உன் திருவருளை யான் எங்ஙனம் புகழ்வேன்!

தேவ. கண்ணகீ! நற்காலம் கிட்டியது நான் வருகின்றேன். (செல்லல் - கோவலன் மெல்லப் பிரவேசித்தல்) ஆ! நாதா! நாதா! (வணங்குகிறாள்)

கோவ. பெண்கள் திலகமே! பாவியேனை மன்னிப்பாய். (மூர்ச்சித்து வீழ்ந்து) ஆ என் கண்ணே! கண்ணின் மணியே! கற்புக்கரசியே! யான் இதுகாறும் உனக்குச் செய்த பெரும் பிழையை மன்னித்து என்னை ஆதரிப்பாய்!

கண். ஆ! பிராண நாதா! தாங்கள் கூறிய வார்த்தை என் மனத்தை வருத்துகின்றது. தங்களுடைய திருப்பாத சேவை, எப்பொழுது கிட்டும் என விதியை நொந்து நிற்கும் அடியேனைத் தாங்கள் "என்னை மன்னித்து ஆதரிப்பாய்" எனக் கேட்டது என் நெஞ்சத்தைப்

பிளக்கின்றதே. அந்தோ! இவ்வார்த்தையைத் தங்களிடமிருந்து கேட்க, யான் யாது தீது புரிந்தேனோ! காதலா! தங்களுக்குப் பணிவிடைகளைச் செய்யக் காத்திருக்கும் என்னைத் தாங்கள் மன்னிப்புக் கேட்டல் முறையோ! அந்தோ தெய்வமே! என்னை மன்னிப்பீர்! நாதா! அடியேன் ஏதேனும் பிழை செய்திருப்பினும், அதைப் பொருட்படுத்தாது மன்னித்தருள வேண்டுகின்றேன்.

கோவ. என் கண்ணே! குற்றங்களுக்கெல்லாம் உறைவிடமாகிய என்னை நீயன்றோ க்ஷமித்துப் புனிதப் படுத்தல் வேண்டும். பொய்யை மெய்யாகக் காட்டிப் பொருள் பறிக்கும் பாத்தையாம் மாதவியை நம்பி, மோசம் போனேன். என் குலத்தோர் சேர்த்து வைத்த அரும்பொருளை யெல்லாம் அவள் பொருட்டு அழித்தேன். என் முன்னோர்களின் புகழைத் துறந்தேன். கற்பிற் சிறந்த உன் நினைவை மறந்தேன். பாபியாகிய நான், உன் மன்னிப்பைப் பெற்றாலன்றி உய்ய முடியாது. கண்ணே! நீ என் மெய்க் காதலி என்பது உண்மையாயின், பத்தினி என்பது ஸத்தியமாயின், உன் கனிவாய் திறந்து "மன்னித்தேன்" என ஒரு வார்த்தை கூறுவாய்.

கண். ஆ நாதா! மன்னித்தேன். ஆயினும் மன்னித்தருள வேண்டும்.

கோவ. பெண்ணே! புனிதமடைந்தேன். மன்னித்தேன் எனக் கூறிய நீ உடனே "மன்னித்தருள வேண்டும்" என ஏன் தெரிவித்தனை?

கண். நாதா! அடியாள் தங்களை "மன்னித்தேன்" எனக் கூறுதல் முற்றிலும் தவறாகும். ஆயினும் கணவன் சொல்லை மீறலாகாது என நினைத்துத் தங்கள் உத்திரவை என் சிரமேற்கொண்டு 'மன்னித்தேன்' எனக்கூறினேன். பின்னர் நான் அவ்வாறு கூறிய குற்றத்தைத் தாங்கள் மன்னிக்க வேண்டியே அவ்விதம் கூறினேன்.

கோவ. ஆ! உத்தமி! இனி என் ஜென்மம் ஈடேறுமென்பதற் கையமில்லை. கண்ணகி! நீண்டகாலமாக என் முன் னோர்கள் தேடிவைத்த நிதியையும், கீர்த்தியையும், பொது மகள் மாதவியின் பொருட்டுச் செலவழித்துவிட்டேன். அதனை நினைக்குந்தோறும், என் மனம் அனலிடை மெழுகு போல் உருகுகின்றது. சீலம் சிதைந்து, வறுமையும், வெட்கமும் நிறைந்து வாடும் யான் இனி எப்படி முன் போல் வாழ்வேன். ஆ! துன்பத்தையே அனுபவிக்கும் தூமணியே! எதை நினைக்கினும் துன்பமே எங்கும் முன் நிற்கின்றதே. இனி யாது செய்வேன்!

கண். ஓஹோ! மாதவிக்குக் கொடுக்கப் பொருள் இன்மையால் இவ்விதம் வருந்துகின்றனரோ! எது எவ்வாறாயினும் சரி, கணவரைக் களிக்கச் செய்யவேண்டியது கற்புடைய பெண் களின் கடமையாகும். ஆருயிர்க் காதலா! கண்ணகி என்னும் பொருள் உமக்குச் சொந்தமாக இருக்கும் வரை, தாங்கள் கவலைப்பட வேண்டாம் இதோ என்னிடம் இரண்டு சிலம்புகள் உள்ளன. அவற்றைத் தருகிறேன். பெற்றுக்கொண்டு இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள். மனம் கலங்க வேண்டாம்.

கோவ. ஆ! இவள் மெய்யன்பினையும், உள்ளத் தூய்மையையும், யான் எங்ஙனம் புகழ்வேன்! இத்தகைய உத்தமியை வஞ்சித்து, மாதவியின் மையலில், இதுகாறும் வீழ்ந் தேனே! ஈசனே! என்னை மன்னிப்பாய், மன்னிப்பாய்.... கண்ணகி! அமுதம் போன்ற உன் வார்த்தைகள் எனக்கு ஓர்விதப் புதிய பலத்தையும், உற்சாகத்தையும், நம்பிக் கையையும், அளிக்கின்றன. நீ கொடுக்கும் சிலம்புகளை விற்று, அதனை மூலப் பொருளாக வைத்து நல்ல வியா பாரம் செய்து, இழந்த பொருளை மீளவும் சேர்க்க எண்ணு கின்றேன். காதலீ! நாம் இனி இவ்வூரில் ஒரு க்ஷணமும் தங்கலாகாது. ஆதலின் நாளை அதிகாலையிலேயே ஒருவ ருக்கும் தெரியாமல் நாம் இருவரும் மதுரைமா நகருக்குப் புறப்படவேண்டும். சித்தமாக இரு.

கண். அப்படியே செய்வோம் ஆயினும் நாதா! மாமன், மாமிகளுக்கு இவ்விஷயத்தைத் தெரியப்படுத்த வேண்டாமா?

கோவ. இவ்விஷயம் அவர்களுக்குத் தெரிந்தால், நம்மை மதுரை செல்ல விடாமல் தடுத்து விடுவார்கள். பிறகு என் மனம் உடைந்துவிடும். (வஸந்தமாலை ஓர் ஓலைச்சுருளுடன் பிரவேசம்) வஸந்தா! உன்னை யார் இங்கு அனுப்பியது?

(கண்ணகி உட்செல்லல்)

வஸந். பிரபோ! தம்மைப் பிரிந்த மாதவி படுந்துயரைச் சொல்லி முடியாது. உடனே தாங்கள் வாராவிட்டால், அவள் இறப்பது நிச்சயம். இதோ இவ்வோலையைத் தங்களிடம் சேர்ப்பித்து உடனே அழைத்துவரச் சொன்னாள்.

கோவ. யார்! அவ்வேசி மாதவியா! அவள் தன் குலத்தின் தன்மைக்கேற்ப பொய்யை மெய்யாகக் காட்டி நடித்தனள். ஆகா! என்னே அவள் ஸாகஸம். மெய்யன்பு கொண்டவள் போல், கெஞ்சினாள், கொஞ்சினாள், குலாவினாள், ஊடினாள், கூடினாள். யானும் உண்மையறியாது மயங்கி விட்டேன். சீ! இனிப்போதும் இவள் நட்பு. வஸந்தா! இன்று கடலாடி வந்தமொடு எம் நட்பு அற்றது என அவளிடம் கூறு. (ஓலையைப் பார்க்காமலே திருப்பிக் கொடுத்து) இவ்வோலையை நான் பார்க்கவேண்டியது அவசியமில்லை. இதை எடுத்துக்கொண்டு சீக்கிரமே இவ்விடத்தை விட்டுச் செல்.

வஸந். அருட்பெரும் வள்ளலே! தாங்கள் இவ்விதம் அவளைச் சோதித்தல் அழகல்ல. நன்கு யோசித்துப் பாருங்கள். நீங்கள் இப்பொழுது புகன்ற வார்த்தைகள், அவள் செவிகளிற் படுமாயின், அவள் கதி என்ன ஆகுமோ அறியேன். அவளை மறந்தாலும், உங்கள் காதற் குழந்தை மணிமேகலையை எண்ணியாவது ....

கோவ. வஸந்தா! வீணாக என் மனத்தினைக் கலக்காதே. மரியாதையாக வெளியே செல். உங்கள் யோக்கியதைகள் எல்லாம் நான் நன்கு அறிவேன். நீ என்ன கூறிய போதிலும் ஸரி. இனி எக்காலத்தும் நான் மாதவியின் முகத்தில் விழிக்க மாட்டேன். இது ஸத்தியம்.... இனி நீ செல்லலாம்.... போ. வெளியே.

வஸந். ஆ தெய்வமே! உத்தமி மாதவியின் கதியென்ன? ....

(செல்லல்)

கோவ. கண்ணகி! (கண்ணகி பிரவேசம்) காலையில் புறப்படலாமல்லவா?

கண். புறப்படலாம்.... நாதா! நேரமாகின்றது சாப்பிட வாருங்கள்.

கோவ. கண்ணே! வந்தேன் இதோ.

[பதின்மூன்றாங் களம் முடிகின்றது.]

களம் 14.

இடம் :- காவிரிப்பூம்பட்டினத்தின் புறத்தெரு.

காலம் :- கடைசாமம்.

நடர் :- கோவலன், கண்ணகி.

(கோவலனும், கண்ணகியும் ஒரு சிறு மூட்டையுடன் பிரவேசித்தல்)

கோவ. கண்ணகி! நாம் சீக்கிரமே இந்நகர் எல்லையைக் கடக்கா விட்டால், கதிரவன் தோன்றி நம்மைக் காட்டிக் கொடுத்து விடுவான். அதற்காகத்தான், நான் இன்னும் சற்று முன்னரே புறப்பட்டிருக்க வேண்டுமென்று கூறினேன்.

கண். நான் அன்புடன் வளர்த்து வந்த மான், என்னை வெகு நேரம்வரை பிரியாமல் கண்ணீர் விட்டது. அதனுடன் கொஞ்சிக் குலாவி, அதனைத்தேற்றி தேவந்தியிடம் விட்டு வரச் சிறிது நேரமாயிற்று. மேலும் அவளும் சிறு குழந்தை போல் அழ ஆரம்பித்து விட்டாள். சீக்கிரமே அவளையும் தேற்றி ஓடோடி வந்தும் சற்று நேரமாய் விட்டது .... ஆ காதலா! இனி என் அழகுள்ள மானையும், அன்புள்ள தேவந்தியையும் என்று காண்பேனோ.

கோவ. கண்ணே! வெகு சீக்கிரமே திரும்பி விடலாம் .... ஆ! இதோ நமது புகார் நகரின் கோட்டை வாயிலை அடைந்து விட்டோம். இதை விரைவிற் கடந்து விட்டால் பிறகு பயமில்லை.

கண். நாதா! இக்கோட்டை வாயிலைக் காலையில் பார்த்தால், எவ்வளவு அழகாக விளங்கும். ஆ! எங்கள் செல்வப் புகார் நகரமே! சென்று வருகின்றோம்.

கோவ. ஆ! காதலி! நம்மை இதுகாறும் தாய்போல் வளர்த்த இப்புகார் நகரத்தைப் பிரிகின்றோம். ஏ புகார் நகரமே! உன்னிடத்தில் நாங்கள் பிறந்து வளர்ந்தோம். உன்னுடைய ஆசியினால் சகல சம்பத்துக்களையும் பெற்றோம். ஊழ்வினைப் பயனால் உன்னை இதுபோது பிரிகின்றோம். புகார் நகரத்தைக் காக்கும் என் அன்னையே! இதோ உனது பாதாரவிந்தங்களைப் பணிவுடன் வணங்குகின்றேன். நான் எக்குற்றம் செய்திருந்தபோதும் என்னை மன்னிப்பாய். தாயே! நான் எந்த நாட்டிற்குச் சென்றபோதிலும், உன் மீதே அபிமானம் வைப்பேன். உனக்கே தொண்டு செய்வேன். இப்பூதவுடல் இவ்வுயிரை விட்டு நீங்கினும், எனது ஆத்மா உனது திருவடிகளையே என்றும் சிந்தித்துப் பூஜிக்கும்.

கண். நாதா! தங்கள் வார்த்தைகள் என் மனத்திற்குக் கலக்கத்தை உண்டு பண்ணுகின்றன. இது என்ன இவ்விதம் உரைக்கின்றீர்.

கோவ. பெண்ணே! 'இது என் ஊர், இது என் தாய் நாடு, இதற்கே பணி செய்து, உயிர் விடுவேன்' எனக் கூறாத மக்களும் உலகில் உண்டோ! ஆதலின் நீ கலங்காதே. கண்மணி! இனி நீயே எனக்கு உயிர்த்துணைவி யாதலின், நான் இனி எதற்கும் அஞ்சேன். புறப்படு.

(இருவரும், வருத்தத்துடன் வணங்கிச் செல்லல்.)

[பதினான்காங் களம் முடிகின்றது]

களம் 15.

இடம் :- ஓர் அடவி.

காலம் :- காலே.

நடர் :- கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள்.

(கவுந்தி அடிகள் ஓர்புறம் தவம் செய்துகொண்டிருத்தல் - கோவலனும், கண்ணகியும் பிரவேசித்தல்)

கண். காதலா! நடக்க நடக்க என் கால்கள் நோகின்றனவே. நாம் மதுரையின் அருகில் வந்து விட்டோமா.

கோவ. ஆ! தெய்வமே. இதற்கு யான் என் செய்வேன்? முட்களும், கூரிய கற்களும் நிறைந்த இக்காட்டில், இவளே அழைத்துவர, பாபி யான் என்ன பாபம் செய்தேனே மதுரையோ சுமார் முப்பது காவத தூரம் இருக்கின்றது. சில காவத தூரம் வந்தவுடனேயே "மதுரையைக் கிட்டி விட்டோமா" எனக் கேட்கின்றனளே! இதற்கென் செய்வேன்.... ஈசனே! பாவியேனே மன்னிப்பாய். கண்ணே சற்றுத் தைரியங்கொள். மதுரை இன்னும் சிறிது தூரத்தில் தான் உள்ளது. சீக்கிரமே சேர்ந்துவிடலாம். கண்ணகி! எனக்கும் சற்றுக் களேப்பாக இருக்கின்றது இச்சோலேயிலேயே சற்று நேரம் தங்கிக் களேப்பாறிய பிறகு மேலே செல்வோம்.

கண். மிகவும் ஸந்தோஷம். (அமர்ந்து) ஆஹா! இங்குள்ள மலர் மரங்களும், நறுமலர்களினுல் நிரப்பப்பட்ட குளிர்ந்த தடாகங்களும், தென்றல் மேடைகளும், மனதிற்கு எவ்வளவு இன்பத்தைத் தருகின்றன. (கவுந்தி அடிகளேக் கவனித்து) நாதா! நாதா! அதோ பாருங்கள். அம் மேடையில் ஓர் தவமாது வீற்றிருக்கின்றனர்.

கோவ. ஆ! இவர்கள்தான் இவ்வனத்தில் வசிக்கும், தவமாதாகிய கவுந்தி அடிகள் போலும்.... ஆ! இதுவும் நமது நற்காலமே. கண்ணகி! வா. நாம் இவரது திருவடிகளை வணங்குவோம். தவத்தீர்! அடிபணிகின்றோம்.

(கவுந்தி அடிகளை வணங்க, அவ்வம்மையார் கண் விழித்து)

கவுந். உங்கள் வரவு நல்வரவாகுக. என் பிரிய மக்களே! நீங்கள் மிக்க அழகும், சிறந்த குலப்பிறப்பும், சீலமும் உடையவர்களாய்க் காணப்படுகிறீர்கள். அங்ஙனமிருக்க, தீவினைக்கு ஆளானவர்கள் போல், உங்கள் நாட்டை விட்டு, இக்காட்டை அடைந்ததின் காரணம் யாதோ?

கோவ. அம்மணி! புகார் என்னும் காவிரிப்பூம்பட்டினத்தில், நாங்கள் வசிப்பவர்கள். அடியேன், முன்னோர் வைத்த முதற்பொருளை யெல்லாம், தீயவழிகளில் சிதைத்து விட்டேன். ஆதலின் மாமதுரை சென்று, வியாபாரம் செய்து, மீண்டும் பொருள்தேட விரும்பி, ஆங்குப் புறப்பட்டோம்.

கவுந். அருக தேவன் உங்களைக் காக்கட்டும். அப்பா! நீ கொண்ட எண்ணம் சரி. ஆயினும் பஞ்சுபோன்ற அடிகளையுடைய இப்பெண்மணி, பருக்கைக் கற்கள் நிரம்பிய இக்கொடுங் கானில், எப்படி நடப்பாள். ஆ! ஊழ்வினைப் பயன் யாதோ. அதை யார் அறிவார்.

கோவ. தாயே! அருந் தவத்தையுடைய தங்கள் உதவியும், ஆசியும், எமக்கு இருக்குமாயின், இக்காட்டைக் கடந்து மதுரைப் பதியை அடைதல் மிகவும் எளிதாகும்

கவுந். மக்காள்! உங்களைக் கண்டு என் மனம் இன்புறுகின்றது. நானும் மதுரையை அடைந்து, அங்குள்ள பல தவமுனிவர்களைக்கண்டு, சிற்சில ஐயங்களை நீக்கிக்கொள்ள விரும்புகின்றேன். ஆதலின் உங்களுடன் யானும் வர எண்ணுகிறேன்.

கோவ. அடிகளே! இதுவும் நாங்கள் செய்த பெரும் பாக்கியமே. இனி எங்களுக்கு யாதொரு கவலையுமில்லை. ஆ! அடிகளே! தாங்கள் "வருகிறேன்" எனக் கூறிய மாத்திரத்தில், கண்ணகி கொண்ட முகமலர்ச்சியைப் பாருங்கள். இனி இவள் வழி நடப்பைக் கண்டு வருந்தாள்.

கவுந். ஸரி வாருங்கள். சீக்கிரமே காவிரியை, ஓடமேறிக் கடந்து, பின்னர் உறையூர் செல்வோம்.

கோவ. உத்திரவுப்படி நடந்து கொள்ளுகிறோம்.

கவுந். குழந்தாய் கண்ணகி! அதோ பார் அழகிய மானினங்கள்! மெல்ல வாருங்கள். அவைகளின் பக்கமே செல்வோம்.

(யாவரும் செல்லல்)

[பதினைந்தாங் களம் முடிகின்றது]

களம் 16.

இடம் :- ஸ்ரீரங்கத்தை யடுத்ததோர் சோலை.

காலம் :- மாலை.

நடர் :- இரங்கன், நீலி, கவுந்தி அடிகள், கோவலன், கண்ணகி.

(இரங்கனும், நீலியும் பிரவேசித்தல்)

இரங். அடி வாடி நீலி! நேரமாவுது. என்னடி யோசனை செய்கிறே.

நீலி. யோசனை யென்ன ! குடிக்கும் உன் அளுக்கும், ஆசைப் பட்டு உன்னுடன் வந்தேனே என்னுதான் யோசிக்கிறே.

இரங். கண்ணே ! கவலைப்படாதே ! ராசா மாதிரி நானிருக்க, ராணி மாதிரி நீயிருக்க, இப்பெருங்காடு நம்பளுக்கிருக்க, என்ன குறை. மாங்காய் வேணுமா? தேங்காய் வேணுமா? பனங்கள்ளு வேணுமா? தென்னங் கள்ளு வேணுமா? கொடு உத்திரவு; இக்காட்டை ஒரு பார்வை பார்த்து விடுகிறே. பயல் ரங்கனின் பிரதாபம் அப்பொத்தான் தெரியும்.

நீலி. ஏ ரங்கா ! அப்படின்னு ரெண்டு மொந்தை தென்னங் கள்ளு கொண்டுவா. ஓடு சீக்கிரம்.

இரங். அப்படிச் சொல்லு என் கண்ணுட்டி மகளே. இந்தச் சிங்கத்தை என்னவென்னு நினைச்சே. நாலு மொந்தை கள்ளைக் குடித்து விட்டு, நின்னு, இக்காட்டை நிமிந்து பார்த்தேன்னு, இந்தக் காட்டின் கதி என்ன ஆவும் தெரியுமா. கிர், கிர், கிர், கர், கர், கர், இன்னு சுத்த வேண்டாமா.

நீலி. அட எழவே ! உன் பிரதாபத்தை யார் கேட்டா, எனக்கு ரொம்ப களைப்பாக இருக்கு. போய் ரெண்டு மொந்தை தென்னங் கள்ளும், ஒரு மொந்தை பனங் கள்ளுங் கொண்டுவா. களைப்பு தலை சுத்துது. (கீழே படுத்துக் கொள்ளுகிருள்) சீக்கிரம்.

இரங். அதெல்லாம் சரிப்படாது. நீயும் என்னோடு வந்தாத் தான் கள்ளு கிடைக்கும். இல்லாட்டி, இன்னிக்கு உனக்கு ஒண்ணுமே கிடைக்காது. எழுந்திரு.

(தூக்குகிருன்)

நீலி. அடசனியனே! நீ இப்படியிருப்பேன்னு முன்னடியே தெரிஞ்சிருந்தா....

(மூட்டையை எடுத்தல்)

இரங். (அதைப் பிடுங்கி அவ்விடமே எறிந்து) அடி! மூட்டை யிங்கேயே இருக்கட்டும். கள்ளைக் குடிச்சுட்டு வந்து, எடுத்துக்கிட்டு போவலாம். வா.

(நீலியை இழுத்துச் செல்லல்)

(கோவலன், கண்ணகி, கவுந்தி அடிகள் மூவரும் பிரவேசம்)

கவுந். இது மிகவும் அழகான சோலை. காற்று எவ்வளவு குளிர்ந்து வீசுகின்றது

கண். ஆம் அன்னையே. நாம் இங்குத் தங்கிச் சற்று இளைப்பாறிச் செல்வோமே.

கவுந். அவ்விதமே செய்வோம். அமருங்கள். கோவல! நாம் வழியிற் கண்ட, காவிரியின் வளப்பமும், அதன் இரு கரைகளிலும் ஓங்கி வளர்ந்திருக்கும் பல ஜாதி விருக்ஷங் களும், அவற்றை அழகுபெறச் செய்யும் பசும் புல் தரைகளும், கண்களுக்கு மிகவும் குளிர்ச்சியைத் தந்தன.

கண். அம்மணி! அவைகள் எல்லாவற்றையும்விட, பறவை யினங்களின் அழகிய பாடல்களே என் மனத்தினை முற்றி லும் கவர்ந்தன.

கோவ. ஆம் அக்காரணமே உன்னை இவ்வளவு தூரம் நடக்கச் செய்தது.

கவுந். கண்ணகி! உண்மையில் நீ இன்று இவ்வளவு தூரம், சிரமமின்றி நடப்பாய் என நான் கருதவில்லை.

கண். அன்னையே! தங்கள் அருள் இருக்கும் வரை எனக்கு யாது குறைவு.

கவுந். அருக தேவர் உனக்கு நன்மை செய்வாராக.

(நீலியும் இரங்கனும் பிரவேசம்)

இரங் ஆ! இவங்க யாரு. அடி மூதேவி! இவங்க எவ்வளவு அளகாக இருக்குறாங்க பாரு. இவங்களைப் படைச்ச பிர்மா நம்பளை ஏன் படைச்சான்?

நீலி. ஓகோ! இவங்களைப் பாத்த உனக்கு, நான் மூதேவியாய் விட்டேனே. ஆமாம் மரத்திற்கு மரம் தாவி, கள்ளைக் குடிச்சுப் பல்லைக் காட்டும், உனக்கு வேறு என்னதான் தோணும். அட ரங்கா, ரங்கா.

இரங். அடி பொறுடி. கோபிச்சுக் கொள்ளாதே, பிறவு அவங்கள் நம்பளைப் பரிகாசம் செய்வாங்க. சும்மா இரு, இவர்கள் யாருன்னு விசாரிப்பம்.

(கவுந்தியடிகளை நெருங்குதல்)

கவுந். இவன் எதற்காக இங்கு வரவேண்டும். ஸரி வரட்டும். அப்பா! நீ கருதி வந்த காரியம் என்ன?

இரங். ஏ பாட்டி! உன்னோடு வந்திருக்கும் இவங்கள் யாரு? இவங்களைப் பாத்தாக்கே ரெதியும் மம்மதனும் போலத் தோணுதே.

கவுந். நீ எண்ணியது ஸரி. ஆனால் இவர்கள் இரதியும் மன்மதனும் அல்லர். எனது அன்பார்ந்த மக்கள் ஆவர். வெகுதூரம் நடந்து வந்ததினால் களைப்புடன் இருக்கின்றனர். ஆதலின் நீ அப்பால் உன் வழியே செல். போ.

நீலி. அட ரங்கா! நம்பளை இந்தப் பாட்டி புத்தியில்லாதவங்கனு நினைச்சுட்டா. முதல்லே இவங்கள் தம் புள்ளேங்கன்னு; பிறவு ரெண்டுபேரும் புருச பெண்சாதி என்கிறா. ஒரு வவுத்திலே பிறந்தவங்க எப்படி புருசனும் பெண்சாதியும் ஆவாங்க? கேளு அவளை.

இரங். என் கண்ணே! உனக்கு என்னண்ணாலும், என்னைவிட புத்தி அதிகம். (கவுந்தியடிகளை நோக்கி) அம்மா! என்னே ஏமாற்றினாலும், என் பெண்சாதியை ஏமாற்ற முடியாதுங்க. முதல்லே, இவுங்க ரெண்டுபேரும் புருசனும் பெண்சாதியுன்னு சொன்னீங்க. அப்புறம் உங்க புள்ளேங் கன்னு சொன்னீங்க. ஒரு வவுத்திலே பொறந்தவங்கள் எப்படிப் புருசனும் பெண்சாதியுமாக இருக்கமுடியும்? வயசிலே பெரிய நீங்களே இப்படியும் பொய் பேசறது சரியா?

கண். தாயே! இதென்ன! இவர்கள் இப்படிப் பேசுகிறார்கள். எனக்குப் பயமாக இருக்கின்றதே.

கவுந். பயப்படாதே கண்ணகி! இதோ பார் இவர்கள் கதியை. கற்பின் நெறி அறியாத மூடர்களே! நீங்கள் இருவரும், கிழ நரிகளாகக் காட்டில் திரிவீர்களாக. ஓடுங்கள். (நீலியும், இரங்கனும் கைகளைக் கீழே ஊன்றிய வண்ணம் நரியைப்போல் ஊளையிட்டுக் கொண்டே காட்டில் மறைகின்றனர்.)

கோவ. (கவுந்தியடிகளை வணங்கி) அம்மையே! உமது திருவடிக்கு அநேக கோடி நமஸ்காரம். அம் மூடர்களைத் தாங்கள் அவ்விதம் தண்டித்ததைக் குறித்து மிகவும் வருந்துகின்றேன்.

கண். தாயே! அறியாமற் செய்த பிழைக்குத் தாங்கள் கொடுத்த சாபம் மிகவும் கொடிது. ஆதலின் அவர்கள்மீது இரக்கம் வைத்து, அவர்களுக்கு அவ்வுருவம் நீங்கும் காலத்தையும் உரைத்தருள வேண்டுகிறேன்.

கவுந். குழந்தாய்! உன் அன்பினைப் புகழ்ந்தேன். இப்பொழுது அவர்களைத் தண்டனையின்றி விட்டு விட்டால், மீளவும் இவ்வழி வரும் நல்லோர்க்குத் துன்பம் இயற்றுவார்கள்.

ஆகலின் அவர்கள் உறையூரின் புறத்தேயுள்ள கானில், ஒரு ஆண்டு சுற்றித் திரிந்தபின், முன்னைய உருவத்தைப் பெறுவாராக. சரி. நேரமாகிறது. குழந்தைகளே! புறப்படுங்கள். மேலே செல்வோம்.

(யாவரும் செல்லல்)

[பதினாறுங் களம் முடிகின்றது]

களம் 17.

இடம் :- மதுரையைச் சார்ந்ததோர் சிற்றூரின் பார்ப்பனச் சேரியை அடுத்ததோர் சோலை.

காலம் :- காலை.

நடர் :- கோவலன், கௌசிகர், கண்ணகி, கவுந்தி அடிகள்.

கோவ. (பிரவேசித்து) இரவில் நெடுந்தூரம் நடந்துவந்த களைப்பினால், நம் கண்ணகி மிகவும் களைத்து விட்டனள். பாவம்! கவுந்தியடிகள் இரவின் வழி நடந்த களைப்பை மாற்ற இனிய கதைகள் சொல்லியிராவிட்டால், நாம் இவ்வளவு சடுதியில் இச்சிற்றூரை அடைந்திருக்க முடியாது. ஆ! அடிகளின் துணை நமக்கில்லாவிட்டால் நம் மனைவி கண்ணகியின் கதி என்ன ஆகும். சரி நேரமாகின்றது. காலைக் கடன்களை முடித்துக்கொண்டு, விரைவில் அருகிலிருக்கும் பார்ப்பனச் சேரி சென்று, அங்கு தங்கியிருக்கும் நம் மனைவியையும் அடிகளையும் அழைத்துக் கொண்டு இனி மேலே செல்ல வேண்டும்.

(செல்லுகின்றான் - மாதவியால் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து அனுப்பப்பட்ட கௌசிகர் பிரவேசம்)

கௌ. அந்தோ! நாம் கோவலனை எத்தனை நாளாக இக்காடுகளில் தேடி அலைவது. அலைந்து அலைந்து, என் கால்கள் நோகின்றனவே. ஐயோ! அவனைக்கண்டு அழைத்துச் செல்லாவிட்டால், உத்தமி மாதவியின் கதி என்ன ஆவது. இதுகாறும் கோவலனை நினைந்து நினைந்து மனம் உருகி, வாடி இளைத்திருப்பாளே. ஆ! அதனை நினைக்கும்பொழுது என் மனம் படும் பாட்டை ஈசனே அறிவர். கோவலனைக் காணமுடிய வில்லை என்று சொல்லுவோமாகில் உடனே உயிர் துறப்பாளே. பிறகு அந்த பாபத்திற்கு யார் ஆளாவது. சீ! நாம் புறப்பட்ட நேரம், நம்மை வெகு பாடு படுத்துகிறதே. சரி, எது வரினும் வரட்டும். அவனைப் பாராது திரும்புவதில்லை. ஆ! பொழுது புலர்ந்தது. இனி நம் நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்து வருவோம்.

(மூட்டையை ஒரு புறம் வைத்துச் செல்ல - மற்றொரு புறம் கோவலன் வருத்தத்துடன் பிரவேசித்தல்)

கோவ. ஆ! தெய்வமே! யான் முற்பிறப்பில் புரிந்த பாதகம் இப்பிறப்பில் என்னை இவ்வளவு துன்பத்திற்குள்ளாக்குகின்றது போலும். அந்தோ! பாவியேனால் கற்பிற் சிறந்த கண்ணகி படுந்துயரை நினைக்கவும் மனம் பதைக்கின்றதே. இதுகாறும் என் பிரிவைக் குறித்து என் தாய் தந்தையர், என்ன பாடு படுகின்றனரோ. இவ்வளவு கஷ்டங்களுக்கும் மூல காரணம், பொய்யை மெய்யாகக் காட்டி நடித்த விலைமகள் மாதவி அன்றோ. தெய்வமே! இதுவரை யான் பட்டது போதும். என்னை மன்னியும்! மன்னியும்! (கீழே விழுந்து நமஸ்கரித்து, அமர்ந்து வருந்த - கௌசிகர் பிரவேசம்) கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வது போல், தீமை இன்னதெனஅறிந்தும், அதனில் வீழ்ந்து பின்னர் துயரப்படுவதில் பயன் என்ன?

(மௌனமாய்த் தியானித்தல்)

கௌ. ஸந்தேகமில்லை .... அவர்தான் .... அல்லவே! சீ! இது என்ன! நம் கண்கள் நம்மையே மோசம் செய்கின்றன. (அருகிற் சென்று) அவரைப் போலத் தானே இருக்கின்ருர். இருந்தாலும் சந்தேகமாகவன்ரூே இருக்கின்றது. இவரிடத்தில் கோவலரின் முகவிலாஸமும் அழகும் ஒரு சிறிதும் காணேமே. அருளைப் பறிகொடுத்தவர் போலன்ரூே தோன்றுகிறது. ஒருக்கால் ஆசை மாதவியையும், தாய் தந்தையர்களையும், பிரிந்து, கற்பரசி கண்ணகியுடன், கொடுங்காட்டில் அலைந்து திரிந்ததனுல், மனம் வருந்தி, இளைத்திருப்பாரோ. ஒன்றும் புரியவில்லையே.... எல்லாவற்றிற்கும் நம் ஸந்தேகம் தெளிய இப்படிப் பாடிப் பார்ப்போம்.

(கோவலன் அருகில் உள்ள குருக்கத்தி மரத்தை நோக்கி)

"கோவலன் பிரியக் கொடுந்துய ரெய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்றிவ்
வருந்திறல் வேனிற் கலர்களைந் துடனே
வருந்தினை போலும் நீ மாதவி." (சிலப்பதிகாரம்)

கோவ. ஆ! இதென்ன ஆச்சரியம். என் பிரிவை ஆற்ருது, தன் ஆபரணங்களை களைந்து வருந்தி நிற்கும் மாதவியை, மலர்களும் இலைகளும் உதிர்த்து நிற்கும் மாதவி யென்னும் இக்குருக்கத்தி மரத்திற்கு ஒப்பிட்டனரே. இவர் யாராக இருக்கலாம். நன்கு யோசிக்குங்கால் .... ஸரி இருக்கட்டும். ஐயா! இப்பொழுது தாம் கூறிய கூற்றிற்குப் பொருள் யாது?

கௌ. ஸரிதான், ஸந்தேகமில்லை. கோவலர்தான். ஐயனே! நான் யார் என்று தங்களுக்குத் தெரியவில்லையா.

கோவ. ஆம்! இப்பொழுது தெரிந்து கொண்டேன். கௌசிகரே எங்கு இவ்வளவு தூரம்!

கேள. கோவல! உமது பிரிவால் உம் தாய் தந்தையர் அரிய மணியை இழந்த நாகம் போல் ஒளியிழந்து, மதிமயங்குகின்றனர். சுற்றத்தார் யாவரும் இனிய உயிரை இழந்த யாக்கை போலச் செயலற்றுத் துயர்க் கடலில் வீழ்ந்தனர். உமது பணியாளர்கள் உம்மைத் தேடிப் பல திக்குகளிலும் சென்றனர். ஸ்ரீ ராமனில்லா அயோத்திவாசிகளைப் போல் மனம் வருந்தித் தவித்தனர் நம் புகார் வாசிகள். கோவல! ஓலையை மறுத்து நீர் கூறிய சொற்களை, வஸந்தமாலையினிடம் கேட்ட உத்தமி மாதவி, பதைபதைத்துத் தன் படுக்கையில் வீழ்ந்த சோகம் இன்னும் மறக்கமுடியாது. அந்தோ! நான் எவ்வளவோ அவளைத் தேற்றியும் தன் சோகம் தீர்ந்தாள் இல்லை. கடைசியாக, கண்ணீர் உதிர்த்துக் கொண்டே, ஓர் மடலை எழுதி என்னிடம் கொடுத்து "இதை என் கண்ணின் கருமணி போல்வானுக்குக் காட்டுவாயாக" என்று என்னிடம் ஒப்புவித்தனள். நானும் அதனைக் கொண்டு, உம்மைப் பல விடத்தும் தேடிக் கடைசியாகத் தெய்வத்தின் அருளால் இன்று இவ்விடம் கண்டேன்.

(ஓலையைக் கொடுத்தல்)

கோவ. (வாசித்தல்)

"தேவரீர் திருவடிகளைத் திக்கு நோக்கி நமஸ்கரித்து வணங்குகின்றேன். இதனைத் தமது திருவுள்ளத்தில் கொள்ளல் வேண்டும். பெற்றோர்களுக்குச் செய்ய வேண்டிய பணிவிடைகளை விட்டு, கற்பிற் சிறந்த கண்ணகி தேவியுடனே, இரவில், நம் காவிரிப்பூம்பட்டினத்தைக் கடந்து செல்லுதற்கு, அடியேன் யாது தவறு செய்தேனோ அறியேன். அதனை நினைக்க, நினைக்க நாயேன் ஒன்றும் தோன்றாது தயங்குகின்றேன். குற்றம் என்மீது இருக்குமாயின் — பெருமையுடையீர்! உம்மைப் பன்முறை வணங்குகின்றேன் — தேவரீர் அதனை மனத்தில் கொள்ளாமல், மன்னித்தருள வேண்டுகின்றேன்."

கோவ. ஆ தெய்வமே! மாதவியின் உண்மை மன நிலையறியாது அவள் மேல் ஸந்தேகங் கொண்டு கெட்டேன் — நண்பரே! மாதவி அடைந்த துயரம் நன்கு அறிந்தேன். அவள் உண்மையில் குற்றமற்றவள். அவளது உண்மை நிலை அறியாது, என் ஊழ்வினையின் விளைவால் யானே அவளை வெறுத்துப் பிரிந்தேன். ஆதலின் அந்தணரே! சென்று அவளையும், குழந்தை மணிமேகலையும் தேற்றுவீர். நான் அதிசீக்கிரம் மதுரை சென்று, வாணிபம் செய்து, மீளவும் புகார் வருகின்றேன். மறையவரே! மாதவி எனக்கெழுதிய இக்கடிதத்தை என் பெற்றோரிடம் காட்டி அவர்களையும் தேற்றுங்கள்.

கௌ. பெற்றோர்களிடமா! பிறகு என் கதி என்ன ஆகும் என்பதை மறந்தீரோ.

கோவ. கௌசிகரே! நான், என் பெற்றோர்களுக்கு எழுதும் கடிதம் போலவே மாதவி கடிதத்தின் கருத்தும் அமைந்திருக்கின்றன. அதனால் அவ்வாறு கூறினேன்.

கௌ. (கடிதத்தை வாசித்து) ஆம் ஆம்! தாங்கள் கூறியது உண்மைதான். ஸரி, இதை அவர்களிடம் காட்டுகின்றேன்.

கோவ. மிகவும் ஸந்தோஷம்.

கௌ. ஸரி. நான் வருகிறேன். கண்ணகி க்ஷேமந்தானே.

கோவ. க்ஷேமம் ....

கௌ. தீர்க்காயுஷ்மஸ்த்து!

(கோவலன் வணங்க கௌசிகர் செல்லல்)

கோவ. நம்மைக் காணாமல் கவுந்தி அடிகளும், கண்ணகியும் தேடுவர். சீக்கிரமே அங்குச் சென்று அவர்களை அழைத்துச் செல்லவேண்டும். என் பிரிய மாதவி! நீ குற்றமற்றவள்.

வீணாக உன்மீது ஸந்தேகங் கொண்டு உன்னையும் மணி மேகலையையும் ஏன் பிரிந்தேன். ஆ! ஊழ்வினையை யாரே தடுப்பர்? (கண்ணகியும், கவுந்தியடிகளும் பிரவேசம்)

கண். நாதா! இதென்ன தங்களுடைய திருவதனம் வாடியிருக் கின்றதே.

கோவ. ஒன்றுமில்லை. கண்ணகி! நீ வருந்தாதே. அடிகளே! இனிப் புறப்படலாம் வாருங்கள்.

கவுந். கண்ணகி! இனிக் கவலை வேண்டாம். நாம் மதுரையின் வெகு சமீபத்தில் வந்து விட்டோம். அதோ பார், அழகிற் சிறந்த கோபுரங்களை!

கோவ. கண்ணகி! இனி நாம் உய்வோம். அடிகளே! மதுரை யில் நாங்கள் எங்கு தங்குவது?

கவுந். கோவல! மதுரையில் உனக்கு உற்ற நண்பர்களும், சுற்றத்தார்களும், பலர் இருப்பர். ஆயினும் நீங்கள் இந் நிலையில் அவர்களிடம் செல்லலாகாது. மதுரைக்குக் கீழ்த் திசையில் உள்ள அருக முனிவர் வசிக்கும் பள்ளியில் முதன் முதலில் என்னுடன் தங்கியிருங்கள். பின்னர், நீ மதுரையின் உட்சென்று, வரும் விருந்தை எதிர்கொள்வா ரைக் கண்டு, திரும்பி வந்து உன் மனைவியுடன், அங்கு வேண்டிய காலம் தங்கியிருக்கலாம்.

கோவ. ஆம். அன்னையே! அது தக்க யோசனையே ....

(மூவரும் செல்லல்)

[பதினேழாங் களம் முடிகின்றது]

களம் 18.

இடம் :- அருக முனிவரின் பள்ளி.

காலம் :- பிற்பகல்.

நடர் :- கவுந்தி அடிகள், கோவலன், கண்ணகி. மாதரி.

(கண்ணகி, கோவலன், கவுந்தி அடிகள் மூவரும் சம்பாஷித்தல்)

கவுந். ஆகவே, கோவல! மதுரையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு இவ்வளவு சீக்கிரத்தில் நீ இங்கு வந்ததைப் பற்றிச் ஸந்தோஷ மடைகின்றேன். கோவல! மதுரையின் வளப்பம் எப்படி?

கோவ. அடிகளே! இம்மதுரையின் அழகிற்கும் சிறப்பிற்கும் எங்கள் காவிரிப்பூம்பட்டினம் ஈடாகாது. ஆஹா! பெரும் கோட்டை மதில்களும், அவைகளில் அமைக்கப் பெற்றுள்ள பல வகையான பொறிகளும், பெரு மாளிகைகளையுடைய விசாலமான அழகிய வீதிகளும், உயர்ந்த வேலைப் பாடுகளையுடைய அரண்மனை முதலிய கட்டிடங்களும் தேவாலயங்களும், காதலர் கண்டு தங்கிக் களிப்புறும் பூஞ்சோலைகளும், குதிரை, யானை, ஒட்டகம், ரிஷபம் முதலியவைகளின் மாக்ஷியும், போர்க்கல வணிகர், மணி வணிகர், பொன் வணிகர், அறுவை வணிகர் முதலிய பல வகை வணிகர்கள் பரப்பி வைத்திருக்கும் அங்காடிக் கடைகளும், அந்திக் கடைகளும், நிறைந்துள்ள இந் நகரைப் பார்க்கும்பொழுது, அம்மம்மா! நம் புகாரை இதற்கு ஒப்பிட இயலுமோ. தாயே! உண்மையில் இது தேவேந்திரனின் நகராகவே இருத்தல் வேண்டும்!

கவுந். கோவல! மதுரையின் மாண்பினைப் பலர் கூறக் கேட்டுள்ளேன். என்றாலும் நீ கூறியது நான் நேரில் பார்த்தது போலவே தோன்றுகிறது.

(மாதரி பிரவேசம்)

மாதரி. அம்மையே! அடிபணிகின்றேன்.

கவுந். அம்மா! நீ யார். உனக்கு என்ன வேண்டும்?

மாதரி. அம்மா! நான் ஓர் இடைப் பெண். என் பெயர் மாதரி. பெருமாளுக்கு, பால் சோறு படைத்து வருகின்றேன். வரும் வழியில் இங்குள்ள அடியார்களைக் கும்பிட்டுப் போகலாமென வந்தேன். ஏதோ நான் செய்த புண்ணிய வசத்தால், தங்களைக் கண்டேன். தாயே! தங்களுக்கு நான் ஏதாவது உதவி செய்யக் கூடுமா?

பசுக்களை இரக்ஷித்து, அவற்றின் பயனை மனிதர்களுக்கு அளிக்கும் யாதவர் துவாழ்க்கையில் குற்றம் ஒன்றும் இல்லை. மேலும் இம்முதியவள் நற்குண நற்செய்கை யுடையவளாகவும் காணப்படுகின்றாள். ஆதலின் இவளிடம் கண்ணகியை அடைக்கலமாக வைப்பதில் யாதொரு குறைவுமில்லை. மாதரி! சற்று கவனி! இதோ நிற்கும் இக்கோவலன், இப்பத்தினி கண்ணகியின் காதலன் ஆவன். இவ்விருவரும், காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து இங்கு வந்திருக்கின்றனர். கோவலனின் தந்தையோ, குபேரனை நிகர்த்தவன்; மாசாத்துவான் என்னும் பெயரினன் ஆவன். இவ்வுண்மையை இந்நகர வணிகர் அறிவரேல், கோவலனையும், கண்ணகியையும், எதிர்கொண்டழைத்து உபசரிப்பர். ஆதலின் அவர்கள், இவர்களை இன்னாரென அறியும் வரை நீ இவர்களை அடைக்கலமாக வைத்துக்கொள்ள வேண்டும்.

மாதரி. தாயே! மிகவும் ஸந்தோஷம். இவர்களை என் குழந்தைகளைப் போல் பார்த்துக் கொள்ளுகின்றேன். என் பெண் ஐயை வேறு, இக்கண்ணகி வேறு என நான் நினைக்க மாட்டேன். அம்மணி! அனுப்புங்கள் என்னுடன்.

கவுந். மாதரி! கண்ணகியை ஸாமானியமாகக் கருதி விடாதே. கற்பென்னும் குணத்தை ஆடையாக உடுத்திய இத்தெய்வத்தை யல்லாமல் வேறு சிறந்த தெய்வத்தை நான் காணவில்லை. நீ இவள் விஷயத்தில் கண்ணும் கருத்துமாக இருக்கவேண்டும். மேலும் பெரியோர்கள் ஒப்புவித்த அடைக்கலப் பொருள், முதலில் சிறிதாக இருப்பினும், பிறகு அது பெரிய நலத்தைத் தரும் என்பதை மனதில் வைப்பாய். நேரமாகிறது. இனி சீக்கிரமே இவர்களை உன்னுடன் அழைத்துச் செல்.

மாதரி. அம்மணி! அப்படியே செய்கின்றேன். குழந்தைகளே! வாருங்கள் என் வீட்டிற்கு. உங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்கின்றேன். என் குழந்தை ஐயை, உங்களைக் கண்டால், மிகவும் ஸந்தோஷப்படுவாள். புறப்படுங்கள்.

கோவ. தாயே! தங்கள் அன்பினை என்றும் மறவோம். அடிகளே! வருகின்றோம்.

கவுந். போய் வாருங்கள். அருகதேவனின் அருள் உங்களுக்குண்டாவதாக. (கண்ணகியும், கோவலனும் வணங்கிச் செல்லல்) ஆ கண்ணகி! நீயே பத்தினிப் பெண்.

[பதினெட்டாங் களம் முடிகின்றது]

களம் 19.

இடம் :- மாதரியின் வீடு.

காலம் :- காலை.

நடர் :- கண்ணகி, கோவலன், மாதரி, ஐயை.

(போஜனம் அருந்திய கோவலன், கை கால்களைச் சுத்தம் செய்துகொண்டு அமருகின்றான். கண்ணகி விசிறுகிறாள்)

கோவ. கண்ணே ! நீ இவ்வளவு சீக்கிரம், வெகு இனிமையாகச் சமைத்து, அன்னமிட்டது ஆச்சரியமே.

கண். நாதா ! இவ்வளவிற்கும் காரணம், மாதரி அம்மையும், அவர்கள் பெண் ஐயையுமே ஆவர்கள்.

கோவ. அப்படியா ! உண்மையில் மாதரி முதலியோர் மிகவும் நல்லவர்களாகக் காணப்படுகிறார்கள். கண்ணகி! அவர்கள் எங்கே ?

கண். அரண்மனைக்கு இன்று நெய் கொண்டுபோக வேண்டிய தினமாம். அதனால் தம் சுற்றத்தாரிடத்தில் நெய் சேகரித்துவரச் சென்றிருக்கிறார்கள். (மாதரி பிரவேசிக்க) இதோ அவர்களும் வந்து விட்டார்கள்.

மாதரி. அம்மா ! கண்ணகி ! உன் கணவனுக்கு அன்னம் படைத்தனையா ?

கோவ. ஆம், தாயே ! தங்களுடைய உதவியினால், நல்லுணவு அருந்தினேன்.

மாதரி. மிகவும் ஸந்தோஷம். கண்ணகி ! கவலைப்படாமல் இரு, நான் அரண்மனை சென்று நெய் போட்டு விட்டு, மாலையில் சீக்கிரம் வருகின்றேன். எங்கே ஐயை ?

கண். வெற்றிலை கொண்டுவரச் சென்றிருக்கிறாள். அதோ!

(ஐயை பிரவேசம்)

மாதரி. அடியே ஐயை! நான் இல்லாத சமயத்தில், கண்ணகிக்கு வேண்டிய உதவிகள் செய்து கொண்டிரு. நான் வருகிறேன்.

(மாதரி செல்லல்)

கோவ. ஆ! இவர்களுக்கு யான் என்ன பிரதி உபகாரம் செய்யப் போகின்றேன்.

ஐயை. அக்கா! மாடுகளுக்குத் தண்ணீர் காட்டி வைக்கோல் போட்டுவர உத்திரவு தருகிறீர்களா?

கண். ஸரி. சீக்கிரமாகச் சென்று வா.

(ஐயை செல்லக் கண்ணகி கோவலனுக்குத் தாம்பூலம் அளித்தல்)

கோவ. கண்ணகி! இது என்ன அழகான இடம் கவனித்தனையா! மனதிற்கு அமைதியையும், ஆறுதலையும், ஸந்தோஷத்தையும் கொடுக்கின்றது.... இதற்குக் காரணம், அருகில் உள்ள புல் தரைகளும், நெருங்கிய சோலைகளுமேயாகும்.... பிரியே! இன்றையதினம் சமையல் வெகு நன்றாக இருந்தது. அந்தோ! இதுகாறும், இத்தகைய உத்தமியுடன் வாழாது வீணே என் காலத்தைக் கழித்தேனே. வம்பர்களோடும், வீணர்களோடும், நட்புக்கொண்டு, அவர்களின் பயனற்ற உபதேசங்களையும் நகைப்பையும் இனிதெனக் கொண்டேனே! இவ்வாறு சீலம் தவறி நடந்ததால் அன்றோ, தாய் தந்தையர்களைத் துறந்தேன், பத்தினிப் பெண்ணாகிய உனக்கும் மன வேதனையைத் தந்தேன். என் ஆருயிர்க் காதலியே! அத்தகைய கொடிய பாதகச் செயலை யான் செய்திருந்தும், 'என்னோடு வா' என நான் அழைத்த மாத்திரத்தில், வெறுக்கத் தக்க என்னுடன், நீ ஸந்தோஷத்துடன் வந்து,

எனக்கு இன்பமளித்தனையே! ஐயோ! நான் உனக்கு முன்னம் செய்த துரோகத்தை நினைக்கும்பொழுது என் நெஞ்சம் கலங்குகின்றது. மனம் தடுமாறுகின்றது .... ஆ கண்ணகி! கண்ணகி! என் குற்றத்தை மறப்பாய். மறப்பாய்.

கண். ஆ நாதா! இது என்ன! தாங்களே இவ்விதம் கலக்க முற்றால் அடியாள் என்ன செய்வேன். கடந்ததைக் குறித்து இனி வருந்தி என்ன பயன்? இனி ஆகவேண்டியதைப் பாருங்கள். சீக்கிரமே நம் நகர் சேர்வோம்.

கோவ. ஸரி! கண்மணி! நேரமாகின்றது. உன்னுடைய சீர் அடிச் சிலம்பில் ஒன்றைக் கொடு. நான் அதனைக் கொண்டு போய் விற்று வருகின்றேன்.

கண். இதோ தந்தேன்

(ஓர் சிலம்பைக் கழற்றித் தருகிறாள்)

கோவ. (வாங்கும்பொழுது தவறுகிறது) ஆ இதென்ன கீழே விழுகிறது....

(எடுத்துச் செல்ல எண்ணுதல்)

கண். நாதா! பொறுங்கள். என் மனம் ஏன் இப்படி துயர் அடைகின்றது. உண்மை விளங்க வில்லையே.... காதலா! நாளைக்கு விற்கச் செல்லலாமே.

கோவ. கண்ணே! ஏன் வீண் பிரமை கொள்ளுகின்றாய். எனக்கு ஒரு தீங்கும் நேரிடாது. கவலைப்படாதே. கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வி! அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையும் துணையாகக் கொண்டு, யான் திரும்பிவரும் வரையும், இங்குள்ள ஆய்ச்சியர்களுடன் ஸந்தோஷமாக இருப்பாயாக. போய் வரட்டுமா?

கண். ஸரி போய் வாருங்கள்.... காதலா ! இச்சிலம்பு விலை போயினும் போகாவிட்டாலும், மாலையில் எங்கும் தங்காது இங்கு வந்து விடுங்கள். , ஆ நாதா....

கோவ. கண்ணே! ஒன்றிற்கும் அஞ்சாதே. சீக்கிரமே வருகின்றேன். கடவுள் துணை செய்வார்.

(கோவலன் செல்லல்)

கண். ஆ ! இது என்ன காலம்....

(வருந்திச் செல்லல்)

[பத்தொன்பதாங் களம் முடிகின்றது]

களம் 20.

இடம் :- மதுரையின் ஓர் பெருந்தெரு.

காலம் :- முற்பகல்.

நடர் :- கோவலன், சோமு, பொற்கொல்லன்.

(கோவலன் சிலம்புடன் பிரவேசித்தல்)

கோவ. ஆ தெய்வமே ! இந்நேரம் விலை கூறிப் பார்த்தும், இச்சிலம்பினை ஒருவரும் வாங்குவாரில்லையே. இனி என் செய்வேன்.

(அரண்மனைப் பொற்கொல்லன் சில பணியாளர்களுடன் பிரவேசித்தல்)

போற். சோமு! இன்றைய தினம் அரசியின் வளையல்களைக் கொடுத்து விடலாமல்லவா.

சோமு. கொடுத்து விடலாம். கவலைப்படாதீர்கள்.

கோவ. முதலில் பேசியவரின் நடை உடை பாவனைகளைக் கவனிக்கும் பொழுது, பாண்டிய மன்னவனால் மதிக்கப் பெற்று, பட்டமும் பரிசும் பெற்ற ஓர் பொற்கொல்லனாக இருக்கலாமெனத் தோற்றுகின்றது. (பொற்கொல்லனை அணுகி) ஐயா! வந்தனம். தங்களை நன்கு கவனிக்கும் பொழுது அரசரால் நன்கு மதிக்கப்பெற்ற பொற்கொல்லராக இருக்கலாமோ என எண்ணுகின்றேன். நான் நினைத்தது ஸரியாயின், தங்களிடம் ஓர் விஷயம் தெரிவிக்க விரும்புகின்றேன்.

போற். ஐயா! வணக்கம் பல செய்கின்றேன். தாங்கள் கருதியபடியே, நான் இவ்வூர் நெடுஞ்செழிய மகாராஜால், நன்கு மதிக்கப்பெற்று, பட்டமும் பெற்ற ஓர் பொற்கொல்லனே. தாங்கள் யார்? என்னால் என்ன காரியம் ஆகவேண்டும் என்பதைச் சொன்னால் முடித்து விடுகின்றேன்.

கோவ. நான் இருப்பது காவிரிப்பூம்பட்டினம். இவ்விடம் ஒரு சிலம்பு விற்க வந்திருக்கின்றேன். அதனை விலையை மதிக்க முடியுமோ?

சோமு. ஐயா! பாண்டிய மன்னால் நன்கு மதிக்கப்பெற்ற எங்கள் தலைவரைத் தாங்கள் இவ்விதம் கேட்பது சரியல்ல. அவருக்கு இவைகளில் அதிகப் பழக்கம் உண்டு. மன்னன் மகுடம், இராணியின் அணிகள் முதலியன யாவும் இவர்தான் செய்வது வழக்கம். ஆதலின் மதிப்பிடும் விஷயத்தில் இவர் மிகவும் வல்லவர்.

போற். அன்பரே! எங்கே சிலம்பினைக் காட்டுங்கள் பார்ப்போம்.

கோவ. (பையிலிருந்த சிலம்பினைக் காட்டி) நண்பரே! இது மற்ற சிலம்புகள் போல் அல்ல. அதிக விலையுள்ளது.

பொற். (சிலம்பைப் பெற்று உற்று நோக்கி) ஆ! என்ன அழகிய சிலம்பு .... இச்சிலம்பு அதிக விலை பெறும் என்பதிற் சந்தேகமில்லை. மாணிக்கங்கள், வயிரங்கள் முதலியவைகளை பத்தரை மாற்றுத் தங்கக் கவசத்தில் வைத்துப் பதிப்பித்திருக்கின்றதே. இதன் உள்ளே போடப்பட்டிருப்பது நல் முத்துக்களோ, அல்லது மாணிக்கங்களோ (சிலம்பை ஆட்டிப் பார்த்து) ஆம். மாணிக்கப் பரல்கள் தான் ஸந்தேகமில்லை. அப்படியாயின் இதன் விலையை உள்ளவாறு மதிப்பிடுவோரும், விலை தந்து வாங்குவோரும் இவ்வூரில் யார் இருக்கின்றனர். (மறுபடியும் சிலம்பைக் கோவலனிடம் கொடுத்து) ஐயா! நீங்கள் கூறியவாறே இச்சிலம்பின் விலையை என்னால் மதிப்பிடுதல் முடியாத காரியம். எனினும் நான் அரசரிடம் தெரிவித்து, அவருக்குத் தேவையிருக்கிறதா என அறிந்து வருகின்றேன். அதுவரைத் தாங்கள் தாமதிக்க இசைந்திடில், இதோ நிற்கும் என் பணியாளர்களுடன், சென்று என் வீட்டின் அருகில் இரும் நான் அரசரிடம் சென்று வருகின்றேன்.

கோவ. தங்கள் அன்பிற்கு மிகவும் கடமைப் பட்டுள்ளேன் .... நண்பரே! இச்சிலம்பை அரசரிடமே எடுத்துச் செல்லுங்கள்.

பொற். வேண்டாம். அது தங்களிடமே இருக்கட்டும். நீங்கள் கவலைப்படாதீர்கள். விஷயத்தைச் சரியானபடி அரசரிடம் தெரிவித்து முடிவு செய்து விடுகின்றேன். சோமு! இவரை அழைத்துச் செல். (கோவலன், சோமு, மற்ற பணியாளர்கள் செல்லல்) நமக்கும் சிறிது நல்ல காலம் இருக்கின்றது. இராணியின் அந்தப்புரத்திலிருந்து, நாம் திருடி வந்த சிலம்பு நம்மிடம் உள்ளதென்று பிறர் அறிவதற்குள், இக்காவிரிப்பூம்பட்டினவாசி கொண்டுவந்த

சிலம்பைப்பற்றி அரசனிடம் எடுத்துச் சொல்லி, அவன் மீது திருட்டுக் குற்றத்தைச் சாற்றி விட்டால், பிறகு நம்மை ஒருவரும் கவனிக்க மாட்டார்கள். நம் அதிர்ஷ்ட வசமாக இராணியின் சிலம்பும், இப்பொழுது பார்த்த சிலம்பும் பார்வைக்கு ஒன்றுகவேயிருக்கின்றது. ஆதலின், நம் பக்கமே ஜயம். இதோ செல்லுகின்றேன் அரசரிடம்.

[இருபதாங் களம் முடிகின்றது]

களம் 21.

இடம் :- நெடுஞ்செழிய பாண்டியனின் தனி அறை.

காலம் :- மாலை.

நடர் :- நெடுஞ்செழியன், குடிலன், பிரதாபன், பொற்கோல்லன்.

(பிரதாபனும், குடிலனும் காவல் புரிதல் ; பாண்டியன், யோசனையுடன் உலாவுதல்)

பாண். இதென்ன விந்தை ! எதற்காக நம் மனைவி, நம்மைக்காண மறுத்தனள்.... ஒருக்கால் நேற்று மாலை அழகிய நாடக நங்கையரின், ஆடல், பாடல்களில் நாம் மகிழ்ந்திருந்ததை அறிந்த நம் தேவி, நம்மைச் சந்தேகித்தனளோ. அது உண்மையாயின், நாம் அவளை எப்படித் திருப்பலாம்.

(குடிலன் பிரவேசித்து)

குடி. என் ஆண்டவரே ! நம் பொற்கொல்லர் சமூகத்தை நாடிக் காத்திருக்கிறுர்.

பாண். இப்பொழுது எதற்காக இங்கு வந்தான் மூடன். பிறகு வரச் சொல் அவனை (குடிலன் செல்லல்) .... சீ ! அவன் வந்ததும் நலமே. ஒருக்கால் ஏதேனும் நம் தேவிக்குப் புதிய ஆபரணம் கொண்டு வந்திருப்பான் .... — டேய் ! பிரதாப் ! பொற்கொல்லனை வரச் சொல்.

(பிரதாபன் பொற்கொல்லனை அழைத்து வருதல்)

பொற். எங்கள் அரசே போற்றி ! ஆண்டவரே போற்றி ! போற்றி! (வணங்கி எழுந்து) பிரபோ ! கன்னக் கோலும், கைக்கோலும் இல்லாமலே, மந்திர சக்தியினால் காவலர்களை மயக்கி, நம் தேவியின் ஓர் காற் சிலம்பைக் கவர்ந்த கள்வன், இந்நகர் காவலாளிகளுக்குத் தெரியாமல், மறைந்து வந்து அடியேன் வீட்டிற் கருகில் இருக்கின்றனன்.

பாண். அடே! அச்சிலம்பு தேவியின் சிலம்பென உனக்கு எப்படித் தெரியும் ?

பொற். ஆண்டவரே ! நான் செய்த அச்சிலம்பு, எனக்குத் தெரியாதா. உண்மையில் அச்சிலம்பை தேவி கண்டால், இதுசமயம் எவ்வளவு ஸந்தோஷ மடைவார்கள்.

பாண். ஆம் ஆம் !.... சிலம்பைக் காட்டி அவளைச் சமாதானப் படுத்தலாம். காவலர்களே ! நம் தேவியின் சிலம்பு இவன் கூறிய கள்வனிடம் இருக்குமாயின் அவனை அழைத்துக் கொண்டு --- இல்லை, இல்லை --- கொன்று, அச்சிலம்பினைக் கொண்டு வாருங்கள்.

(காவலர்கள் வணங்கிச் செல்லல்)

பொற். (தனக்குள்) இன்று நரி முகத்தில் விழித்தோம். (செல்லல்)

பாண். சிலம்பைக் கண்டவுடன், நம் தேவியின் கோபமெல்லாம் பறந்துவிடும். ஆம் .... (உலாவுகிறான்)

[இருபத்தொன்றாங் களம் முடிகின்றது]

களம் 22.

இடம் :- பொற்கொல்லன் வீட்டைச் சார்ந்த ஓர் இடம்.

காலம் :- மாலே.

நடர் :- சோமு, கோவலன், பொற்கொல்லன், பிரதாபன்.

கோவ. அரசர் சிலம்பை வாங்கச் சம்மதிக்கின்ருரோ இல்லேயோ.

சோமு. நீங்கள் கவலேப்பட வேண்டாம். அவர் இதனே எப்படியும், தக்க பொன் கொடுத்து வாங்கிக் கொள்வர். இதோ எமது தலேவர்.

(பொற்கொல்லன், பிரதாபன், குடிலன் மூவரும் பிரவேசித்தல்)

கோவ. பொற்கொல்லரே! அரசர் பெருமான் யாது தெரிவித்தனர்?

பொற். நண்பரே ! இதோ நிற்பவர்கள் உமது சிலம்பினே மதிப்பிடுவதற்குப் பாண்டியனுல் அனுப்பப்பட்டவர்கள். ஆதலின் உங்களிடம் உள்ள சிலம்பை இவர்களுக்குக் காட்டுங்கள்.

கோவ. ஆகா. நன்ருகப் பார்க்கட்டும்.

(பொற்கொல்லன் சிலம்பை வாங்கிக் கொண்டு, காவலர்களேத் தனிமையில் அழைத்துச் செல்லல்)

பொற். காவலர்களே ! பார்த்தீர்களா ! இதுதான் நமது மகாராணியாரது சிலம்பின் ஜோடிச் சிலம்பு. சமயத்தைக் கை விடாதீர்கள். பிறகு உங்களுக்குத் தான் ஆபத்து. சீக்கிரமே இவனே முடித்து விட்டு, சிலம்பைக் கொண்டு, அரசரிடம் சேர்ப்பித்து அவர் தம் அன்பினேப் பெறுங்கள்.

பிரதா. என்ன ஐயா! இவருடைய தோற்றமும், பேசும் வார்த்தைகளும், குற்றமற்ற மனத்தினைக் காட்டுகின்றனவே. இவர் ஓர் உயர் குடியில் பிறந்த வணிகராக இருக்க வேண்டும். ஆதலின் இவரைத் திருடன் எனச் சொல்லவும் முடியாது. கொல்லவும் முடியாது. இது அநியாயம்.

குடில. பிரதாப்! என்ன உளறுகிறாய். இவர்கள்தான் கௌரவமான நாகரீகத் திருடர்கள். இத்தகைய பேர்வழிகளைக் கண்டு இனி ஏமாந்து விடாதே. அவ்வளவும் வேஷம்.

பிரதா. குடிலா! நீ யாது கூறினும் ஸரி, அவரைக் "கள்வன்" எனக் கூற என் நா இடந்தா வில்லை.

பொற். எப்படி இடந்தரும்? தன்னை ஓர் பெரிய மனிதன் எனப் பிறர் நினைத்துக் கொள்ளும்படி, வேஷம் போடுதல் திருடர்களுக்கு ஸகஜந்தானே. ஐயா! அவன் என்ன ஸாமான்யப்பட்டவனா! பெரிய வேஷக்காரன். உடல் முழுதும் பொய். நடுப்பகலில், காவலர்களை மயக்கி அரண்மனை புகுந்து, தேவியின் சிலம்பைத் திருடிய இக்கள்வன் களவு நூலை முற்றும் கற்றவனாக இருத்தல் வேண்டும்.

குடில. அப்படியா! இப்பேர்ப்பட்ட கள்வனை, துண்டு துண்டாகச் செய்யவேண்டும். பிரதாப்! இனி என்ன யோசனை.

பிரதா. நண்பர்களே! உங்கள் செய்கைகள் எனக்குப் பிடிக்கவில்லை. ஏன் இவ்வளவு கஷ்டம். அவரை அரசரிடமே அழைத்தேகுவோமே.

பொற். அரசனின் கட்டளையை அதற்குள்ளாகவா மறந்தீர்? என்ன ஐயா நீர். அனுபவமில்லாதவர் போல் பேசுகிறீர். களவின் முறை இன்னதென நீங்கள் அறிவீரா? மாயத் திருடர்களின் இலக்ஷணம் இன்னதெனத் தெரிவீரா.

உமக்கு ஒன்றும் தெரியாது. நான் சொல்வதைக் கேளும். உடனே அவனை முடித்து விட்டு, சிலம்பினைக் கொண்டு செல்லும்.

கோவ. ஐயா நேரமாகின்றது! நான் செல்ல வேண்டும்.

பொற். (அருகில் வந்து) ஐயா பொறுங்கள். இதோ அனுப்பி விடுகின்றேன்.

கோவ. மெத்த ஸந்தோஷம். நீங்கள் அப்படிச் செய்வீர்களே யாயின், நான் தங்களுக்கு என்றும் கடமைப்பட்டிருப்ப துடன், என்னுடன் என் நகர் அழைத்துச் சென்று தக்கபடி மரியாதை செய்வேன்.

பொற். அது பிறகு ஆகட்டும். பொறுங்கள் இதோ வந்தேன். (காவலர்களை யணுகி) நேரமாகின்றது. ஆளைச் சீக்கிரம் முடித்து விட்டு, சிலம்பை எடுத்துச் செல்லுங்கள். அடாடா! ஆள், மறைய மந்திரம் செய்ய ஆரம்பித்து விட்டான். சீக்கிரம். சீக்கிரம். இல்லையேல் மறைந்து விடுவான். பிறகு உங்கள் தலைகளும் தரையில் புரளும்.

பிரதா. இதென்ன கஷ்டம். அரசன் ஆக்ஞையைத் தவறிடில், நம் தலை போய் விடுமே. அவரைப் பார்த்திடில் சத்ய சந்தராகக் காணப்படுகிறார். அவரை எப்படிக் கொல்வது.... சீ! இது அநியாயம்.... ஐயா! நான் அவரைக் கொலை செய்ய மாட்டேன். நான் பெரிய குடும்பத்தை யுடைய வன். அப்பழி எனக்கு வேண்டாம்.

பொற். ஸரி! (குடிலனை நோக்கி) ஐயா! நீர் என்ன சொல்லு கிறீர். நீராவது இக்காரியத்தைச் செய்து பெரும் வாழ்வு அடையப் போகிறீர்களா? அல்லது பிரதாபருக்கு நேரப் போகும் முடிவை விரும்புகிறீர்களா? இரண்டில் ஒன்று சீக்கிரம்.

குடில. சீ ! எனக்கென்ன குழந்தையா, குட்டியா, ஒன்றுமில்லை. அரசனின் அன்பை நான் பெறுகின்றேன்.

(வாளை உருவித் திடீரெனக் கோவலனைக் கொலை செய்கின்றான்)

கோவ. ஆ, சிவமே !

(உதிரம் பெருக உயிர் துறத்தல் - பொற்கொல்லனும், சோமுவும் ஓடுகிறார்கள் - குடிலன் இரத்தக் கறைகளைக் கண்டு, வெருண்டு, பயித்தியம் பிடித்தவன் போல், சிலம்பைக் கொண்டு செல்லுகின்றான்)

பிரதா. அட கொலைகாரப் பாவி ! நீ என்ன கதியடைவாயோ!

(வருந்திச் செல்லல்)

[இருபத்திரண்டாங் களம் முடிகின்றது]

களம் 23.

இடம் :- மாதரி வீட்டின் முற்பக்கம்.

காலம் :- காலை.

நடர் :- மாதரி, ஐயை, கண்ணகி, இராதை.

(கையில் தயிர்ச் சட்டி கொண்டு, வெளி வருகிறாள்)

மாதரி. இது என்ன வியப்பாக இருக்கின்றது. தயிர் கடைந்து வெண்ணெய் எடுக்கலாமெனச் சென்றேன். சட்டியில் பால் உறைய வில்லையே! இத்தனை நாள் இவ்விதம் நேர்ந்ததில்லையே! (ஐயை ஓடி வருகிறாள்)

ஐயை. ஆயா ! இது என்ன ! நமது மாடுகளின் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாகக் கொட்டுகின்றன. கன்றுகளோ துள்ளி விளையாடவில்லை. தாயே ! இங்ஙனம் நடப்பது தீமைக்கு அறிகுறி என்பீர்களே. (கண்ணகி பிரவேசித்தல்)

கண். அம்மா! பொழுது புலர்ந்தது. இந்நேரமாகியும், நேற்றுப் பகல் சென்ற என் காதலர் இன்னமும் வரக் காணேனே. அந்தோ! அவர் என்னை விட்டுப் பிரியும் பொழுதே என்று மிலாதபடி ஒரு பயம் தோன்றியது. இன்னும் இன்று அதிகாலையில் வேறு தீய கனாக் கண்டேன். இவைகளை யெல்லாம் நினைக்கும்பொழுது என் நெஞ்சம் துடிக்கின்றது. அவர் எப்பொழுது வருவார்?

மாதரி. குழந்தாய்! நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். உனக்கும் உன் கணவனுக்கும் ஒரு தீங்கும் நேரிடாது. முன்னம், ஸ்ரீ கிருஷ்ணன் தன் மனைவிகளோடு, ஆடிய குரவைக் கூத்தினை நாம் இதுசமயம் ஆடினால் கண்ணனின் பேரருளினால், நம்முடைய துயரங்கள் யாவும் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கிவிடும். அடி ஐயை! உன்னுடைய சிநேகிதிகளைச் சீக்கிரமே அழைத்து வா. யாவரும் கூத்தாடிக் கும்மியடித்துக் கண்ணனைப் பாடுவோம். கண்ணகி இதைக் கண்டால் மனம் மகிழ்ந்து தன் துயரத்தை மறப்பாள்.

ஐயை. இதோ வந்தேன். (செல்லல்)

கண். அம்மா! தாங்கள் என் மனத்திற்கு உற்சாகத்தை உண்டாக்க நினைத்த போதிலும், என்னையும் அறியாமல், என் மனம் சஞ்சலமடைகின்றதே. தாயே! என் காதலரைக் காணும் வரை என் மனம் விநோதங்களின்மீது நடாது. இதற்கென் செய்வேன்.

மாதரி. அப்படியல்ல கண்ணகி! கண்ணன்மீது ஆடிப் பாடும் குரவையைப் பார். உனக்குச் சர்வ மங்களமும் உண்டாகும். (ஐயை சில பெண்களுடன் பிரவேசித்தல்) குழந்தைகளே! வாருங்கள். இன்று நம் ஆயர்பாடி களையின்றித்

தோன்றுகிறது. ஆதலின் அதை நீக்கவும், உங்கள் சகோதரி கண்ணகி மனம் மகிழவும், நாம் யாவரும், கண்ணனைப் பாடிக் கூத்தாடுவோம். வாருங்கள்.

(யாவரும் கூத்தாடி முடித்தல்

மாதரி. ஏ கோபாலகிருஷ்ணா ! எங்கள் பசுக்கள் துயர் நீங்கவும், எமது துயர் கெடவும், எமது பாண்டிய மன்னன் பகைவரை வென்று வாழவும் அருள்புரிவாய். (வணங்கி எழுந்தபின்) குழந்தைகளே ! நீங்கள் இங்குதானே வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருங்கள். நான் வைகை யாற்றிற்குச் சென்று, சீக்கிரமே நீராடி, திருமாலுக்குப் பால்சோறு படைத்து வருகின்றேன். குழந்தாய் கண்ணகி ! இனி ஒன்றுக்கும் கவலைப்படாதே. நான் வருகின்றேன். (மாதரி செல்லல் - கூத்தாட வந்த பெண்களில் இராதை என்பவள் ஐயையிடம் வந்து)

இரா. அடி ஐயை ! மாட்டிற்கு வைக்கோல் போட்டுவர மறந்தேன். பொறு, இதோ வந்துவிட்டேன். (செல்லல்)

கண். சகோதரிகளே ! நீங்கள் யாவரும் கூடி, கண்ணபிரானைப் பாடி ஆடியது மிகவும் நன்றாக இருந்தது. அவர்தான் நம் துயரங்களை நீக்கவேண்டும்.... ஐயை! இது என்ன, இன்னும் அவரைக் காணோம். மாலையில் எங்கும் தங்காது வந்து விடுகின்றேன் எனக் கூறினாரே ! — (இராதை பதைபதைப்புடன் ஓடி வந்து தன் நட்பினர்களை நோக்கி) ... அடி ஐயை, அடி ருக்மணி, அடி இலக்ஷ்மி.... எல்லாரும் வாருங்கள் இங்கு. ஒரு சமாசாரம். (கண்ணகியைத் தவிர மற்ற யாவரும், இராதையைச்சூழ்ந்து கொள்ளல்)

கண். ஏன் இவள் இவ்விதம் ஓடி வந்தனள்.... ஆ! இது என்ன! நம்மைக் குறிப்பிட்டு ஏதேதோ பேசுகின்றனளே. ஐயோ! இது என்ன! எல்லாப் பெண்களும் என்னை நோக்கி நோக்கி வருந்துகின்றனர் ....

இரா. இப்பொழுதுதான் என் பாட்டி சொன்னாள். நகர முழுதி லும் இப்பேச்சாகவே இருக்கின்றதாம். பாவம்! சண்டா ளர்கள் ! இவர்கள் என்ன கதி யடைவார்கள் ....

ஐயை. இது என்ன ! உண்மையாக இருக்குமா?

(கண்ணகியைக் கவனித்தல்)

கண். ஐயை ! ஏன் என்னை இவ்விதம் கவனிக்கின்றீர்கள்? என்ன சமாசாரம்? என் உடல் நடுங்குகின்றது. நா தடுமாறுகின்றது.... ஐயோ! சிலம்பு விற்கச் சென்ற என் காதலர் எப்பொழுது வருவாரோ.... ஆ ஐயை ! என்ன, நீயும் இன்னும் பேசாமல் இருக்கின்றாய். சிறிது நேரத்திற்குமுன், ஸந்தோஷமாகக் காணப்பட்ட இவர்கள் ஏன் இப்பொழுது வருந்தி நிற்கின்றனர்? யாருக்கு என்ன ஆபத்து நேர்ந்தது? ....

ஐயை. சீ ! நாம் கேட்டதைச் சொல்லி விடுவோம். அக்கா ! நகருக்குட்சென்ற தங்கள் அழகிய காதலரை அரசியின் சிலம்பு திருடிய கள்வன் என - - -

கண். என்ன ! என் காதலரை கள்வன் என....

ஐயை. ஆம் ! சிலம்பு திருடிய கள்வன் எனக் குற்றம் சாட்டிக் கொலை செய்து விட்டனராம்.

கண். ஐயோ ! ஐயோ ! நாதா ! எங்கு சென்றீர் ! (கீழே விழுகிறாள் - எழுந்து) வானோர் புகழும் வீர வள்ளலே ! உம்மைக் கொன்றவன் யாவன்? இதற்காகவோ, பாவி யென்னோடு, சோழநாட்டைக் கடந்து இப்பாழும் பாண்டி நாடு வந்தீர். என் இன்பக் காதலரே ! இப்பாபியையும் உம்முடன் அழைத்துச் செல்லலாகாதா? ஐயோ! இனி ஒன்றுக்கும் உதவாத பாவியானேனே.... இதுவோ

என் விதி.... ஏ கதிரவனே ! நீ அறியாத பொருள் ஒன்றும் இவ்வுலகில் இல்லை. என் பிராண நாதன், அருமைக் காதலன், புகார் நகர வீரன், கொடை வள்ளல், பெரும் நிதி படைத்த செல்வன் — ஓர் கள்வனா !

அ ச ரீ ரி .

"வீரபத்னியே! யானறிய உனது கணவன் கள்வன் அல்லன். அவனைக் கள்வன் என்ற இந்நகரை விரைவில் தீப்பற்றி அழிக்கும்."

கண். இதோ செல்லுகின்றேன் என் கணவனிடம். பிறகு வாதாடுகின்றேன் இம்மன்னனிடம். ஆ! என் காதலனோ கள்வன்! (சென்று கொண்டே) முறை தவறிய அரசனது நகரில் வாழும் கற்புடைய நங்கையர்களே ! என் கணவன் கொண்டு சென்ற என் சிலம்பிற்கு இணையான மற்றொரு சிலம்பு இதோ என் கையிலிருக்கின்றது பாருங்கள். என் காதலர் அதை விற்கக் கொண்டு சென்றார். ஆனால் நீதியற்ற மன்னன், அவரைக் கள்வன் என்று கொன்று விட்டனனே. இந்த அநியாயத்தை யார் பொறுப்பார்கள். இதுவோ நீதியுள்ள நெடுஞ்செழியனின் செங்கோன் முறைமை? உலகில் ஒருவரும் அடையாத துன்பத்தை யன்றோ நான் பெற்றேன். பெண்களே! என் காதலரைக் கண்டு ஒரு வார்த்தையாகிலும் கேளேன் ஆயின் என்னைக் "கள்வன் மனைவி; இவள் தீது செய்தவள்" என யாவரும் அழையுங்கள். ஆ காதலா ! இதோ வந்தேன். இதோ வந்தேன்— (செல்லல்)

ஐயை. அடி மாதா ! இது என்ன அநியாயம்! நம் அரசன் செங்கோல் இம்மங்கைக்கு இறக்குமளவும் துன்பத்தைத் தந்ததே. இனி இதனால் யாது ஏற்படுமோ?

இரா. ஆம். இது என்ன அநீதி! எந்த வழக்கானாலும், நன்கு சோதித்தல்லவோ, தண்டனை விதிக்க வேண்டும். அந்தோ! ஏனோ நம் அரசன் மதி இவ்விதம் மாறியது.... வா. நாழியாகின்றது. நாம் கண்ணகியைப் பின்பற்றுவோம்.

(ஐயை, இராதை நகரவாசிகள் முதலானோர் கண்ணகியைப் பின்பற்றுதல்)

[இருபத்துமூன்றாங் களம் முடிகின்றது]

களம் 24.

இடம் :- பொற்கொல்லன் வீட்டுச் சமீபம்.

காலம் :- முற்பகல்.

நடர் :- கண்ணகி, ஐயை, இராதை, நகர மாந்தர்கள்.

(கோவலன் கொலையுண்டு கிடத்தல் - அருகில் சில ஜனங்கள் நின்று வருந்திக்கொண்டிருத்தல். ஐயையும், இராதையும் பின்தொடரக் கண்ணகி பிரவேசம்)

கண். வழி விடுங்கள் வழி விடுங்கள். (கோவலனைக் கண்டு) ஆ! நாதா! பொன்னான மேனி மண்ணானதோ! எந்தச் சண்டாளன் இப்படிச் செய்தனன்.... ஆ.... நாதா.... (மயங்கி எழுந்து) ஐயோ! இதற்கோ இம்மதுரை வந்தீர்! கண்களுக்கு இன்பமளிக்கும் கட்டழகா! உம்மை இக்கோலத்திலா யான் காணப் பிறந்தேன்! அந்தோ! அடியாளை மாத்திரம் தனியே விட்டுத் தாம் சென்றது

ஞாயமாகுமா! ஆ! மாதரியின் வீட்டை விட்டுப் பிரியும் பொழுது "கண்ணே கலங்காதே, வெகு சீக்கிரத்தில் சிலம்பை விற்று வருகின்றேன்" எனக் கூறிய உம்மை எந்தப் பாதகன் என்னிடம் வரவொட்டாமற் செய்தனன்! சொல்லும். ஐயோ! என் வயிறு எரிகின்றதே. ஆ! குற்றமில்லாக் கோமகனே! கொடையிற் சிறந்த வள்ளலே! உம்மைக் கள்வன் என்று கொன்ற இக் கொடும் பாண்டிய நாட்டில், கற்புடைய பெண்டிரும் இருக்கின்றனரோ? பெரியோர்களும் வசிக்கின்றனரோ? எல்லாம் வல்ல இறைவனும் கருணை புரிகின்றனனோ?....

கோவ. (எழுந்து) கண்ணே! மதிபோன்ற உன்முகம் வாடியதே.

கண். நாதா! நாதா! விண்ணுலகம் சென்றீரோ.* இனித் தாளேன். காரணம் கேளாது என் காதலனைக் கொன்ற பாண்டியனே! என் வயிறு எரிகின்றது. என் கணவன் குற்றமற்றவன் என நீ அறியச் செய்கின்றேன் பார்.

(கண்ணீர் பெருகச் செல்லல்)

[இருபத்து நான்காங் களம் முடிகின்றது]

(* கண்ணகியின் கண்ணீரைத் துடைத்துப் பின் உயிர்விடுதல்)

களம் 25.

இடம் :- பாண்டியன் அரண்மனையில் ஓர் மண்டபம்.

காலம் :- முற்பகல்.

நடர் :- பாண்டியன், கோப்பெருந்தேவி, கண்ணகி, பிரதாபன், அசரீரி.

(பாண்டியன் வீற்றிருக்க, அவன் மனைவி கோப்பெருந்தேவி அருகில் நிற்கின்றாள் - பிரதாபன் வாயிலில் நிற்கின்றான்)

பாண். கண்ணே! பயப்படாதே. நீ கண்ட கனவுகள் யாவை? சொல்.

கோப். நாதா! நான் கண்ட அதிசயக் கனவுகளை என்னவென்றுரைப்பேன்! அவற்றில் ஒன்றில் நமது செங்கோலும் வெண்குடையும் கீழே விழக் கண்டேன். நம் அரண்மனை வாயிலில் உள்ள ஆராய்ச்சி மணியின் ஒலி இடைவிடாது அதிரக் கண்டேன். மேலும் இரவில் வில்லை வானிற் கண்டேன். பகலில் நக்ஷத்திரங்கள் உதிரக் கண்டேன். இன்னும் அஷ்ட திக்குகளும் அதிரக் கண்டேன் நாதா! இத்தகைய தீய சொற்பனங்களால், நமக்கு யாது நிகழுமோ அறியேன்.

(கண்ணகி கோபத்துடன் வாயிலில் பிரவேசம்)

கண். (பிரதாபனை நோக்கி) .... பஞ்சேந்திரியங்களின் உணர்ச்சியற்றவனும், இராஜநீதி அறியாதவனுமாகிய மன்னனின் மண்டபம் காக்கும் காவலனே! கணவனைப் பறிகொடுத்த ஒரு மாது கையினில் சிலப்பொன்றை ஏந்தி வந்திருக்கின்றாள் என உன் அரசனுக்கு உடனே தெரிவி.

பிரதா. (பயத்துடன் அரசனை யணுகி) இராஜ ஸிம்மமே வாழி! வாழி! தம்மைக் காண ஓர் பெண் தலைவிரி கோலமாய் வந்திருக்கிறாள். அவளைக் கண்டால் பிடாரியோ, துர்க்கையோ, அல்லது இரணவீர காளியோ என்ற சந்தேகம் ஏற்படுகின்றது. அவள் தன் கணவனை இழந்தவளாம். கையிற் சிலம்பொன்று வைத்திருக்கின்றாள்.

பாண். பிரதாப்! சீக்கிரமே அவளை உள்ளே விடு ....

பிரதா. தாயே! அரசர் தங்களை வரும்படி கூறினார்.

(கண்ணகி அரசனை அணுகுதல்)

பாண். பெண்ணே! நீ யார்? இக்கோலத்துடன் இங்குற்ற காரணம் யாது?

கண். அரசனே ! தன்னைச் சரண் அடைந்த புறுவின் பொருட்டு தன் தசையை அரிந்து கொடுத்த கருணைச் சிபிச்சக்ரவர்த்தி யும், கன்று இழந்த பசுவின் காரணமாக, தன் ஒரே புதல்வன் மீது தேர்ச் சக்கரத்தைச் செலுத்திய மனுநீதிச் சோழ மன்னனும் அரசாண்ட சோழ நாட்டின்கண் உள்ள காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்பவள் யான். அந்த நகரத்தில் உள்ள பெரும் வணிகரான மாசாத்துவான் என்பவரின் அருமைப் புதல்வரின் மனைவி யான். என் பெயர் கண்ணகி. முன்வினைப் பயனால், உன் நகரில் பொருள்தேட என் கணவனுடன் வந்தேன். வந்த என் கணவர், என் கால் சிலம்பொன்றை விற்கும் பொருட்டு, வந்து கொண்டிருக்கையில், மதியிழந்த உன்னால் கொலை யுண்டு இறந்தனர். காவல ! நீ முறைதவறி என் கணவ னைக் கொன்றது ஏன்?

பாண். பெண்ணே ! பயிர்களை அழிக்கும் துஷ்ட மிருகங்களைக் கொல்வது போல, பிரஜைகளின் பொருளை வஞ்சித்துத் திருடும் கள்வனைக் கொல்வதில் என்ன குற்றம் இருக் கின்றது? ஆம்! மனுநீதி உனக்கென்ன தெரியும்?

கண். காவலனே! பொறு கள்வனைத் தண்டிக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை யான் ஒப்புக்கொள்ளுகின் றேன். தீரவிசாரியாது, நீதியைப் பற்றாது, அநீதியை ஏனோ பற்றினாய்? உன் செய்கை பிழை யென்று காட்டி னால் என் கணவன் உயிரை மீட்டுத்தர உன்னால் முடியுமா? இதோ உன் அறிவின்மையை வெளிப்படுத்துகின்றேன் பார். என் காதலரிடம் நீ பெற்ற சிலம்பினுள் இருக்கும் பரல்கள் நல்ல மாணிக்கங்கள் ஆகும். உனது மனைவியின் சிலம்பினுள் உள்ளவை யாவை? இரண்டையும் கொண்டு வந்து உடைத்துப் பார். உனது மனுநீதியின் திறம் விளங்கும்.

பாண். அது ஸரி! அது ஞாயம்! ஏ பேதாய்! என் தேவியின் கால் சிலம்பினுள் உள்ளது ஆணி. முத்துக்கள் ஆகும். இதோ உன் கணவனிடமிருந்து கொண்டுவரப்பட்ட சிலம்பு இருக்கிறது. (தன் மனைவியிடம் இருந்து பெறுதல்) இதைக்கொண்டு தைரியமிருந்தால் உன் வாக்கை மெய்ப் படுத்துக் கொள்ளலாம். இல்லையேல் உன்னைத் தண்டிப் பேன்.

கண் "தண்டிப்பேன்"..... யாரை? - - - பார்க்கலாம். (அரசன் சிலம்பைப் பெற்று, கையினால் திருகி உடைக்க, எங்கும் பிரகா சிக்கும் நல்மாணிக்கங்கள் சிதறி ஓடுகின்றன - கையில் சில மாணிக்கங்களை அள்ளி) இதோ என் சிலம்பின் மாணிக்கப் பரல்கள்! அறிவற்றவனே! இப்போது யாது கூறு கின்றனை? ....

பாண். ஆகா! வழி வழியாகப் பழியென்பதை யறியாத பாண் டிய குலத்திற்குத் தீராப்பழி விளைத்தேனே! கெட்டேன்! கெட்டேன்! பொற்கொல்லனின் சொல்லைக் கேட்டு முறை தவறிய நானோ அரசன்! கோவலன் கள்வன் அல் லன், அவன் உயிரைக் கவர்ந்த யானே கள்வன். என் உயிரே! நீ இத்துடன் கெடு. (மூர்ச்சித்து வீழ்ந்து இறத்தல்)

கோப். (கண்ணகியை வணங்கி) அம்மையே! இனி யான் என்ன செய்வேன்! நானும், என் காதலரும், இந்நாடும் உன் கற்பின் சக்தியை எதிர்க்க முடியாது. தாயே! எனக்கு மாங்கல்ய பிக்ஷை தரவேண்டும்.

கண். பெண்ணே! நான் என்ன செய்வேன்! யான் ஒரு சிறிதும் தவறில்லாதவள். எனக்கும் ஒன்றும் தெரியாது யாவும் முன் செய்த வினையின் விளைவேயாம். அதை அனுபவித்தே தீரவேண்டும். ஆ! ஒவ்வொன்றை நினைக்கும் பொழுதும் என் உடல் நடுங்குகின்றது, நா தடுமாறுகின்றது. கோபம் அதிகரிக்கின்றது. பெரியோர்களே! கற்பிற் சிறந்த

மங்கையர்கள் பலர் பிறந்த நாட்டில் நான் பிறந்தவள் என்பது உண்மையாயின், நானும் அவர்களில் ஒருத்தி என்பது உண்மையாயின், இம்மன்னனை அழித்ததோடு நில்லாமல் இம்மதுரையையும் அழிப்பேன்.

கோப். ஐயோ! இனி நான் உயிர் வாழேன். (உயிர் நீத்தல்)

கண். ஆ! இவள் அன்றோ உத்தமி. வானவர்களே! மாதவர்களே! மற்றுமுள்ளவர்களே! கேளுங்கள்! குற்றமற்ற என் கணவரைக் கொன்ற இந்நகரை நினைக்கும்பொழுது என் நெஞ்சம் எரிகின்றது.

அசரீரி.

ஏ உத்தமி! உனக்குத் தவறிழைத்தபோது இந்நகரை எரிக்கும்படி அக்னி தேவனாகிய யான் ஓர் உத்திரவு பெற்றிருக்கின்றேன். இந்நகரில் உனக்குப் பிழை செய்தவர் யாவர்?

கண். அந்தணர்களும், அறவோர்களும், பசுக்கூட்டங்களும், பத்தினிப் பெண்களும், மூத்தோர்களும், குழந்தைகளும் ஆகிய இவர்களை நீக்கி மற்ற தீயவர் பக்கமே நீ சேர்க.

அசரீரி.

நின் இஷ்டப்படியே செய்கின்றேன். (எங்கும் நெருப்புச் சுவாலை குபீர், குபீர், எனக் கிளம்புகின்றது)

கண். (கோபத்துடன் நகைத்துவிட்டு) ஆ இனி கணவரைக் காண்பேன். (ஓடுகிறாள் ... எங்கும் "நெருப்பு! நெருப்பு!! ஓடுங்கள்"... என்ற சப்தம் திரைக்குள் உண்டாதல்)

[இருபத்தைந்தாங் களம் முடிகின்றது]

களம் 26.

இடம் :- மதுரையில் ஓர் தெரு.

காலம் :- மாலை.

நடர் :- கண்ணகி, மதுராபதி.

(கண்ணகி கோபத்துடன் பிரவேசித்தல்)

கண். குற்றமில்லா என் கணவனைக் கள்வன் என்று கூறிக் கொலை செய்தவன் நகரம் அக்கினி தேவனுக்கு இரையாயிற்று. இனி நாம், நம் கணவனைக் காணல் வேண்டும். (பின்புறம் மதுரையின் தெய்வமாகிய மதுராபதி தோன்றுகிறாள்)

மதுரா. பெண்ணே ! நீ கொண்ட கோபம் தணிவாய்.

கண். தாங்கள் யார் ? என் துன்பத்தை யறிவீரோ?

மதுரா. குழந்தாய்! இப்பாண்டியனின் குலதெய்வமும், இவ்வூரை முன்பு காவல் செய்தவளுமான மதுராபதி என்னும் தெய்வம் யான். நான் உன் துயரத்தை அறிவேன். உன் கணவன் கொலை செய்யப்பட்டதைக் குறித்து யான் மிகவும் கவலையடைகின்றேன். ஆயினும் அவனுக்கு இத் துன்பம் நேரிட்டதின் காரணத்தைக் கூறுகின்றேன் கேள். இப்பாண்டியன் இதுவரை நீதி தவறினன் இல்லை. பகைவர்கள் இவனைப் பழி கூறுவார்களேயன்றி, இந்நகர மக்கள் ஒருக்காலும் இவனைப் பழி கூற யான் கேட்டவள் அல்லள். அல்லாமல் இவனுடைய முன்னோர்கள் யாவரும் நீதி தவறாது அறநெறியில் நடந்து வந்திருக்கிறார்கள். எனினும் உன் கணவன் இத்தகைய கேடு அடைதற்குக் காரணம் கூறுகின்றேன் கேள். முன்பு சிங்கபுரத்து அரசனிடம் பரதன் என்னும் ஓர் பணியாளன் இருந்தான்.

அவன் தன் ஜன்ம விரோதியாகிய ஓர் உத்தமனை அரச னிடம் அழைத்துச் சென்று, அவன்மேல் பொய்க்குற்றம் சாட்டிக் கொலை செய்வித்தான். இதனைக் கேட்ட அவ் வுத்தமனின் மனைவி மிக வருந்திப் புலம்பி "எமக்கு இக் கொடுமை செய்தோர் மறுபிறப்பில் இதுபோன்ற கொடு மைக்கே ஆளாகுக" எனச் சபித்து உயிர் விட்டனள்.

கண். ஆ ! அவளன்றோ உத்தமி. வாழி பத்தினிப் பெண்கள்! அம்மையே ! சீக்கிரமே மற்றைக் கதையைக் கூறுங்கள். என் நெஞ்சம் துடிக்கின்றது!

மதுரா. பெண்ணே ! பரதனை யாரென்று எண்ணினை! அவனே கோவலன். முற்பிறப்பிற் செய்த வினையின் பலனை இப் பிறப்பிற் பெற்றான். ஆதலின் நீ இனி சாந்தமடைவாய். வீர பத்தினியே! இன்றைக்குப் பதினான்காம் நாளில், நீ உன் கணவனை வானவர் வடிவில் கண்டு மகிழ்வாய்.

கண். அப்படியா ! தாயே ! இனி என் கணவனைக் கண்டால் அல்லாது நான் ஓரிடத்திலும் தரியேன்.

(கை வளையல்களை உடைத்தெறிந்து ஓடுகிறாள்)

மதுரா. ஆ இப்பத்தினியின் கோபம் தணிந்தது. இனி நம் நகரின் நெருப்பும் தணியும். (செல்லல்)

[இருபத்தாறாங் களம் முடிகின்றது]

களம் 27.

இடம் :- திருச்செங்குன்றம் மலைச்சாரல்.

காலம் :- மாலை.

நடர் :- கண்ணகி, குறவர்கள், கோவலன்.

(சில குறவர்களும், குறத்திகளும், பக்ஷிகளை வெருட்டிக் கொண்டும், நீராடிக் கொண்டும் இருத்தல். வாடிவதங்கிய கண்ணகி திடீரென அங்கு வந்து ஒரு வேங்கை மர நிழலில் நிற்கின்றாள். மலைவாசிகள் பயந்து, அவளை அணுகி விசாரித்தல்)

குறவ. எங்கள் வள்ளியம்மையைப் போன்றவரே ! இவ் வேங்கை மர நிழலில், மனம் வாடி நிற்கும் தாங்கள் யார்?

கண். முன் செய்த தீவினையினால் என் கணவனை இழந்தேன். அதனால், மதுரையையும், பாண்டியனையும், பழிக்குப் பழி வாங்கி இங்கு வந்திருக்கின்றேன். (குறவர்கள் பயந்து யாவரும் வணங்குதல்) மதுராபதி கூறியபடி இன்றே நான் என் கணவனைக் கண்டு தொழும் நன்னாள். ஏ தெய்வமே! நான், கணவனே கண்கண்ட தெய்வம், என வழிபடும் காரிகையாயிருந்தால், கற்பின் நெறி தவறாத வள் என்பது சத்தியமாய் இருந்தால், அவரவர் செய்கை களுக்குத் தக்கவாறு பலனை அளிக்கும் முழுமுதற் கடவுள் ஒருவர் உண்டு என்பது உண்மையானால், இன்னே யான் கணவனை யடைவேன். (வணங்கித் தொழுகிறாள் - அச்சமயம் கோவலன் தேவர்கள் சூழ விமானத்தினின்றும் கீழே வருகிறான்)

கோவ. வீரபத்தினியே வருக ! என் வினை நீக்கிய உத்தமியே வருக!

கண். ஆ! கண்டேன்! கண்டேன்! நாதா! நாதா!....

(கோவலனைச் சேருதல் — புஷ்பமாரி பொழிகின்றது. கோவலனும், கண்ணகியும், விமானத்தில் அமர, மீண்டும் அது மேலே செல்லுகின்றது. குறவர்கள் மீண்டும் வணங்குகிறார்கள்.)

பத்தினிப் பெண்டிரின் திருவடிகளே சரணம்.

ஓம் தத் ஸத்!

[நாடகம் முடிகின்றது]

Sri Shanmukha Press, Tanjore.